
உன் பார்வை
ஒரு வரம்
ஆர்.மகேஸ்வ
உன் பார்வை ஒரு வரம் ★ ஆர்.ம
உன் பார்வை
ஒரு வரம்
ஆர்.மகேஸ்வரி



# உன் பார்வை ஒரு வரம்...

# உன் பார்வை ஒரு வரம்...

## 1

காலை நேரத் தென்றலின் தாலாட்டில் கண்விழித்து... அப்போது பிறந்த குழந்தையைப் போல் சிவப்பையும், மஞ்சளையும் குழைத்த செஞ்சாந்து நிறமாய்... பளபளப்பாய்... அழகே உருவாய்... தகதகத்து... மெல்லப் புறப்பட்டுக் கொண்டிருந்தான் சூரியக் குழந்தை!

அந்த பெரிய பங்களாவின் உள்ளேயிருந்து இனிமையாய் சுப்ரபாதம் ஒலிக்க... சாம்பிராணி வாசனையும்...

ஊதுவத்தி நறுமணமும் போட்டி போட்டுக் கொண்டு வெளியே வர....

பங்களாவிற்கு வெளியே காம்பவுண்டைச் சுற்றி யிருந்த தோட்டத்தில் மல்லிகை, முல்லை, ரோஜா மற்றும் இதரச் செடிகளில் இருந்து பூத்த மலர்களின் நறுமணம் பங்களாவிற்கு உள்ளே செல்ல என்று அங்கே காலை நேரம் வெகு ரம்மியமாய் இருந்தது.

'கௌதம்!'

செல்வம் - விஜயலட்சுமி பெற்றெடுத்த ஒரே அருமைப் புதல்வன்!

அழகே உருவாய் பஞ்சணையில் துயில் கொண்டிருந் தான்.

கௌதம் தூக்கத்தில் ஏதோ கனவு கண்டிருந்தானோ... என்னவோ... அவன் முகம் புன்னகையில் இருந்தது. மகனின் அழகை சிறிதுநேரம் வைத்தவிழி அகற்றாமல்... ரசித்த தாய்... பின்னர் அவனை எழுப்பினாள்.

''கௌதம்... ஏய்.. கௌதம்..!''

"என்னம்மா?" தூக்கத்தில் கண் விழிக்காமல் கேட்டான்.

''எழுந்திரிப்பா...''

''இன்று ஞாயிறுதானேம்மா! கொஞ்சம் தூங்கவிடக் கூடாதா? போங்கம்மா... நீங்க சுத்த மோசம்! வாரத்தில் ஆறுநாட்கள் காலில் சக்கரம் கட்டாத குறையாய் உழைக் கிறேன். இன்று கூடவா என்னை தூங்கவிடக் கூடாது? ப்ளீஸ்ம்மா...'' விஜயலட்சுமியிடம் கெஞ்சிக் கொண்டே வேறுபுறம் திரும்பி படுத்துக் கொண்டான்.



''ஏய் கௌதம்... எழப்போறியா? இல்லையா?''

''என் இனிமையான காலைநேரக் கனவை களைத்த அழகான ராட்சசியே!'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து, அமர்ந்து அம்மாவின் முகத்தைப் பார்த்தான்.

விஜயலட்சுமி விடியற்காலையிலேயே எழுந்து... தலைக்கு நீர் ஊற்றி... கூந்தலின் நுனியில் முடிச்சிட்டு... துளி மல்லிகை மலர்ச்சூடி.... மஞ்சள் பூசிய முகத்தில்... அந்த சிவப்புநிற குங்குமம் இன்னும் மங்களத்தை ஏற் படுத்த... மகனிடம் வந்து பாசமாய் 'கண்ணா... தங்கமே... என் வைரமே...' என்று எழுப்பினால்தான் எழுவான்.

காலையில் மட்டும் அம்மாவின் தரிசனம் தேவை. அம்மாவின் முகத்தில் விழிப்பதையே வழக்கமாய் கொண் டிருந்தான்.... நினைவு தெரிந்த நாட்களிலிருந்து!

விஜயலட்சுமி ஏதாவது வேலையாய் இருந்து... இவனும் ரொம்ப நேரம் தூங்கிவிட்டால்... வேலைக்காரியை விட்டு எழுப்பினால்... கௌதம் சமையற்கட்டுக்கே வந்து கத்து வான் ''என்னை நீங்கள் வந்து எழுப்புவதைவிட அப்படி யென்ன முக்கியமான வேலை? இன்று மட்டும் ஏதாவது ஆபீஸில் ஒழுங்காய் வேலை நடக்கவில்லையென்றால்... உங்களை சும்ம விடமாட்டேன். ஆமாம்!''

கௌதமின் கத்தலுக்குப் பயந்தே விஜயலட்சுமிதான் தினந்தோறும் எழுப்புவது. ஞாயிறு வந்தால் அவனே எழும் வரை வந்து எழுப்ப மாட்டாள். ஆனால் இன்று கோவி லுக்கு செல்ல வேண்டுமே என்றுதான் வந்து எழுப்புகிறாள்.

''போங்கம்மா! காலைநேரத்தில்... எந்த மாதிரி ஒரு அழகான கனவு! எல்லாத்தையும் கலைச்சிட்டீங்களே!'' அம்மாவிடம் குற்றச் சாட்டை வைத்தான்.

''எந்த தேவதை உன் கனவில் வந்தாள்? அந்த தேவதை கறுப்பாயிருந்தாளா? இல்லே சிவப்பாயிருந் தாளா?''

''அவள் தான் தூர வந்துட்டு இருந்தாளே! அருகில் வருவதற்குள்... பார்க்க முடியாமல் கெடுத்துட்டீங்களே! எப்படியிருக்கிறாள் என்று எப்படி சொல்வதாம்?''

''நிஜமாகவா கௌதம்?'' அம்மா ஆர்வத்தோடு, ஆச் சரியத்தோடு நம்ப மாட்டாமல் கேட்க...

''போங்கம்மா... உங்களுக்கு வேற வேலையே இல் லையா? நான் உங்க மடியில தலை வச்சி படுத்திருக்க 'செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்று பாரதியார் பாட்டைப் பாட... ரசித்து கேட்டுட்டு இருந்தேன்!''

''கௌதம் உதைப்படப்போறே! பொய் சொல்லாதே! அம்மா கோபித்துக் கொள்ள மாட்டேன்... படுத்திருந்தது என் மடியிலா? இல்ல ஏதாவது அழகான பெண் மடியிலா? நல்லாப் பார்த்தாயா?' விஜயலட்சுமி கேலியாய் கேட்க...

''உங்களுக்கு எப்பொழுதுமே கிண்டல்தாம்மா. உங்க கிண்டலுக்கு ஒரு அளவேயில்லையா? ம்ம்?'' சொல்லி விட்டு எழுந்து, அருகில் வந்து, அம்மாவை கட்டியணைத்து முத்தமிட்டான்.

''என்ன இது சின்னக் குழந்தையாட்டம்? எல்லாம் காலா காலத்தில் நடந்திருந்தா... என்னையா கட்டியணைச்சி முத்தமிட்டுருப்பே? இந்த அவஸ்தையை சமாளிக்க முடி யாமல், உன் பொண்டாட்டியில்ல திண்டாடியிருக் கணும்!''



''கல்யாணத்திற்கும்... பொண்டாட்டிக்கும் இப்போ என்ன அவசரம் வந்தது?'' என்று கௌதம் சிணுங்க...

''ஆமா... ஆமா... இப்போ என்ன அவசரம்? கழுதைக்கு வ்யசாகறாப்போல... வயது முப்பது ஆகுது! என்ன கௌதம்... உன் வயசே நினைப்பில்லையா? அவனவன் உன் ப்ரண்ட்ஸெல்லாம் பொண்டாட்டியும்,. புள்ளையு மாய் போகும்போது என் பெத்த வயிறு...'' என்று முடிப் பதற்குள்.

''எரியுதாம்மா?'' என்றான்.

''ச்சே... ச்சே... பெத்தவயிறு ஏங்குதுடா கண்ணா!''

''என்னுடைய திருமணத்திற்கு இப்போ என்னம்மா அவசரம்? காலையிலேயே பாட ஆரம்பிச்சிட்டீங்களா? இன்றைக்கு முழுக்க... இந்த பாடலும்... புராணமும் நிற்காதே!'' என்று கௌதம் அலுத்துக் கொண்டான்.

''போடா மடையா... உன்னால உன் அப்பாவிடம் திட்டு வாங்குவது நானில்லே!'' கவலையாய் விஜயலட்சுமி கூறினாள்.

''எனக்குன்னு ஒருத்தி இனிமேலா பொறக்கப் போறா? எப்பவோ பொறந்து... ராஜகுமாரியாட்டம்... உன் மரு மகள் வளர்ந்துட்டு இருப்பாள்! கூடிய சீக்கிரமே அவள் என் கண்ணில் படுவா.. அப்போ வந்து அவளைக் கைக்காட் டறேன். பண்ணி வையுங்க. அதுக்குன்னு நேரம், காலம் வரவேண்டாமா அம்மா? எனக்கு பிடிச்சவளா கண்ட உடனே... கல்யாணம் தான்!''

''என்ன மனசோ... இதுவரைக்கும் உனக்கு பிடிச்சவளா ஒருத்தி கூடவா கண்ணில் படவேயில்லை? ம்... ம்...? நாங்களெல்லாம் இதுதான் மாப்பிள்ளை! இதுதான்

பெண்ணுன்னு காட்டினாங்க! உங்கப்பாவை கல்யாணத் துக்கு முன்னாடி வெட்கத்துல பார்க்கவே இல்லை! நானும், உங்கப்பாவும் நல்லா வாழலையா? அருமையான பிள்ளையான... உன்னை பெற்றெடுக்கலையா?'' கௌத மிற்கு பதிலடி கொடுத்தாள்.

''இல்லேங்கல.. ஆனால் அது உங்கள் காலம்மா! இப்போ காலம் எவ்வளவோ மாறிடிச்சி... நாங்க எல்லாம் படிச்சவங்க...! எது நல்லது? எது கெட்டது? என்று நல் லாவே தெரியும். அது தெரியாமல் நிறைய பெற்றோர்கள் வீணா பிள்ளைகளை நினைத்து கவலைப்படறீங்க... ஆமாம். ஞாயிறன்று குறைந்தபட்சம் பத்து மணிவரை யாவது தூங்க விடுவீங்களே! இன்றைக்கு என்னம்மா ஸ்பெஷல்?''

''மறந்து விட்டாயா கௌதம்?'' அம்மா கோபமாய் கேட்க...

''என்னம்மா?'' என்று கேட்டுவிட்டு... ஞாபகம் வந்தவனாய்... பின் வருந்தினான்.

''ஸாரி... ஸாரிம்மா... இன்றைக்கு உங்களுடைய திருமண நாளில்லே! இந்த நல்ல... பொன்னான நாளை மறந்ததுக்கு மீண்டும் வருந்தறேம்மா. என்ன இன்னும் அம்மாவுக்கு கோபம் போகலையா?'' அம்மாவின் கன் னத்தை தாங்கிப் பிடித்துக் கேட்டான்.

''பின்னே?'' அம்மா குறைபட்டாள்.

''இந்த நல்லநாளை மறந்ததுக்கு... மறதிக்கு தண் டனையா கன்னத்தில் போட்டுக்கவா? இல்லை தோப்புக் கரணம் போடவா?'' கௌதம் அப்பாவியாய் முகத்தை வைத்துக் கொண்டு கேட்க... அவனுடைய முன்னுச்சி முடியை ஆசையாய் சிலுப்பினாள்.



''போடா போக்கிரி! சீக்கிரம் போய் குளிச்சி ரெடியாகு. கோவிலுக்கு போகிறோம்!''

''எந்த கோவிலுக்குமா?''

''வடசென்னிமலை முருகன் கோயிலுக்கு!''

''ஏம்மா... இன்று திறந்திருக்குமா?''

''இன்று தைக்கிருத்திகைடா... ரொம்ப விசேஷமாய் இருக்கும். காலண்டர் எல்லாம் பார்ப்பது இல்லையா?''

''படியேற வேண்டிய அவசியமே இல்லை. என்ன ஒரு அழகா... அற்புதமா பாதை போட்டிருக்காங்க பாதை வழியே காரில் போயிடலாம். இல்லையாம்மா?''

''உங்கப்பா... அதற்கெல்லாம் சம்மதிக்க மாட்டார். படியேறிப்போய் முருகனைத் தரிசித்தால்தான் பலன் கிடைக்கும்னு சொல்லுவார்.''

''எப்படியோ ஒரு வழியா அவ்ளோ பெரியமலை மேல்... வெய்யிலில் படியேற்றி... என்னை களைக்க வைத்து... உங்க ரொம்ப நாள் கோபம்... பகை... பழியையெல்லாம் தீர்த்துக்க ஒரு அருமையான வழி கிடைச்சிருக்கு இல்லையாம்மா? போன வருடம் பிசினஸ் வேலையாய் வெளியூர் போயிட்டதால் தப்பித்தேன். இந்த வருடம் வகையா மாட்டிட்டேன்! இங்கேயே இருக்கிற கோவி லுக்கு போய் வந்தால் என்னவாம்?''

''படவா... வயசான கிழவன் மாதிரியில்லே படியேற பயப்படுகிறாய்! துள்ளித்திரியற காலம்! உன் வயசுக்கு ஐந்தே நிமிடத்தில் ஏறி... திரும்ப இறங்கிடலாம்.''

''வாயால் ஈஸியா சொல்லிடலாம். அம்மா... இதுக்கு பழிக்குப்பழி வாங்காமல் விடமாட்டேன். எனக்கும் ஒரு சமய சந்தர்ப்பம் வராமலா போகும்!''

"வாயாடி கௌதம்... சும்மா தொண தொணக்காமல் போய் குளிச்சிட்டு வரும் வழியைப் பார். கரெக்ட் டயமுக்கு சாப்பிடலேன்னா அப்பா உடம்புக்கு தாங்குமா?"

"எனக்காகக் காத்திருக்க வேண்டாம். சாப்பிடச் சொல்லுங்க..."

"இன்னைக்கு உன்னோட சேர்ந்துதான் சாப்பிடணுமாம். நேரம் வளர்த்தாமல்... சமத்தா... சீக்கிரம் வா!" ஆசையோடு கௌதமின் கன்னத்தை கிள்ளி முத்தமிட்டு விட்டு சென்றாள் விஜயலட்சுமி.

கௌதம் அழகன். தலைக் கொள்ளாத அழகிய கருமையான கேசமும்... விரிந்து பரந்த தோள்களும்... நல்ல உயரமாய்... கட்டுமஸ்தான உடல்வாகுடன்... அவனுக்கு அழகுக்கு அழகு சேர்க்கும் அடர்ந்த மீசையுடன்... பளீர் பற்களும்... கூர்மையான பார்வையுமாய் இருப்பவனை கடக்கும் எந்தப் பெண்ணும் திரும்பிப் பாராமலும்... அவன் அழகுக்கு நூற்றுக்கு நூறு மார்க் போடாமலும் போக மாட்டார்கள். அவனின் கம்பீரமானத் தோரணையில் மயங்காத பெண்களே இருக்க மாட்டார்கள்.

சேலத்தை மையமாகக் கொண்டு... ஆத்தூரிலிருந்து சேலம்.. சேலத்திலிருந்து ஈரோடு வரை இவர்களின் வியாபார ஸ்தாபனம், தொழிற்சாலைகள் விரிந்து பரவாத இடமில்லை.

அப்பா செல்வம் சேலத்தில் செல்வம் தியேட்டர், சில்க் பேலஸ், கோல்டு பேலஸ், துவரம்பருப்பு, உளுத்தம் பருப்பு கம்பெனியும்... விஜயலட்சுமியின் பெயரில் ஆறு பஸ்களும் நிறுவி... திறம்பட பார்த்துக் கொண்டிருக்கிறார்.

ஆனால் மகன் கௌதமோ... மேலைநாடுகளுக்கெல்லாம் சென்று, படித்து, முடித்து வந்ததும்... கௌதம்



கம்ப்யூட்டர்ஸ் ஏற்படுத்த மட்டுமே செல்வம் பணம் கொடுத்தார். கௌதம் கார் சேல்ஸ், ஸ்பின்னிங் மில் மூன்று, சேகோ பேக்டரி இரண்டு, சில்க் பேக்டரி ஒன்று, என்ஜினீயரிங் காலேஜ், கௌதம் பில்டர்ஸ், இன்னும் எக்ஸ்ட்ரா... என தனது அயராத உழைப்பால் உயர்ந்திருக்கிறான். மெடிக்கல் காலேஜ் கட்ட ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது.

இத்தனை உயர்ந்த அந்தஸ்தில் உள்ள கௌதமிற்கு தான் திருமணம் செய்து பார்க்க ஆசைப்பட்டனர், பெற்றோர். அவர்களின் ஆசையில் புயல் வீசப் போவது தெரியாமல்!

## 2

பௌர்ணமி நிலவு ஒன்று பூமிக்கு வந்தது போல்... பளிச்சென்று... வைரத்தின் ஒளி வீச்சுடன்... அழகின் இலக்கணமாய் ஹாலுக்கு வந்தாள் கீர்த்தனா.

சாதாரண காட்டன் சேலையிலும் தேவதைக்கணக்காய்... புத்தம் புது மலராய்... மணம் வீசிக் கொண்டு வந்து நின்றாள்.

சமையலறையைப் பார்த்து குரல் கொடுத்தாள்.

"அம்மா... அம்மா...."

"இதோ வந்துட்டேம்மா..." கைகளை முந்தானையில் துடைத்துக் கொண்டு வந்தாள் தாய் தமிழ்ச்செல்வி.

"எனக்கு நேரமாயிடிச்சி... வரவா?" என்ற மகளை ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.

"எங்கேடி... இந்த காலம் கார்த்தால போறே? இன்னைக்கு ஆபீசும் இல்லையே!"

"என்னம்மா மறந்துட்டியா? நேத்து நைட் சொன்னேனே! இன்று தைக்கிருத்திகை. வட சென்னிமலை கோவிலுக்கு போறேன்னு."

"ச்சே! நான் ஒரு ஞாபக மறதிக்காரி. எப்படியோ அந்த சென்னிமலை முருகன் இனிமேலாவது உனக்கு நல்ல புத்தி கொடுக்கட்டும். இந்த வருடமாவது திருமணயோகம் வந்து... சமூக சேவை, நியாயம், தர்மம் எல்லாத்தையும் விட்டு ஒழிச்சிட்டு... உனக்குன்னு ஒரு நல்ல வாழ்க்கை அமைய... அந்த கடவுள்தான் கருணை காட்ட வேண்டும்!" அம்மா கவலையாய் கூறினாள்.

"ஏம்மா... சலிச்சுக்கிறே! நான் இப்போ அங்கே போறது சாமி கும்பிட மட்டும் இல்லை!" புதிராய் பேசினாள் கீர்த்தனா.

"பின்னே?"

"வயதான பெரியவர்கள் எத்தனை பேர் முருகனை தரிசிக்க ஆசைப்பட்டு... படியேற முடியாமல்... தவிச்சிட்டு இருப்பாங்க. அவங்களை எல்லாம் என் ஸ்கூட்டியில ஏத்திட்டு... பாதை வழியா கொண்டு போய் சாமி கும்பிட வைத்து... திரும்ப மலையிறங்க உதவி செய்யத்தான் அங்கே போறதே!"

"சேவை... ம்... சமூக சேவை! உன் வயசுல இருக்கிறவ எல்லாம் கையில ஒண்ணும், வயித்துல ஒண்ணுமா...



புருஷனோட லட்சணமா இருக்க... நீ மட்டும் ஏன்டி வருகிறவனையெல்லாம் விரட்டிகிட்டு... சேவை சேவையின்னு அறிவு கெட்டத்தனமா அலையறே!" தமிழ்ச்செல்வி கோபமாய் கூறினாள்.

"உன் பொண்ணு ஒரு நல்லது செய்தா... உனக்குப் பிடிக்காதே! திட்டாதேம்மா! நான் செய்யும் நல்லதிற்கு புண்ணியமே கிடைக்காது!"

"பிடிக்காம இல்லடி கீர்த்தனா, நீ சேலத்துல இருந்து அவ்ளோ தூரம் ஸ்கூட்டியில போய்... மேலேயும், கீழேயும் மலை ஏறி இறங்கினால்... இந்த மண்டையைப் பிளக்கும் வெய்யிலில் உன் உடம்புக்கு... ஏதாவது வந்துட்டா... என்னால் தாங்க முடியுமா? சொல்லு."

"வயசானவங்களுக்கு செய்யறது கோடி புண்ணியம்மா!"

"புண்ணியமும் வேண்டாம்... ஒண்ணும் வேண்டாம். போக ஆசையானால்... பஸ்ல போயிட்டு உடனே திரும்பிடு" கட்டளையாய் தாய் கூற, தவித்துவிட்டாள் கீர்த்தனா.

"என்னம்மா நீ! நான் செய்யும் அத்தனை நல்லதோட பலனும், உன்னையும்... அப்பாவையும் தான் வந்து சேரும். என்னை ஆசீர்வதிக்கற அத்தனை பேரும்... நீயும், உன்னை பெற்றெடுத்த மகராசனும், மகராசியும் நல்லாயிருக்கணும்னு சொல்லும்போது... என் மனசு குளிர்ந்துடும். அப்போ எவ்வளவு சந்தோஷப்படுவேன் தெரியுமா? மனித ஜென்மமா பிறப்பதே ஒரு தடவைதான்! மனிதர்களுக்கு எந்த நேரத்துல எது வரும் என்று சொல்ல முடியாது. அப்படியிருக்க உயிரோடு இருக்கும் காலம்

வரை... மத்தவங்களுக்கு உபத்திரவம் இல்லாமல்... உதவியா இருந்தால்... என்னம்மா கெட்டுப் போகும்? ம்ம்...?" சாமர்த்தியமாய் பேசினாள்.

"அப்பா வேற ஊர்ல இல்லையே கீர்த்தனா. அவ்ளோ தூரம் வேற பயணம் செய்யனும். உனக்கு ஏதாவது ஒண்ணுன்னா உன் அப்பா என்னை உயிரோடவே விடமாட்டார். தெரியும் இல்லையா? நீயின்னா அவருக்கு உயிர்டி! ஒன்று கிடக்க ஒன்று ஆனால் உன் அப்பாவுக்கு பதில் சொல்ல முடியுமா?"

"அம்மா... நான் தனியா போகல... என்னோட தேவியும் வருகிறாள். எந்த பயமும் வேண்டாம்மா. சீக்கிரம் திரும்பிடறேம்மா. ப்ளீஸ்ம்மா... என் தங்கம் இல்ல... என் செல்ல அம்மா இல்ல!" அம்மாவின் கன்னத்தில் அழுத்தமாய் முத்தமிட்டாள். அம்மாவின் முகத்தை இரு கைகளிலும் ஏந்தி, "ப்ளீஸ்ம்மா..." என்று கெஞ்ச, தாய் இளகினாள்.

"நான் இனிமேல் போகாதடின்னு சொன்னாலும் கேக்கவாப் போறே! கீர்த்தனா... பார்த்தும்மா. நீ வரும்வரை மடியில் நெருப்பை கட்டினாப்போல அவஸ்தையாய் இருக்கும். உன் செல்போனை பத்திரமா எடுத்துக்க... அடிக்கடி போன் பண்ணு.. நான்கு ஐந்து மணிக்கெல்லாம் வர முயற்சி பண்ணுடாம்மா?"

படுக்கை அறையிலிருந்து பாட்டி வந்தாள்.

"நீயும், என் பேத்தியும் பேசிட்டு இருந்ததை கேட்டேன். நீ ஏன் பயந்து சாகறே! என் பேத்திக்கு எதுவும் ஆகாது. கீர்த்தனா செல்லம் ஒருவாட்டி படி ஏறி... இறங்கிடும்மா. அப்போதான் அங்கே சென்ற பலன் கிடைக்கும். என்ன?"

"சரி பாட்டி" தலையசைத்தாள்.



"ஏய் கீர்த்தனா ஞாபகமா உன் ஹெல்மெட்டை எடுத்துக்கோடி!"

"ஞாபகப்படுத்தியதற்கு நன்றிம்மா... நீங்க சொல்லலன்னா மறந்தே போய் இருப்பேன்!" உதட்டை சுழித்து அழகாய் சிரித்தாள்.

"உதைப்படப் போறே நீ! அந்த முருகன் அருளால உன்னை மாலையும் கழுத்துமா பார்க்க எங்களுக்கு சீக்கிரம் கொடுத்து வைக்கணும். வண்டியை மெதுவா ஓட்டிட்டுப் போடி. மலைப் பாதையில திடீர் திடீர்னு வளைவு வரும். அதுவும் இல்லாமல் இன்று நிறைய கூட்டமாய் இருக்கும். ஜாக்கிரதை கீர்த்தனா!"

"நீங்க கவலையேப் படாதீங்கம்மா!"

"அப்பா ஊரில் இல்லாத சமயம். அதை ஞாபகத்துல வச்சிக்கோடி கண்ணு! ஜடையை தூக்கி முன்னால போட்டுட்டு வண்டி ஓட்டு!" என்றாள்.

ஏனென்றால் அவளுக்கு முட்டிக்கும் கீழே அடர்ந்து... நீளமாய்... வளர்ந்த கருங்கூந்தல்... தரையையே பெருக்கக்கூடும். பாட்டிக்கு பேத்தியின் முடி மீது அவ்வளவு அக்கறை. பாட்டியின் பராமரிப்பில் நீண்டு வளர்ந்திருந்த கூந்தலைக் கண்டு யாராவது 'எவ்வளவு நீளம்? எவ்வளவு அடர்த்தி?' எனும் போது கீர்த்தனாவிற்கே பெருமையாய் இருக்கும்.

"சமைக்கலையேடி. என்ன சாப்பிட கொடுப்பது? மதியத்திற்கு வேறு என்ன செய்வாய்?"

"நீ கவலையேப்படாதேம்மா... பொங்கல். புளியோதரைன்னு யாரிடமாவது பிச்சை எடுத்துக்கிறேன்!"

"வாயாடி கழுதை! வாலில்லாதது ஒண்ணுதான் குறை!"

"பைம்மா... ஸீ யூ பாட்டி" கீர்த்தனா ஹெல்மெட்டை மாட்டி புறப்பட... ஸ்கூட்டி சென்ற வேகம் பார்த்து தாயின் மனதில் இனம் புரியாத கவலை சூழ்ந்தது.

# 3

கௌதம் குளித்து முடித்து... கறுப்பு நிற பேண்ட்டும்... ஆகாய நிற சட்டையில் கறுப்பு செக்குடுமாய்... அழகாய் டைனிங் ஹாலுக்கு வந்தான்.

"குட்மார்னிங் அப்பா..." அம்மா அப்பாவின் அருகில் வந்து நின்று "என்னை ஆசீர்வதியுங்கள்" என்று கூறிய மகனை கோபமாய் செல்வம் முறைக்க... அப்பாவின் முறைப்புக்குக் காரணம் தெரியாமல் கௌதம் விழிக்க...

"இது என்ன ட்ரஸ்டா? கோயிலுக்கு போவது போலவா வந்திருக்கே? ம்... போ... போய் பட்டுவேட்டி... பட்டு சட்டையை உடுத்திட்டு வா..." கண்டிப்பாய் கூறினார்.

"அப்பா... சாதாரண சம தரையிலேயே வேட்டியில் தடுக்கி... தடுக்கி விழப் போவேன். நாம் போவதோ மலையில இருக்கிற கோவில். இதுல படியில வேறு நடந்தே போய்... நடந்து திரும்பணும்னு ஆர்டர் வேறே! வேட்டி பழக்கமில்லாததால்... என்னாலெல்லாம் அந்த அவஸ்



தையை தாங்க முடியாது! வெய்யில் வேறு அதிகமாய் இருப்பதால்... உடம்பெல்லாம் எரியும். எனக்கு பேண்ட்... சர்ட்தான் வசதி. சாதாரண நாளில் இதுபோலத்தானே வருவேன்."

"அப்போ கூட்டமிருக்காது. இன்று கூட்டம் பயங்கரமாய் இருக்கும். சொந்தக்காரங்க... நம்ம கடை வாடிக்கையாளர்கள்... நம்ம தொழிலாளர்கள்னு நிறையப்பேர் கண்ணில் படவேண்டும்."

"அப்பா சொல்வது போல கேளேம்பா..." கௌதமைப் பார்த்து அம்மா கெஞ்ச,

"பெரிய சில்க் பேக்டரியை நிர்வகிக்கறவன்... சில்க் பேலஸ்ஸோட முதலாளி... சாதாரண உடையில் வந்தால்... எனக்குதான் அவமானம்! என்னை உன் பிள்ளை அவமானப்படுத்தணும்னே... கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறான்னு நினைக்கறேன் விஜி" என்று செல்வம் தன் மனைவியைப் பார்த்து... எரிந்து விழுந்தார்.

அப்பாவிற்கு கோபம் வந்தால் அவன் மேல் காட்டாமல் அம்மாவிடம்தான் காட்டுவார்.

'பாவம் அம்மா... சந்தோஷமாய் இருக்க வேண்டிய நாளில்... அப்பாவின் திட்டுகளை தாங்க முடியாமல்... துன்பப்பட நேரும்' என்று எண்ணினான்.

அம்மா வேறு கண்களாலேயே கெஞ்ச... உள்ளேப் போய் அவருக்கு பிரியமான பட்டு வேட்டியில் வந்தான்.

"இப்போ... எப்படி மாப்பிள்ளை போல ஜம்முன்னு இருக்கு!" என்று அப்பா... அவன் தோற்றத்தைப் பாராட்ட.....

விஜயலட்சுமி ''சும்மாவே என் பிள்ளை மன்மதன் போல இருப்பான். இந்த ட்ரஸ் ரொம்பவே அசத்துதுடா! ரொம்ப கம்பீரமா... என் கண்ணே பட்டுடும் போல இருக்கே! ஐயோ! இன்று ஊரார் கண்ணெல்லாம் என் பிள்ளை மேலேயே விழப் போவுது. சாயந்திரம் வந்ததும் சுத்திப் போடணும்!'' என்றாள்.

''அம்மா... பையனைப் பற்றி பெருமைப்பட்டுக் கொண்டதெல்லாம் போதும்! ரெண்டு பேரும் என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க...'' என்று அவர்களின் காலில் விழுந்து வணங்கினான்.

''கௌதம்... இப்படி ஒத்தையா கும்பிடுவதை விட்டு... இந்த மன்மதனுக்கு ஏற்ற ரதியாய் ஒரு பெண் மனைவியா வந்து... ரெண்டு பேரும் விழுந்து வணங்கினால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்? அடுத்த எங்களுடைய திருமண நாளுக்காவது எங்கள் ஆசையை நிறைவேத்து வியாப்பா?'' அப்பா கண்கள் பளபளக்க... ஏக்கத்தோடு கேட்க... கௌதமிற்கே பாவமாய் இருந்தது. அதிக கண்டிப்பானவர். அதேபோல் பிள்ளைமேல் அதிக பாசம் வைத்துள்ளார்.

''அவனுக்கு எங்கேங்க நம்ம ஆசை... ஏக்கம்... பரிதவிப்பு எல்லாம் தெரியப் போகுது!'' அம்மா கூற....

''அங்கே சுற்றி... இங்கே சுற்றி கடைசியாய்... என் கல்யாணத்தில் வந்து நின்னுடுங்கம்மா! அதுக்கென்ன இப்போ அவசரம்? நான் நம்ப பிசினஸ்களையெல்லாம்... பெரிய லெவலில் கொண்டு வரணும்... ஏதாவது சாதிக்கணும்! பேர் வாங்கணும்மா!''

''ஏதாவது சாதிச்சிக் காட்டு! ஆனால் இந்த வயசுக்கு இவ்வளவு சாதிச்சதே அதிகம் கௌதம்.''



''அம்மா... உங்களுக்கு சொன்னா புரியாது. பொண்டாட்டி... புள்ளைன்னு ஆயிட்டா... இப்போ உள்ள வெறி, அயராத உழைப்பு எல்லாம் முடியாதும்மா!''

''ஏன்? ஏன் முடியாது? உனக்குன்னு ஒருத்தி வந்துட்டா... எந்த நேரமும் உன் வழியை மறிச்சிட்டு நின்னுடுவாளா? அவளுக்கு புருஷன் மேலேயும்... அவன் செய்யும் தொழில் மேலேயும் அக்கறையும் பக்தியும் இருக்காதா? இப்பவே இருபது தலைமுறைக்கு உட்கார்ந்து சாப்பிடலாம்! இன்னும் பிசினஸ்... பிசினஸ்னு தலையில கட்டிட்டு... ஏன் கஷ்டப்படறே? எங்களுக்கு வயசாகிட்டே போறது உன் கண்களுக்கு தெரியலையா?'' அப்பா வேகமாய் எகிற...

''கௌதம்... நீ எங்களுக்கு திருமணமான உடனே பொறக்கலைப்பா. தவமா தவமிருந்து பத்து ஆண்டுகள் கழித்து பிறந்தவன்! ஞாபகம் வச்சிக்கோ!''

''இதெல்லாம் ஒரு வயசாம்மா? நீங்களும் நானும் ஒண்ணாப் போகும்போது.. என் அக்காவான்னு கேக்கறாங்கன்னா பாருங்களேன்!''

''ஐஸ்ஸா... அதுக்கெல்லாம் மயங்க மாட்டோம். உடம்புல பீபி... ஷுகர்ன்னு எக்கச்சக்கமான நோயெல்லாம் இருக்குடா செல்லம்!'' கொஞ்சலாய் கூறினாள் விஜயலட்சுமி.

''அவன்கிட்ட என்ன கொஞ்சல் வேண்டி கிடக்கு! மெதுவா இந்த வருடம் பெண் பார்த்துட்டு இருந்தா அடுத்த வருடம் முடிச்சிடலாம். வயசும் முப்பத்தி ஒன்று ஆகும். இதுக்குமேல இவனை விட்டுவச்சா... சரிப்பட மாட்டான். செல்வம் பையனுக்கு வயசாகிட்டே போகுது!

எக்கச்சக்கமான பிஸினஸ் செய்யறான். கோடி கோடியா புரளுது. ஆனாலும் ஒரு கல்யாணம்... காட்சின்னு அவனைப் பெற்றவர்களுக்கு கவலையில்லையா? இல்லே ஏதாவது நோயான்னு என் காதுபடவே பேச ஆரம்பிச்சிட்டானுங்க. இவனைப் பெற்ற பாவத்துக்கு... இதையெல்லாம் கேட்டு அவமானப்படணும்னு இருக்கு. ச்சே! இதெல்லாம் என் தலையெழுத்து!'' அப்பா கத்த... அம்மா பரிதாபமாய் விழிக்க... கௌதம் ஒரு மாதிரி குற்ற உணர்ச்சியில் தலைகுனிந்தான்.

'வயதான பெற்றவர்களின் நியாயமான ஆசையைக் கூட நிறைவேற்றாமல்... என்ன பிள்ளை நான்? ச்சே!' தன்னையே நொந்து கொண்டான்.

''சரிம்மா... இனிமேல் பெண்பார்க்கும் படலம் ஆரம்பியுங்க. எனக்குப் பிடிச்ச பெண்ணாக இருந்தால்தான் பண்ணிக்குவேன். என்ன ஓ.கே.வா?''

''உனக்கு பிடிச்ச மாதிரி பெண்ணை.... நீயே செலக்ட் பண்ணிக் கொண்டு வந்து... இதுதான் உங்க மருமகன்னு காட்டினாக் கூட நாங்க ஒத்துக்கறோம்பா... உன் விருப்பத்திற்கு மாறாய் என்னைக்கு நடந்திருக்கோம்... ம்... சொல்லு?'' அம்மா பூவாய் மலர்ந்துவிட்டாள்.

பிசினஸ், பிசினஸ் என்று புராணம் பாடும் கௌதம்... இந்த மட்டும் சம்மதித்தானே என்று சந்தோஷப்பட்டாள்.

''அம்மா... நீ சிரிக்கும்போது எவ்வளவு அழகாய் இருக்கிறாய் தெரியுமா?''

''ஏய் கௌதம்... இவள் சிரிப்புல அன்றைக்கு மயங்கி விழுந்தவன்தான்... இப்போ இவள் கிட்ட மாட்டிகிட்டு



திண்டாடறேன்... அவதிப்படறேன்!'' என்று செல்வம் கூறி ஜோக்கடிக்க...

''பையன் முன்னாடி... உதைப்படப் போறீங்க'' சுட்டு விரல் நீட்டி விஜயலட்சுமி எச்சரிக்க..

''அப்போ அப்பா... உங்ககிட்ட உதைப்படறது உண்மைதானா? என்னையும் இப்படி ஒரு அவஸ்தையில் மாட்டி வைக்க பார்க்கறீங்களேப்பா? உங்க மனைவி கையால் அடிக்கறாங்க... தாங்கிக்கிறீங்க. எனக்கு வருபவள் எதனால் அடிப்பாளோ... சாமி!'' என்று கௌதம் கூறி சிரிக்க...

அங்கே சிரிப்பிற்கு பஞ்சமில்லை. சிரித்துக் கொண்டிருந்தனர்... இந்த சிரிப்பு நிலைக்காது எனத் தெரியாமல்!

## 4

வட சென்னிமலை சேலம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற முருகன் தலங்களில் ஒன்று. ஆத்தூருக்கு அருகில் உள்ளது. அன்று தைக்கிருத்திகை என்பதால் நல்ல கூட்டம்.

படிகளில் மேலே போவோரும்... வருவோரும்!

மலைப்பாதையின் தார்சாலையில் வாகனங்களிலும், நடப்போருமாய் ஏகப்பட்ட கூட்டம்.

கௌதம் பெற்றவர்களை கோவில் வாசலில் இறக்கி விட்டுவிட்டு... காரினை தனியான இடம் தேடி... ஓரமாய் நிறுத்தப் போயிருந்தான்.

செல்வமும் விஜயலட்சுமியும் மகனின் வரவிற்காக ஓரமாய்... ஒதுங்கி... மரத்தடியில் மலைப்பாதை போகும் வழியில் நின்றிருந்தனர்.

ஒரு வயதான பெரியவரை... தனது ஸ்கூட்டியில் இருந்து இறக்கி விட்டுவிட்டு... இவர்கள் இருவரும் நிற்கு மிடம் வந்தாள் கீர்த்தனா.

"ஆன்ட்டி... அங்கிள் மேலே கோவிலுக்கு போக நான் உதவட்டுமா? என் ஸ்கூட்டியில் ஒவ்வொருவராய் கொண்டு போய் விடட்டுமா?" என்று கேட்ட கீர்த்த னாவை ஆச்சரியத்தோடு... அதிசயமாய்... வைத்தவிழி அகற்றாமல்... விஜயலட்சுமி என்ன சொல்வது எனப் புரியாமல் பார்த்துக் கொண்டிருக்க..

"இல்லம்மா.. நாங்களும் கார்லதான் வந்தோம். என் பையன் காரை பார்க் பண்ண போயிருக்கான். மற்ற நாட்களாய் இருந்தால்... காரில் போவோம். இன்று மட்டும் படியில் போவதுதான் வழக்கம்!" செல்வம் கூற...

விழிகளில் ஆச்சரியத்தை தேக்கி...

"வயதான காலத்தில் ஏன் இப்படி கஷ்டப்படணும்? என்ன ஸ்பெஷல் ஆன்ட்டி? தைக்கிருத்திகை என்ப தாலா?' கீர்த்தனா கேட்டாள்.

"இன்று எங்களுக்கு திருமண நாள்!" என்று கூறிவிட்டு... விஜயலட்சுமி வெட்கப்பட...

"விஷ் யூ ஹேப்பி மேரேஜ் டே ஆன்ட்டி" வாழ்த்தி னாள். "ஆன்ட்டி நீங்க வெட்கப்படும்போது... சற்று



கொஞ்ச நேரத்தில் மணமேடைக்குப் போய் தாலிகட்டிக் கற பெண் போலவே இருக்கீங்க!"

"ச்சீய்... போம்மா! ஆமாம்... என்னம்மா இதெல்லாம்?"

"ஏதோ நம்மால் ஆன சின்ன உதவி ஆன்ட்டி. வய சானவங்களுக்கு செய்வது... அந்த தெய்வத்திற்கே செய்த சேவைப் போலத்தானே ஆன்ட்டி. வயதானவர்களை மெல்ல கொண்டுபோய் மேலே விடுவேன். அப்புறம் கீழே இறக்கிட்டு வந்து விடுவேன். என்னால் இவ் வளவுதான் ஆன்ட்டி செய்ய முடியும்!" கைவிரித்து அவள் புன்னகை புரிய...

"இது சின்ன உதவியா? ரொம்ப அழகா இருக்கே! அது போலவே ரொம்ப அழகாக பேசறேம்மா!"

"ஆன்ட்டி... தாகமா இருக்கு! கொஞ்சம் தண்ணீர் கொடுக்கிறீங்களா?" வேகாத வெயிலில் கீர்த்தனா ரொம் பவே களைத்துப் போயிருந்தாள்.

"தண்ணீர் எதுக்கும்மா? ஆரஞ்சு ஜூஸ் இருக்கு... குடிம்மா" என்று பாசமாய் எடுத்து நீட்ட...

"வேண்டாம் ஆன்ட்டி... தாகமா இருக்கு. தண்ணீர் தான் குடிக்கணும் போல இருக்கு!" என்று தண்ணீர் வாங்கி அருந்தினாள்.

"தாங்க்ஸ் ஆன்ட்டி... தண்ணீர் தந்த கைக்கு என் பரிசு!" என்று சொல்லிக்கொண்டே எதிர்பாராத தருணத் தில்... விஜயலட்சுமியின் கையைப் பற்றி முத்தமிட்டாள். "எனக்கு உங்களை ரொம்பவே பிடிச்சிருக்கு ஆன்ட்டி... அங்கிள் உங்களையும்தான்! வரட்டுமா?"

"வெய்யில் பயங்கரமாய் மண்டையைப் பிளக்குது! கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துட்டு... உன் சேவையை

தொடரக் கூடாதாம்மா?" செல்வமே அவள் மீது பரிதாபப் பட்டுக் கூற...

"நோ தாங்க்ஸ் அங்கிள்... பை ஆன்ட்டி." என்று கையசைத்துவிட்டு... ஒரு பெரியவர் வர... அவரிடம் சென்று விவரம் கூறி... வண்டியில் ஏற்றிக் கொண்டு கிளம்பினாள்.

"என்னங்க இந்தப் பொண்ணு முன்னே பின்ன தெரியாத நம்மைப் போய் எவ்வளவு பாசமாய் ஆன்ட்டி... அங்கிள்ங்கிறா! எவ்வளவு ஆச்சரியம்? இப்படியும் ஒரு பெண் இருப்பாளா? நான் இதுவரைப் பார்த்ததில்லேங்க! எவ்வளவு பெரிய மனசு? அவள் தலைமுடியைப் பார்த்தீங்களா? எவ்வளவு நீளம்? விரிச்சிப் போட்டு நடந்தால் வீட்டையே கூட்டத் தேவையில்லை! எவ்வளவு கொள்ளையழகு? என்ன சுறுசுறுப்பு? இப்படி ஒரு சேவை மனப்பான்மை உள்ள அழகான துறுதுறுப்பான பெண்ணையே நான் பார்த்ததில்லேங்க!" நிறுத்தி, பின் கண்கள் பளபளக்க கூறினாள்.

"நம்ம கௌதமோட இவள் இணைந்து நின்றால் எவ்வளவு பொருத்தமாய் இருக்கும்! நம்ம பையனோட நிறத்துக்கும்... அழகுக்கும்... உயரத்திற்கும்... கம்பீரத்திற்கும் ஈடாக இருக்கிறாள்... இல்லையாங்க? ஐயோ.. அவள் பெயரைக் கூட கேட்கலையே! எந்த ஊரோ தெரியலையே!" புலம்பினாள்.

"போதும்.. போதும்... ஏதாவது அழகான பெண்ணை பார்த்தால் நம் பையனோட நிறுத்தி பார்த்துடுவியே! உனக்கு இது ஒன்றைத் தவிர வேற வேலையே இல்லையான்னு இப்போ மட்டும் சொல்லமாட்டேன் விஜி. ஏன்னா



எனக்கும் அந்தப் பொண்ணைப் பிடிச்சிருக்கு! அந்த முருகன் அருள் இருந்தால்... அவளை நம்ம வீட்டுக்கு கொண்டு வரும்!"

அப்போது அங்கே வந்த கௌதம்...

"என்னம்மா... அப்பாவும் நீயும் அப்படி கண்கள் பளபளக்க பேசிட்டு இருந்தீங்க...! என்கிட்டேயும் உங்க சுவாரசியமான நிகழ்ச்சியைச் சொன்னா... நானும் கூட சேர்ந்து ரசிப்பேன் இல்லையா?"

அம்மா சற்று முன் கண்ட பெண்ணைப் பற்றி கூற...

"உங்களுக்கு வேற வேலையே இல்லையா? ஸ்கூட்டியில கொண்டு போய் விட்டு... திரும்ப கூட்டிட்டு வருவது உலக மகா சாதனையா? அப்படியென்ன அது பெரிய்ய்ய உதவி!" கௌதம் நக்கலடிக்க விஜயலட்சுமி வாயை மூடிக் கொண்டாள்.

அப்பாவும் அம்மாவும் இளைஞர்கள் போல் துள்ளிக் குதித்து படியேற... கௌதம் வேட்டியைக் கட்டிக் கொண்டு.. அவஸ்தையாய்... மெதுவாய்... ஏறி முடித்து... நிம்மதியாய் மூச்சுவிட்டான்.

வருடா வருடம் அவர்களுடைய ஜுவல்லரியில் இருந்து... ஏதாவது நகை எடுத்து வந்து... முருகனுக்கு காணிக்கையாய் கொடுத்து விட்டுப் போவது வழக்கம்.

இந்த வருடம் முருகனுக்கு தங்க ஒட்டியாணம் எடுத்து வந்தனர். வெள்ளையும்... சிவப்பும்... பச்சையும் என கற்கள் மினுமினுக்க கொள்ளையான அழகு நெஞ்சை யள்ளியது.

தெரிந்தவர்கள்... சொந்தக்காரர்கள்... தொழிலாளர்கள் என்று ஏராளமான கூட்டம் வேறு! அவர்களுக்கு 'ஹாய்! ஹலோ' சொல்லி புன்னகைத்தது... கௌதமிற்கு கன்னமே வலித்து விட்டது.

வெயில் கொஞ்சம் குறைந்த மாலை நான்கு மணி. ஸ்கூட்டியை நிறுத்திவிட்டு கீர்த்தனாவும்.. தேவியும் படி ஏறத் தொடங்கினர்.

கொண்டு போன உணவு, ஸ்நாக்ஸ், ஜூஸ் அத்தனையும் உண்டு ஓய்வெடுத்து... கௌதமும். அவனைப் பெற்றவர்களும் இறங்க ஆரம்பித்தனர்.

செல்வமும் விஜயலட்சுமியும் ஒருவர் கையை ஒருவர் ஆதாரமாய் பற்றிக் கொண்டு... வேகமாய் இறங்க...

கௌதம் வேட்டியை மடித்துக் கொண்டு இறங்க... வேட்டியை கட்டவும்... அவிழவும்... திரும்ப மடித்து கட்டுவதுமாய் அவதிப்பட்டுக் கொண்டு இறங்கினான்.

திடீரென மடித்து மேலேற்றி கட்டிய வேட்டி... அவிழ்ந்தது தெரியாமல்... காலில் மாட்டி... சிக்கி.. தடுமாறி... கீழே விழப் போனவனை..

மேலேறி வந்த கீர்த்தனா தாங்கிப் பிடித்துக் கொண்டாள். அவனுடைய கட்டுமஸ்தான உடம்பின் பாரம் மொத்தமும் அவள்மேல் விழ.. தாங்க முடியாமல்... ஆனாலும் அவள் உறுதி குறையாமல்... தாங்கிப்பிடித்து அணைத்தாற்போல நிறுத்தி... அவள் விழிகளை மலர்த்தி... விழிகளை விரித்து நோக்க.. அந்த விழியின் அழகில்... விழியின் வீச்சியினைத் தாங்க முடியாமல்... அவள் விழிகளில் பொத்தென்று விழுந்துவிட்டான் கௌதம்!



கீர்த்தனா தொட்டதில் கௌதமின் உடம்பில் புதுவித உணர்வு... மின்சாரம் தாக்கினாற்போல!

''என்ன சார்... பார்த்து வரக்கூடாதா? நான் தாங்கி பிடிக்கலேன்னா உருண்டு இருப்பீங்க! மண்டை உடைந்து போயிருக்கும்!'' பதற்றமாய் மூச்சு வாங்கிச் சொன்னாள்.

அவள் குரல் இனிமையாய்... கீதமாய்... அவன் செவிகளில் ஒலிக்க.. பிடிமானத்திற்காக அவள் தோளைப் பற்றியிருந்தவன்... அவளை விடுத்து தன்னைச் சமாளித்து நின்றான்.

''தாங்க்ஸ்... தாங்க்ஸ்ம்மா...'' என்று கூறினான்.

''இட்ஸ் ஓ.கே.! வேகத்தைவிட விவேகம் பெட்டர் சார்'' என்று சொல்லி அவள் அவனை ஒதுக்கிவிட்டுச் சென்றாள்.

கௌதம் வேகமாய் படிகளில் தாவிக்குதித்து ஓடி வந்ததாக நினைத்து அவள் கூற... தன் இயலாமையை.. நிஜத்தை சொல்ல முடியாமல் தவித்து நின்றான் கௌதம் சில விநாடி! பிறகு... அவளை யார்? என்ன? என்று அறிய நினைத்து..

''மிஸ்.. மிஸ்... உங்க பேர் என்ன?'' என்று இவன் கேட்டதும் காதில் விழாமல் அவள் செல்ல.. அவளின் இடையசைவில்... அவளின் நீண்ட முடி மயில் தோகையாய்... நாட்டியமாட... வைத்த விழி வாங்காமல்... அகற்றாமல் பார்த்துக் கொண்டே இருந்தான்.

பின்னர் இதனால் வரப்போகும் விபரீதம் அறியாமல்!

# 5

காரில் வீடு திரும்பிய போது... விஜயலட்சுமி செல்வத்திடம் ஓயாமல் அந்த ஸ்கூட்டிப் பெண்ணின் அழகையும்... சேவை மனப்பான்மையையும்... சாமர்த்தியமான பேச்சையும்... அவளின் துறுதுறுப்பையும்... மிதமிஞ்சிய சுறுசுறுப்பையும் புகழ்ந்துக் கொண்டே வந்தாள்.

கௌதமோ தன்னை கீழே விழாமல்... தாங்கிப் பிடித்து... அவளின் விழிகளில் விழவைத்து... அவனை விழிகளில் சிறைப்படுத்திய... பெண்ணைப் பற்றியே நினைத்துக் கொண்டு வந்தான்.

இரவு சரியாகவே தொண்டையில் உணவு இறங்கவில்லை. அவளின் நினைவு அவனை வாட்டி எடுத்தது.

''அம்மா... எனக்கு பசிக்கல. அசதியாய் இருக்கு. நான் போய் படுத்துக்கறேன்!'' என்று கெஞ்ச...

''சரி படியேறியது காலெல்லாம் வலிக்கும். அப்படியே கொஞ்சம் தைலம் தேய்ச்சிட்டுப் படுத்துக்கப்பா...'' என்று அம்மா கூறியதற்கு பதில் கூறாமல்... மாடியில் தனது அறையை நோக்கிச் சென்றான்.

''என்னடி என் பிள்ளை கோவிலில் இருந்து திரும்பியதிலிருந்து சரியாயில்லையே! பேயறைஞ்சாப்போல இருக்கானே! ஏதோ சிந்தனையிலேயே இருக்கிற மாதிரி தெரியுதே! ம்... ம்...?''



''உடல் அசதியில அப்படி சோர்ந்து தெரியறான். ஒண்ணும் இருக்காது. எனக்கும் ரொம்ப முடியலங்க.. நான் போய் படுத்துக்கிறேன். சீக்கிரமே நீங்களும் வந்து படுங்க!'' என்று கூறிவிட்டு படுக்கையறையை நோக்கிச் சென்றாள்.

கௌதம் மாடிக்குப் போய் கட்டிலில் விழுந்தாலும் உறங்கவே முடியவில்லை. உடல் அசந்து விட்டது! ஆனால், மனம் முழித்துக் கொண்டு... துள்ளிக் குதித்து... மகிழ்ச்சியில்... உடலை உறங்கவே விடவில்லை!

சதா அந்த முகமும்... கண்ணும் அவனெதிரில் வந்து வதைத்தது. எழுந்தான்.

பால்கனிக்குச் சென்று வானவெளியை வெறித்தான். கண்சிமிட்டும் நட்சத்திரங்களைப் பார்த்து.. ஏக்கப் பெருமூச்சு விட்டான்.

இதுயென்ன புதுவித அவஸ்தை!

அவனும் பார்க்காத அழகிகள் இல்லை. அந்த பெண்களையெல்லாம் பார்த்தபோது ஏற்படாத புதுவித உணர்வு... பதைப்பு... சந்தோஷம்... இந்தப் பெண்ணைக் கண்ட போது மட்டும் ஏன் ஏற்படவேண்டும்?

'ஏய் பெண்ணே... நீ தொட்டதும் உடலெல்லாம் மின்சாரம் பாய்ச்சிய புதுவித அனுபவம்... ஏன் ஏற்படவேண்டும்?'

'அப்படியென்ன அந்த கண்களுக்கு மாயம் இருக்கிறது? ஒரே பார்வையில் உன் விழிகளில் விழவைத்து விட்டாயே! அந்த கண்களுக்கு மட்டும்.. என்னை அப்படியே கட்டிப் போடும் சக்தி... அப்படி ஒரு விந்தை எப்படி வந்தது?'

'இதுவரை எப்பேர்ப்பட்ட அழகியையும் கண்டு மயங்காத மனது... மாயமாய் உன்னைக் கண்டவுடன் விழுந்து விட்டதே உன்னில்!'

'என்னை ஒரே பார்வையால் விழவைத்த நீ யாரடி ரதியே? நீ நல்லவளா? கெட்டவளா?'

'நீ எங்கே இருக்கிறாய்? உன் முகவரி தெரியாமலேயே உன்னுள் தொலைந்து விட்டேனே!'

'என்னுள் பூகம்பத்தை ஏற்படுத்தி... உன்னில் என்னை புதைத்துவிட்டு பூவே... நீ எங்கேயடி இருக்கிறாய்?'

'என்னுள் என் அனுமதியேயில்லாமல்... ரகசியமாய் புகுந்து... என் இதயத்தை கசக்கி பிழிகிறாயே! அரக்கி! இது நியாயமா!'

'என் சுவடே இல்லாமல்... தெரியாமல் உன்னுள் தொலைந்து போனேனே... அது உனக்கு தெரியுமா?'

'உன் பார்வை ஒரு வரமாய்... எனக்கு மீண்டும் கிடைக்க... தவமாய் தவமிருக்கிறேனே... அது உனக்கு தெரியுமா?'

'உன்னை திரும்பவும் காண்பேனா... என் கண்ணம்மா?'

தினமும் காரில் செல்லும் போதும்.. ஆபீஸ் விட்டு திரும்பும்போதும்... சாலையின் இருமருங்கிலும் அவளைத் தேடுவான்.

ஆபீஸ் விட்டு வரும் பெண்கள் கூட்டங்களில் கண்ணை விட்டு அலைமோதுவான். அவளைக் காணாமல் தினமும் தவியாய் தவித்தான். கடைசியில் ஒவ்வொரு நாளும் ஏமாற்றத்திலும்... ஏக்கத்திலும்... அவஸ்தையிலுமாய் கழித்தான்.



இது என்ன பைத்தியக்காரத்தனம்? ஒரு நிமிடமே பார்த்த பெண்... இவ்வாறு அவஸ்தையை... வேதனையைக் கொடுப்பாளா? அவன் தன்னையே நினைத்து வெட்கப்பட்டான்.

ஒருநாள் ஆபீஸிலிருந்து வீட்டிற்கு சீக்கிரமே வந்து விட்டான். அம்மாவுக்கு ஆச்சரியம்!

''என்னப்பா கௌதம்?'' கேட்க..

''சீக்கிரமே வேலை முடிஞ்சிடிச்சிம்மா. அதான்! ஏன் நான் சீக்கிரமே வரக்கூடாதா?''

அம்மா கவலையாய் கூறினாள்.

''என்னடா பேசறே? காலையில் போனால் நைட் பத்து, பன்னிரெண்டுன்னு வீடு திரும்பறே! இதுல பத்தாததுக்கு கருத்தரங்கு... அது இதுன்னு கிளம்பிடறே! உன்னை கண்குளிரப் பார்க்கவே... எப்போதடா ஞாயிறு வரும்னு ஏங்குவேன்! இதில வேற கொஞ்சநாளா உன் முகமே சரியில்லை. சதா யோசனையா.. ஏதோ பறி கொடுத்ததை போலவே தெரியறே! ஏன் கௌதம் உடம்பு சரியில்லையா? இல்லே பிசினஸ்ல ஏதாவது பிரச்சினையா? என்கிட்ட சொல்லக் கூடாதாப்பா?'' கவலையாய் கேட்டாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லேம்மா! நீயா ஏதாவது போட்டு உன்னை வருத்திக் கொள்ளாதே! உன் பிள்ளை பிசினஸில் சிங்கமாக்கும்!'' மீசையை முறுக்கி விட்டு காட்ட... விஜயலட்சுமி சிரித்து விட்டாள்.

''சரி.. சரி... நீ போய் ட்ரஸ் மாத்திட்டு வா. உனக்கு பாதாம் பாலும், சமோசாவும் எடுத்து வரேன்'' என்று அவள் உள்ளே போக....

கௌதமிற்கு உடம்பெல்லாம் கசகசக்க... குளித்து... வேற்று உடை மாற்றி வந்து உட்கார்ந்து... டி.வி.யைப் போட்டு சேனல் மாற்றி சேனலாய் வைக்க எதுவும் பிடிக் காமல் போகவும் சன் மியூசிக் போட்டான். ஆறுமணிக்கு வரும் 'அன்பே... அன்பே...' லைவ் ஷோ.

காதலர்கள் மட்டுமே கலந்து கொள்ளும் இந்த நிகழ்ச் சியை நான்கைந்து முறை பார்த்திருக்கிறான். நீங்க யாரை காதலிக்கறீங்க? அவர்களை எங்கு பார்த்தீர்கள்? பெயர் என்ன? உங்களுக்கு அவர்கள் மேல் எப்படி எதனால் காதல் வந்தது? எனக் கேட்பதையும்... அதற்கு பதிலளிப் பவர்களையும் முட்டாள்கள் எனத் திட்டுவான். அந்தரங் கத்தை அரங்கேற்றும் அற்பர்கள் என்று நினைப்பவ னுக்கு... அந்த லைவ் ஷோ இன்று சுவாரசியமாய் இருந்தது.

அவன் கை தானாகவே தனது செல்லை எடுத்து நம் பரை ட்ரை பண்ணியது. உடனே லைனும் கிடைத்தது.

''ஹலோ இது அன்பே அன்பே நிகழ்ச்சி.. இந்த நிகழ்ச்சி யில் நீங்கள் பங்கு பெற்றதற்கு சந்தோஷம். நீங்க யார் பேசறது?''

''........................''

''யார் பேசறது? ஹலோ... ஹல்லோவ்... லைன்ல இருக்கீங்களா?'' எதிர்முனைக் காம்பியர் கொஞ்ச...

ஒருவழியாய் சமாளித்து பேசினான்.

''ஹலோ..''

''உங்க பேர் சொல்ல முடியுமா?''

''ஸாரிங்க...''

''ஓ.கே.... எங்கே இருந்து போன் பண்றீங்கன்னு சொல்லலாமில்லே சார்?''



''சேலம்...''

''மாங்கனி நகரா? என்ன பண்றீங்க?''

''பிசினஸ். எங்க கம்பெனி விளம்பரங்கள் உங்க சேன லில் நிறைய வரும். ஆனால் என்னை வெளிப்படுத்திக்க விரும்பலே...''

''பெரிய பிசினஸ் மேன்னு சொல்லுங்க....! உங்க பிசியான நேரத்தில் எங்க நிகழ்ச்சியெல்லாம் பார்க்கக்கூட நேரமிருக்குமா?'' காம்பியர் தேவையில்லாமல் சிரிப்புடன் கேட்க...

''பொய் சொல்லமாட்டேன். இதுவரைக்கும் நாலைந்து முறை மட்டுமே பார்த்திருக்கேன்!''

''ஓ.கே... நீங்க யாரை லவ் பண்றீங்க? அந்த லக்கி கேர்ள் யாருன்னு சொல்ல முடியுமா?''

''அவள் பேரெல்லாம் தெரியாது! கொஞ்ச நாள் முன்பு பார்த்தேன். ஒரே பார்வைதான்! ஒரு நிமிடம்கூட அவளைப் பார்க்கவில்லை. அவளை திரும்பத் திரும்ப.. என் வாழ் நாள் முழுக்கப் பார்த்துகிட்டே இருக்கணும் போல இருக்கு! பிசினஸ்ல என் மனசை முழுமூச்சா செலுத்தி இருந்த வனை.. ஒரே பார்வையால் வீழ்த்திவிட்டாள். அவளை காண்பேனோ... மாட்டேனோ தெரியலேம்மா...''

''கவலையேப் படாதீங்க சார். உங்கள் நெஞ்சிலும் நினைவிலும் நின்றவர்கள் திடீரென கண்முன்னே வந்து நிற்பார்கள். அவர்களை விரைவில் காண இறைவனை வேண்டிக் கொள்கிறேன். என்ன பாடல் வேண்டும்? யாருக்கு ப்ரசண்ட் பண்ணலாம்?''

''அந்த முகவரியே தெரியாமல்... என்னுள் நுழைந்த என்னவளுக்காக 'பார்த்த முதல் நாளே' சாங் வேண்டும்.''

"பாட வருமா? ப்ளீஸ்.. ப்ளீஸ் பாடுங்களேன்."

அவன் பாட...

"ஹா... ஸ்வீட்டா... சூப்பரா இருந்தது சார் உங்க வாய்ஸ்! நீங்க கேட்ட அந்த பாடல் வந்துகிட்டு இருக்கு கேட்டு... என்ஜாய் பண்ணுங்க! பை... பை!"

நாட்கள் செல்லச் செல்ல அவளை இனி எங்கே காணப் போகிறோம்? என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு.. எக்கச்சக்கமான வேலையின் சுமையால் அவளை மறந்தே விட்டான்.

அவனின் முன்பு அவள் வந்து புயலாய்.. பூகம்பமாய் தாக்கப் போவது தெரியாமல்!

## 6

மொட்டை மாடியில்... வெறும் தரையில் படுத்து... வானத்தில் உள்ள நட்சத்திரக் கூட்டங்களையும், நிலவையும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தவளை.. "கீர்த்தனா... இங்க வாம்மா" என்ற குரல் கேட்டு எழுந்து போனாள்.

"அப்பா வந்தாச்சி... சாப்பிட வாம்மா..." என்று தமிழ்ச்செல்வி அழைக்க.. ஓடிப்போய் டைனிங் டேபிள் முன்பு அமர்ந்து தட்டில் விழுந்த இட்லியை வேகமாய் உண்டாள்.

"கீர்த்தி... பசிச்சா சாப்பிடறதுக்கு என்னடா? எனக்காக.. எதுக்காக பட்டினி இருக்கணும்? இனிமேல் இதுபோல்



முட்டாள்தனமான வேலையெல்லாம் செய்யாதே! ஏய் தமிழ்... உனக்கு எங்கடி போச்சி புத்தி? அவளை சாப்பிட வைத்தால் என்னவாம்?"

"இப்போ திருப்தியாடி...! எனக்கு இவர்கிட்ட இருந்து திட்டு வாங்கி வைக்கலேன்னா... உனக்கு தூக்கமே வராதே" என்று அவளைப் பார்த்து எரிந்து விழுந்துவிட்டு... கணவரைப் பார்த்து கூறினாள்.

"நான் சொன்னேன். அவள் கேட்கலே! உங்களுக்கெல்லாம் நான் என்றால் இளப்பம்?" என்று கண்ணீர் சிந்த..

"சரி... சரி... கண்ணீர்விட ஆரம்பிச்சிடாதே! எங்களுக்கெல்லாம் நீச்சல் தெரியாது என்பதை மனதில் வைத்துக் கொள்! என்னடா கீர்த்தி?" அப்பா ஜோக்கடிக்க...

"அம்மா.. நாளைக்கு விடியற்காலையிலே எழுந்து எனக்காக வேகமாக சமைக்கணும்னு அவசியமில்லே!" கீர்த்தனா கூற... அப்பாவும் அம்மாவும் புரியாமல் பார்க்க..

"ஏன் கீர்த்தனா? ஆபீஸ் என்ன லீவா?"

"இல்லேம்மா.. வேலையை ராஜினாமா செய்துட்டேன்!" சாதாரணமாக.. கீர்த்தனா சொல்ல.. அம்மாதான் வேகமாய் கத்தினாள்.

"என்னடி இது! ஒரு இடத்திலும் நிலைச்சி நிற்காம இருந்தவ.. ஏதோ ஒரு வருடமா இந்த கம்பெனியில் குப்பை கொட்டறாளேன்னு நேற்றுதான் நினைச்சி சந்தோஷப்பட்டேன். என் பாழாய்ப்போன நினைப்புல மண் அள்ளிப் போட்டுட்டியே!" என தமிழ்ச்செல்வி புலம்பிக் கொண்டிருக்க...

"ஏய் தமிழ், உன் புலம்பலை நிறுத்துடி! நம்ம பொண்ணு காரண காரியம் இல்லாமல் எதுவும் செய்யமாட்டாள்!

என்னடாம்மா? ஏன் இப்படி செய்தாய்? ம்?'' என்று அப்பா மெதுவாய் கேட்டார்.

''பின்னே என்ன டாடி? இவ்வளவு நாட்களாய் அங்கே நடக்கும் அக்கிரமங்கள் தெரியலே! நேற்று எம்.டி.யோட பி.ஏ. லீவ். அதனால் என்னை அழைத்து... என்னிடமே சில பொய் கணக்குகளைக் கூறி கம்ப்யூட்டர்ல டைப் பண்ணி எடுத்துட்டு வரச் சொல்றான். அங்கே விற்பனை அமோகம்! லாபம் எக்கச்சக்கம்! ஆனால் அதில் பாதியைக்கூட காட்டல. கேட்டா அரசுக்கு வரி கட்டியே முடியலேன்னு பாடறான். இது அப்பப்போ வரி ஏய்ப்புக்காக நடக்கும்போல! எனக்குத் தெரியல. என்னையே அப்படி ஒரு திருட்டுக்கு துணைப் போகச் சொன்னா... எனக்கு பிடிக்குமா? உடனே போய் ராஜினாமா கடிதம் டைப் பண்ணிட்டு வந்து... முகத்துல விட்டெறிஞ்சுட்டு வந்துட்டேன்!'' அவள் கூறி முடித்தாள்.

''வியாபாரம் செய்யறவங்க... அப்படி இப்படின்னு இருப்பாங்கதான். அதையெல்லாம் கண்டும் காணாமல் போகாம... திடீர்னு ராஜினாமா செய்துட்டு வந்தால் நல்லவா இருக்கும்!'' அம்மா வெடித்தாள்.

''சரி விடு தமிழ்! அவளுக்கு இந்த பொய்.. குறுக்கு வழியெல்லாம் பிடிக்காது. எம் பொண்ணை அப்படியா வளர்த்திருக்கேன். என் பொண்ணு நேர்மையின்... நியாயத்தின் மறுபிறவிடி!'' என்று சொல்லிவிட்டு... பெருமையாய் அவளைப் பார்க்க...

''போதும்... போதும் உங்க பெருமையெல்லாம்! அவள் சம்பாதிச்சிட்டு வந்து நமக்கொண்ணும் போடலே! இவளை நம்பி என்ஜினீயரிங் காலேஜ்ல ஒருத்தி... மெடிக்கல் காலேஜ்ல ஒரு பையன்னு படிக்கறாங்களே... அவங்களுக்கு எக்ஸாம் பீஸ்ன்னு கூடிய சீக்கிரமே கட்டணுமே! எப்படிக் கட்டுவா? இவளை இவ போக்குக்கு விட்டது தப்பா போச்சு! கண்டிச்சி வளர்த்திருக்கணும்!''



''சரி சரி... என் சம்பளத்துல சமாளிக்க முடியாது... பி.எப். லோன் போட்டு சமாளிச்சிடலாம். உடனே ஒரு வேலையைத் தேடிக் கொள்ளும் வழியைப் பார் கீர்த்தி!'' அப்பா கூறினார்.

''இந்த வீட்டைத் தவிர சொத்துன்னு வேறு எதுனா இருக்கா? சேமிப்புன்னு இருக்கா? நகைன்னு ஏதாவது இருக்கா? இவள் விவரம் தெரிஞ்ச நாளில் இருந்து சேமிக்க விடாமல்.. இவளுக்கு பீஸ் கட்டுவது இல்லாமல் ப்ரண்டுகளுக்கும் கட்டச் சொல்லுவாள். சரி படிச்சி முடிச்சி... ஐந்து வருடமா சம்பாதிக்கிறாள். வீட்டுக்குன்னு ஏதாவது குடுக்கறாளா? இவளுக்கு ஒரு கல்யாணம்... காட்சின்னாலும்... ஒரு பத்து சவரன் தங்கமில்லே! இந்த வீட்டில்!''

''என் பொண்ணே தங்கம். அவளைக் கட்டிக்க எவன்டி தங்கம் கேட்பான்! போடி.. போ...!''

''எதுவும் வேண்டாம்னு... நம்ம நிலைமையை நினைச்சி... பொண்ணு அழகைப் பார்த்து வர்றவனையும் தனியே கூட்டிட்டுப் போய் என்ன சொல்லுவாளோ.. என்ன கேட்பாளோ... எல்லோரும் பின்னங்கால் பிடரியில் இடிபட ஓடிப் போயிடறானுங்க. அப்படி என்னதான்டி கேட்பே?''

கீர்த்தனா அமைதியாய் அம்மாவைப் பார்த்தாள்.

''எவனோ படிக்க வைக்கிறான் இல்ல... பெத்தவனுக்கு இல்லாத அக்கறையெல்லாம் இவளுக்கு எதுக்கு?

எவனோ சின்ன பையன் கூடையில மீன் சுமந்து விற்றால் என்னவாம்? மறுநாளே புதுசா சைக்கிள் வாங்கி கொடுத் துட்டுத்தான் மறுவேலையே செய்கிறாள். இந்த தெரு வுக்கே இவள் பைத்தியக்காரத்தனம் தெரிஞ்சி... அக்கா பென்சில்... அக்கா பேனான்னு வந்து நின்னுடுதுங்க!'' அம்மா புலம்பிக் கொண்டே போக...

''ஏய் தமிழ்... என் பேத்தியை கறிச்சி கொட்டியது போதும்! சும்மாயிரு!'' பாட்டி அடக்க...

''கீர்த்தனாவிற்கு எது பிடிக்குதோ... அதையே செய்யட் டும்! நீ கத்தினா நிறுத்திடப் போறாளா? அவளை அவள் போக்குக்கே விடு!'' கிருபாகரன் கூறினார்.

''ஆமாம், தாயும் பிள்ளையுமே அவளை கெடுத்து குட்டிச் சுவராக்கறீங்க! வயசாகிட்டே போகுது! ஒண்ணு ரெண்டு இல்லே... இருபத்து ஏழு ஆரம்பம்! ஓரளவு வசதியான மாப்பிள்ளைகளே வந்தாலும்... ஒருத்தனும் இவளோடப் போய் தனியாய் பேசிய பின்... திரும்ப மாட்டேன்றாங்க. அவர்களிடம் என்னதான் கேட்பாளோ?''

''அப்பா பாருங்கப்பா... இந்த அம்மாவை எனக்கு தூக் கம் தூக்கமா வருது!'' தப்பிக்க எப்போதும் இது போன்று தான் கூறுவாள்.

''நீ உன் புராணத்தை நாளைக்கு ஆரம்பி! என் பெண் தூங்கட்டும்... நீ போடா செல்லக் குட்டி!'' அப்பா அனுப்ப... நைசாக நழுவி ஓடினாள்.

மறுநாள் தேவி, மஞ்சுளா, லட்சுமி, சுவாதி என தோழி கள் பட்டாளம்!... அவர்களும் கம்பெனிக்கு லீவு போட்டு விட்டு.. இவளுக்கு கம்பெனி கொடுக்க வந்துவிட்டனர்.



சிறு வயது முதல் எம்.எஸ்ஸி. கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்கும் வரை இணைபிரியாத நல்ல பிரியமான, சேவை மனப்பான்மை கொண்ட உயிர்த்தோழிகள்!

''என்னைப் பற்றித்தான் தெரியுமில்லே! அவன் பொய்க் கணக்கு எழுதச் சொன்னான். போடா.. உன் வேலையு மாச்சி... நீயுமாச்சின்னு வந்துட்டேன்! சீக்கிரமே வேலைத் தேடிக்கலாம். ஒண்ணும் பிரச்சினை இல்லை'' என்று தோழிகளிடம் கீர்த்தனா கூறினாள்.

''நல்ல சம்பளம்... பதினைந்தாயிரத்துக்கு மேலே இல் லையா? இப்படிப்பட்ட வேலையை திடீர்னு விட்டுட்டு வந்துட்டியே! என் டாடியா இருந்தா விளாசி எடுத்துடுவார்'' மஞ்சுளா கூறினாள்.

''முடிந்துப் போனதைப் பற்றி என்னப் பேச்சி! நாமெல் லாம் லஞ்ச் சாப்பிட்டுவிட்டு எங்கே போகலாம்?'' கீர்த் தனா கேட்டாள்.

''படத்துக்குப் போகலாமா கீர்த்தனா?'' தேவி கேட்க...

''என்னப்படம்? இப்போ வர்ற படமெல்லாம் பார்க்கும் படியாகவா இருக்கு!''

''செல்வம் தியேட்டர்ல ஏதோ புதுப்படம் போட்டிருக் காணாம். போகலாமா?''

''காதல்... காதல்ன்னு எத்தனை விதமான காதலைத் தான் படம் எடுப்பாங்களோ!'' தேவியைப் பார்த்து கீர்த் தனா கேட்க...

''காதலைப் பற்றி என்னைக் கேட்டா எனக்கென்ன தெரியும். மஞ்சுவைக் கேள். அவளுக்குத்தான் காதல்ல அத்துப்படி..''

''என்னை வம்புக்கு இழுக்கலேன்னா இவளுக்கு தூக்கமே வராதே!''

''பின்னே நம்ம ஐந்து பேரில் காதலில் விழுந்தவள் நீதானே!' அப்போ காதலைப் பற்றி உனக்குத்தானே தெரியும். காதல் வாசனை எப்படி இருக்குன்னு தெரியாத வர்கள் நாங்களெல்லாம்! ஆமாம் சதீஷ் எப்படி இருக்கார்? வேலை ஏதாவது கிடைச்சுதா மஞ்சு?'' என்றாள் தேவி.

''ம்ம்... நான் அவரைப் பார்த்து ரொம்ப நாளாச்சி...!''

''உன் அப்பா பெரிய கோபக்காரர். ஜாதி, மதம் பார்க்கற குடும்பத்தில் பிறந்துட்டு.. ஆமாம் உன் காதலை உங் கப்பா ஏத்துப்பாராடி?'' கீர்த்தனா கேட்டாள்.

''பயம்தான். ஏன்தான் காதலிச்சி தொலைச்சேன்னு இப்போ நொந்து போறேண்டி! வேற ஜாதி... வேலை வேற இல்லை. குறைந்த சம்பளமானாலும் அரசு வேலையில் உள்ள மணமகன் தேவைன்னு தரகர்கிட்ட சொல்லி வச் சிருக்காங்க. ஜாதகம் ஒத்து வராமல்... என்னை காப்பாற் றிட்டு வருது. ஆனால் கவலையா இருக்குடி!''

''பயப்படாதே! நாங்களெல்லாம் உன்னை விட்டுடு வோமா என்ன? உனக்கு ஹெல்ப் பண்ண இருக்கோங்கிற தைரியத்தில்... காதலை நல்லா என்ஜாய் பண்ணு பேபி!'' தேவி நக்கலாய் கூறினாள்.

''ச்சூ... என்ன தேவி? எதெதுக்கு விளையாடறதுன்னு தெரியாது? அழுதுடப் போறாள்! அவகிடக்கா மஞ்சு! நீ கவலைப்படாதே!'' கீர்த்தனா ஆறுதல் படுத்தினாள்.

உணவு உண்டபின், ஸ்கூட்டியில் செல்வம் தியேட்டர் நோக்கி பறந்தனர்.



புதுப்படம் ரிலீஸ் என்பதால் கூட்டம் முண்டியடித்தது. இவர்களும் க்யூவில் நின்று டிக்கெட் வாங்குமிடம் சென்ற தும், ஐநூறு ரூபாய் நோட்டை நீட்டி... ஐந்து விரலை நீட்டி.. ஐந்து என்றாள் கீர்த்தனா... டிக்கெட் கொடுப்பவன் டிக்கெட்டை கொடுத்து விட்டு.. மீதி இருநூற்று ஐம்பது கொடுத்தான். அதை அவள் வாங்காமல்...

''ஹலோ சார்... டிக்கெட்ல இருபதுன்னு இல்லே இருக்கு! நூறுபோக மீதி நானூறு இல்லே கொடுக்கணும்!'' கீர்த்தனா கேட்டாள்.

''ஒரு டிக்கெட் விலை ஐம்பது... இஷ்டமிருந்தால் வாங்கு. இல்லாட்டி தள்ளும்மா.. உனக்கு பின்னாடி கூட் டம் காத்துட்டு இருக்கில்லே!'' என்று அலட்சியமாய் கூற வும் டிக்கெட்டையும் மீதி சில்லரையையும் பெற்றுக் கொண்டு வெளியே வந்தாள்... எரிமலையாய் சீறினாள்.

''நான் இதை விட மாட்டேன். என்னடி இது அநியா யம்? இருபது ரூபாய் டிக்கெட்டை ஐம்பதுக்கு விக்கறது! வாங்கடி போலீஸ் ஸ்டேஷனுக்கு! இவனுங்களை ஒரு வழி பண்ணாம விடறது இல்லை. இந்த கீர்த்தனா யார்னு காட் டாமல் விடமாட்டேன்!'' புயலாய் கிளம்ப...

''ஏய்... ஏய். கீர்த்தனா படம் ரிலீஸ்னா எல்லாத் தியேட் டர்லேயும் நடக்கறதுதான். இதை பெரிசு பண்ண வேண் டாம்! படம் போட்டுடுவான் வாடி கீர்த்தனா'' என தேவி கெஞ்ச.. காதில் வாங்காமல் அவள் செல்லவும்... தோழி களும் பின் தொடர்ந்தனர்.

பக்கத்திலேயே போலீஸ் ஸ்டேஷன்! எஸ்.ஐ.யிடம் சென்றாள்.

''சார்... செல்வம் தியேட்டர்ல இருபது ரூபாய் டிக்கெட் டுக்கு ஐம்பது வாங்கறான். இது அநியாயம் இல்லை!

அப்படி சம்பாதிச்சி கொட்டிகிட்டாலும்... கடைசியில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஆறடி நிலமே! அதுவும் எரித்தால் சாம்பல் தான். இப்படி நிலையில்லாத உலகில் எதுக்கு சார் இப்படி அக்கிரமம் பண்ணனும்? இப்படி அநியாயம் செய்தால் யார்தான் தியேட்டருக்கு போவாங்க.. திருட்டு சி.டி. வாங்கித்தான் பார்ப்பாங்க.. திருட்டு சி.டி. பெருக தியேட்டர்காரங்கதான் காரணமே! சினிமா உலகம் நலிவடையக் காரணமே தியேட்டர் முதலாளிகள்தான்... எங்க ஐந்து பேருக்கு இருநூற்று ஐம்பது... இதில் ஐந்து சி.டி. வாங்கி புதுப்படமா பார்க்கலாம்.. இப்படி எண்ணிக் கொண்டு தான் மக்கள் எல்லோரும் தியேட்டருக்கு வருவதையே நிறுத்திக் கொண்டனர்."

கீர்த்தனா வேகமாய் குற்றம் சாட்டிக் கொண்டு போக...

"இருங்க... இருங்க... நான் கூப்பிட்டு விசாரிக்கிறேன்" எஸ்.ஐ. சொல்ல...

தியேட்டர் மானேஜருக்கு போன் போய் பதறியடித்துக் கொண்டு வந்தான்.

"இனிமேல் இதுபோல் நடக்காமல் பார்த்துக் கொள்கிறோம் சார். முதலாளிக்கு தெரிந்தால் அவ்வளவுதான்... தொலைந்தேன். ஸாரி.. ஸாரிம்மா.. இந்த ஒருமுறை மன்னிக்க வேண்டுகிறேன். அப்பாய்ண்ட்மெண்ட் ஆகி ஒரு வாரம் கூட முடியல... மேடத்துக்கிட்ட சொல்லுங்க சார்" அவன் கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்சினான்.

செல்வம் தியேட்டர் ஓனருக்கும் போன் சென்றது.

கம்ப்ளைண்ட் எழுதிய தாளை நீட்டி...

"சார்... ஆக்ஷன் எடுக்க முடியுமா? முடியாதா?" என்றாள்.



"இந்த ஒரு முறை விட்டுடலாமேம்மா..." போலீஸ் அதிகாரி கூற...

கௌதம் தனது பிசியான வேலைகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு அங்கே வர...

"என் கம்ப்ளைண்ட்டை வாங்க முடியுமா? முடியாதா? அஸிஸ்டண்ட் கமிஷனர் கிட்ட.. கமிஷனர் கிட்ட... கலெக்டர் கிட்ட... ஏன் மனித உரிமை கமிஷன்கிட்டவே நான் போக முடியும்! செய்து காட்டட்டுமா சார்?" என்று கீர்த்தனா சவால்விட...

தீப்பிழம்பாய் ஜொலித்த அவள் முகம் கண்டு.. கௌதமின் மொட்டாய் இருந்த மனம், அவளைக் கண்டதும் சூரியனைக் கண்ட பூவைப் போல மலர்ந்து... மணம் பரப்பியது.

## 7

கௌதமுக்கு அங்கே நல்ல வரவேற்பு இருந்தது. "வாங்க மிஸ்டர் கௌதம்.. உட்காருங்க!" எஸ்.ஐ.யே நாற்காலி எடுத்துப் போட்டார்.

போலீஸ் அதிகாரி அனைத்தையும் சொல்லி முடித்தார். "நடவடிக்கை எடுக்கலன்னா.. மேடம் மேலிடத்துக்கு போறதாய் சொல்றாங்க சார்!"

கௌதம் மேனேஜரைப் பார்த்து கேட்டான்.

"என்னய்யா இது? வந்த கொஞ்சநாளிலே நாங்க சம் பாதிச்சி வச்சிருந்த நல்லப் பேரை கெடுத்துட்டியே!"

"ஸாரி.. ஸாரி சார்" அந்த இளம் மேனேஜர் கையெடுத்துக் கும்பிட்டான்.

அருகிலேயே அமர்ந்திருந்த கீர்த்தனாவைப் பார்த்துச் சொன்னான் கௌதம்.

"ஸாரி மிஸ். எங்க தியேட்டர்ல இதுவரை இப்படியெல் லாம் நடந்தது இல்லே. பழைய மானேஜர் நம்பிக்கை யானவர். நேர்மையானவரும் கூட! அவருக்கு வயசாகி விட்டதால்.. இவரை சமீபத்தில்தான் வேலைக்கு வைத் தேன். அப்பாவுக்கு செய்தி போனால் ரொம்பவே கஷ்டப் படுவார். இந்த ஒருமுறை மன்னிச்சிடுங்களேன்!" வெந்நிற பற்கள் மின்ன புன்னகைத்தான்.

"குற்றம் கண்டு பிடித்து.. அது வெளியே வந்தால்... எல்லோரும் பேசற அதே டயலாக்கையே பேச நன்றாக கத்து வைத்திருக்கீங்க! அது எப்படி சார் முதலாளிக்கு தெரி யாமல்.. பகல் கொள்ளை நடக்கும்? ம்?" கீர்த்தனா சீறி னாள்.

"அப்போ இந்த குற்றத்திற்கு நானும் உடந்தைப் போல பேசறீங்க?" கௌதமும் சீறினான்.

"பின்னே என்னவாம்?"

கௌதமுக்கு கீர்த்தனாவின் பேச்சில் கோபம் வந்து விட்டது.

"என்னங்க இது அபாண்டமான குற்றச் சாட்டு? உண்மை என்னன்னு தெரியாமல் யார் மேலேயும்.. அவ்வளவு எளி தாய் இப்படி பழி போடாதீங்க! இது நல்லதில்லே! நீங்க



என் பேச்சைகூட நம்ப வேண்டாம். வெளியே போய் எங்க தியேட்டர் பற்றி விசாரிங்க... உண்மை என்னவென்று தெரிந்து கொள்ளுங்கள்! பெரிது படுத்த வேண்டாம். இனி இதுபோல் அசம்பாவிதம் நடக்காமல் பார்த்துக் கொள் கிறேன். ப்ளீஸ்.." கௌதம் கத்திவிட்டு... பின்னர் தணிந்த குரலில் சொல்லவும்.

கீர்த்தனாவிற்கு கோபம் வந்துவிட்டது.

புகார் கடிதத்தை சுக்கு நூறாய் கிழித்து அவன் மேல் எறிந்துவிட்டு.. புயலாய் வெளியேற.. கௌதம் பூகம்பத் தில் சிக்கியவன் போலானான். செய்வதறியாமல் திகைத்து நின்றான்.

தன் மனதிற்கு பிடித்தவள்... அவளைக் காணமாட் டோமா என்று தவியாய் தவிக்க வைத்தவள்.. தன்னை குற்றம் சாட்டி.. தவறாய் வேறு நினைத்து போகிறாளே என்று வருந்தி.. அவளைச் சமாதானப்படுத்த பின்னாடியே வேகமாய் சென்றான்.

"ஸாரி.. ஸாரி மிஸ்.. நான் பேசியதில் தவறு இருந்தால் மன்னிக்கக் கூடாதா?" கேட்டான்.

"உங்களை மன்னிக்க நான் யார் சார்?"

"உங்களுக்கு என்மேல் அதிக கோபம்! அதையெல் லாம் விடுத்து... சமாதானமாகப் போகலாம். என் பெயர் கௌதம், யுவர் குட் நேம் ப்ளீஸ்.."

"என் பெயரைச் சொன்னால் தெரிந்து கொள்ளும் அளவுக்கு.. நான் ஒன்றும் பெரிய ஆளில்லை! ஏய் வாங் கடி" என்று அனைவரையும் அழைத்துக் கொண்டு சென்றே விட்டாள்.

கௌதம் கையில் கிடைத்தப் பொருளை தவறவிட்ட குழந்தையாய் கலங்கினான்.

இந்த முறையும் அவள் யார்? என்ன? என்ற தகவல் கிடைக்கவில்லையென்றாலும்.. ஏதோ அவள் இந்த ஊரைச் சேர்ந்தவள் என்பது மட்டும் பெரும் ஆறுதலை அளித்தது.

* * *

மாதத்திற்கு இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் இந்த ஐவர் குழுவும் ஒன்று சேர்ந்து... சிறு சிறு வாத்தியக் கருவிகளுடன் பார்க்கில் கூடிவிடுவார்கள். காந்தி பார்வை யற்றோர் அனாதை இல்லத்திற்கு நிதி திரட்டுவதற்காக!

கீர்த்தனா, தேவிக்கு நல்ல குரல் வளம். அந்த காலத்துப் பாடல்கள் முதற்கொண்டு தற்போதைய பாடல்கள் வரை அச்சு பிறழாமல் அத்துபடி. இதில் என்ன ஸ்பெஷல் என்றால் பாடலைப் பாடிய பாடகிகளின் குரலிலேயே பாடுவார்கள். கீர்த்தனா ஆண் குரலிலும் பாடி அசத்தி விடுவாள்.

மஞ்சு, சுவாதி, லட்சுமிக்கு வாத்தியக் கருவிகளுடன் பழக்கம்.

குடும்பத்தோடு விடுமுறையை சந்தோஷமாய் கழிக்க வருபவர்களும்... சிறுவர்களும்.. பெரியவர்களுமாய் கூடி விடுவர். இவர்களுடைய மயக்கும் குரலில் சொக்கி.. தாரா ளமாகவே நிதியை அளிப்பர்.

இந்த ஞாயிறில் இசைக்கச்சேரி செய்ய.. ஐவர் குழுவும் பார்க்கிற்கு வந்துவிட்டது. பெரிய நிழல் தரும் மரமாய் பார்த்து நின்று கொண்டார்கள். கூட்டம் கூடியது. ஒவ் வொருவரின் விருப்பப்பாடலையும் பாடினார்கள்.



வீட்டில் பொழுது போகாமல் காரை எடுத்துக் கொண்டு நகரை வலம் வந்த கௌதம்.. தன்னிச்சையாய் பார்க்குக் குள் நுழைய.. அங்கே இங்கே இருந்த பெஞ்சுகளிலும்.. சிறுவர் விளையாட்டு சாதனங்களும் காலியாய் இருக்க.. ஒரு பெரிய கூட்டமே மரத்தடியில் கூடியிருக்க.. அங் கிருந்து பாடல் ஒலி கேட்க.. ஆச்சரியம் தாங்காமல் சென்று பார்த்தவனுக்கு ஆனந்தத்தோடு கூடிய அதிர்ச்சி!

அங்கே அவனின் இதய தேவதை!

கௌதமிற்கு அவளைக் கண்ட மகிழ்ச்சியில் குதித்து ஆடலாம் போல இருந்த மனதை கட்டுப்படுத்திக் கொண்டு.. மக்களோடு மக்களாய் கடைசியில் நின்று பார்த்துக் கொண் டிருந்தான். இமைக் கொட்டாமல்!

அவன் கூட தனக்குப் பிடித்தப்பாடலை எழுதி.. ஒரு சிறுவனிடம் கொடுத்தனுப்பினான். கீர்த்தனாவின் அழ கிய, இனிய குரலில் பாடலைப்பாட அப்படியே சொக்கிப் போய்விட்டான்.

காலை நேர அவசரத்திலும்.. மாலை நேர அசதியிலும் வீடு திரும்புவோரிடம்.. சிக்னலில் நின்று உண்டியல் குலுக்கி தர்ம சங்கடத்திற்கும் கோபத்திற்கும் ஆளாகும் பெண்களில் இவர்கள் மட்டும் வேறுபட்டு.. வித்தியாச மாய் அவனுக்கு தெரிந்தனர்.

எவ்வளவு சமயோசித புத்தி!

சந்தோஷமாய் பொழுதை கழிக்க வருபவர்களுக்கு.. இன்னும் சந்தோஷத்தை வழங்கி.. நிதியளிக்கச் செய்யும் யுக்தியைக் கண்டு மெச்சினான்.

கீர்த்தனா கை குவித்து பேசினாள்.

''இதுவரை பொறுமையாய்... எங்களுடைய பாடலைக் கேட்டு ரசித்த.. நல்ல உள்ளங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி! இதை நாங்கள் எங்களுக்காக செய்யவில்லை. கண் களிரண்டும் தெரியாமல், அனாதையாய் வாழும் 'காந்தி பார்வையற்றோர் அனாதை இல்லத்திற்கு' செய்கிறோம். உங்களின் நிதியுதவியால் அவர்களின் பசியாறும்.. வாழ்வு மலரும்! உங்களின் நிதியுதவியால் எத்தனையோ அனாதையான பார்வையற்றோர் வாழ்வு ஒளி பெறும்.. ப்ளீஸ்.. உதவுங்கள் சார்!'' என்று கூறி முடிக்க...

ஒவ்வொருவரும் அவர்களைப் பாராட்டி விட்டு.. தங்களால் முடிந்தவற்றை உண்டியலில் போட்டனர்.

கடைசியாய் நின்றவன் அருகில் செல்ல.. இருவர் பார்வையும் சந்தித்து மீண்டது.

அவளுக்கு ஞாபகம் வந்தது, செல்வம் தியேட்டர் ஓனர் என்று!

'பகல் கொள்ளைக்காரன், திருடன் என்று சாடியவன் மன்னித்து நிதியளிப்பானா?' என நினைத்துக் கொண்டே.. சின்ன நம்பிக்கையில்.. அவன் முன்பு உண்டியலை உலுக்கினாள் கீர்த்தனா.

அவன் ஏதோ ஞாபகத்தில் வெறும் சட்டையை மாட்டிக் கொண்டு வந்துவிட்டான்.. சட்டைப் பையை தொட்டுப் பார்த்தவன் வெலவெலத்துப் போனான்.

'பணமில்லையே! கடவுளே! அவள் என்னைப் பற்றி என்ன நினைப்பாள்? இப்போது எதைக் கொடுப்பது? என்ன செய்வது?' எனத் தவித்தவன்.. சொல்லாமல் கொள் ளாமல் வெளியேறினான்.



''ஞாபகமிருக்காடி! செல்வம் தியேட்டர் ஓனர்! பெரிய பணக்காரன்! ஆனால் மனசுதான் சிறியது! பார்த்தாயா தேவி... இல்லாதவர்கள் கூட அவர்களால் முடிந்ததை கொடுத்து ஹெல்ப் பண்ணினாங்க. ஆனால், இந்த ஆளு நைசா நழுவி விட்டதைப் பார்த்தாயா? இதுதாண்டி உலகம்!'' எனப் பேசிக் கொண்டே போக.. அவன் முன்பு செக் புக்கை காட்டினான் கௌதம்.

கீர்த்தனா அவமானத்தில் குன்றிவிட்டாள்.

''மிஸ், வர்ற அவசரத்தில்.. பணம் எடுத்து வரல! செக் கொடுக்கலாம் இல்லையா?'' என்று கூறிக்கொண்டே ஒரு லட்சத்துக்கான தொகையை எழுதி அவள் முகத்திற்கு முன்னே நீட்டினான்.

கீர்த்தனாவிற்கு அந்த தொகையைக் கண்டு இன்னும் அவமானத்தில் முகம் கறுத்தது. நிமிராமலே வாங்கிக் கொண்டாள்.

''அதுக்குள்ள என்னென்ன பேசிட்டீங்க! ம்? அன்று போலீஸ் ஸ்டேஷன்! இன்று பார்க்கில்! ஆமாம்.. என்னைப் பற்றி உங்களுக்கு கொஞ்சம்கூட நல்ல அபிப்ராயமே இல்லையா?'' என்று கேட்டான்.

கீர்த்தனா விழிகளாலேயே கெஞ்சி.. பின் ''ஸாரி.. ஸாரி மிஸ்டர்'' என்று கூறிவிட்டு.. ஓட்டமாய் வெளியேறி.. ஸ்கூட்டியை கிளப்பிக் கொண்டு சென்றுவிட்டனர்.

கார் அருகே வந்து.. கோபமாய் கைகளைக் காரின் மீது குத்திக் கொண்டான்.

இனி அவளை எப்போது பார்ப்பது என ஏங்கினான்.

விரைவிலேயே காணப்போவது தெரியாமல்!

# 8

கௌதமின் வியாபார ஸ்தாபனங்கள் அத்தனைக்கும் மெயின் ஆபீஸ் சேலத்தின் மத்தியில் பிரம்மாண்டமான கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

கீர்த்தனாவின் நினைவுகளாலும்.. வேலை பளுவாலும் ரொம்பவே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான் கௌதம்.

அந்த அனாதை இல்லத்திற்கு வருடம் ஒருதடவை பெரிய தொகையை கொடுப்பதுதான் என்றாலும்.. போனில் அவளை அடையாளம் கூறி கேட்க அவன் தயங்கினான். நேரில் சென்று வருவதே நல்லது என்றிருந்தான். ஆனால் நேரம்தான் கிடைக்கவில்லை.

அவனுடைய செகரட்டரி திடீரென திருமண பத்திரிகையை நீட்டி.. வேலையை ராஜினாமா செய்யவும்.. அவனுக்கு இரு ஆள் வேலையை செய்ய வேண்டியிருந்தது.

எனவே செகரட்டரியை தேர்வு செய்த பிறகு செல்லலாம் என்று இருந்தான்.

கீர்த்தனா அதிகாலையிலேயே எழுந்து குளித்துவிட்டு.. ஆறுமணிக்கெல்லாம் சிறுவர்களுக்கு படிப்பு சொல்லிக் கொடுத்தாள். பின்னர் சாப்பிடச் சென்றபோது அப்பா... பாட்டி காத்திருந்தனர்.

''அம்மா கீர்த்தனா.. நீ இண்டர்வியூக்கு போற இடம் பெஸ்ட் கம்பெனியாம். உனக்கு இந்த வேலை கிடைக்க வாழ்த்துக்கள்!''



''தேங்க்ஸ்ப்பா...!''

''ஆமா.. இவ ஒருத்தியை மட்டும்.. இண்டர்வியூக்கு அழைத்து.. இவளுக்கே இவளுக்கு மட்டும் அந்த வேலையை தூக்கிக் கொடுக்கப் போறாங்க! பெரிசா வாழ்த்தறார்!'' தமிழ்ச்செல்வி சலித்துக் கொண்டாள்.

''இவளுக்கு என் பேத்தியை மட்டம் தட்டாம இருக்க முடியாதா? அச்சச்சோ என்னடா.. என் தங்க குட்டிக்கு முகம் வாடிப்போச்சே! அவள் கிடக்கறா. என் பேத்தியோட அறிவு.. திறமை தெரியாத மட்டி ஜென்மம்! அப்படித்தான் பேசுவா.. இந்த வேலை என் பேத்திக்கு கிடைச்சுட்டா.. உன் தலையை மொட்டையடிச்சிக்கிறியா?''

''வேலை கிடைக்கலன்னா.. நீங்க செய்துகிறீங்களா?'' இருவரும் மாறிமாறி சண்டைக் கோழியாய் சிலுப்பிக் கொள்ள...

''ச்சை.. உங்க சவாலை கேட்கவே சகிக்கலை.. இதுல மொட்டைத் தலையில கற்பனைப் பண்ணிப் பார்த்தா அதைவிட கோரம்! தமிழ் நல்லதாவே நீ நினைக்க மாட்டியா?'' வேகமாய் கிருபாகரன் கூறவும்...

''உங்க பொண்ணு திமிருக்கு எங்கேங்க நல்லதா நினைக்கறது? சரியான ஏடாமடி கழுதை! இண்டர்வியூல கேக்கற கேள்விக்கு சரியா பதில் சொல்வான்னு நினைக்கறீங்களா? எங்காவது.. எந்த வேலையிலாவது நிலைச்சி இருந்தாளா? வேலை கிடைப்பதே அபூர்வம்! இதில் குறை கண்டுபிடிச்சி.. ராஜினாமா கடிதத்தை வீசிட்டு வருவதே தொழிலாப் போச்சு!''

''புலம்பாதே.. சட்னி வை!''

"நல்ல சேலையா கட்டிட்டுப் போகக் கூடாதா? இந்த காட்டன் சேலையையும்.. உன் எளிமையையும் பார்த்து.. காந்தி தாத்தாவோட பேத்தின்னு நினைச்சுடப் போறாங்க! இத்தனை எளிமை தேவையா? நான் சொன்னால் கேட்டுக்கவா போறே! போறப்போ உன் மஞ்சள் சேலைக்கு மேட்சா.. மஞ்சள் ரோஜா பூத்திருக்கு! பறித்து வைத்துக் கொண்டு போ" அம்மாதான் சொன்னாள்.

கீர்த்தனா அனைவரிடமும் விடை பெற்றுக் கொண்டு.. அங்கே வந்து சேரவும்.. கட்டிடத்தின் மிகப் பெரிய பிரம்மாண்டம் மிரட்டியது. லிப்ட் மூலம் நான்காவது தளம் சென்றாள்.

அங்கே ஏகப்பட்ட ஆண்களும், பெண்களும் என குழுமி இருந்தனர். எல்லோரையும் பார்த்துவிட்டு.. தன்னைப் பார்த்தவளுக்கு கொஞ்சம் வெட்கமாகக்கூட இருந்தது. ஏனென்றால் அங்கே இருந்த பெண்களின் ஆடைகளும்.. ஆபரணங்களும்.. பளபள லிப்ஸ்டிக்கும்.. ஆளைக் கவிழ்க்கும் அழகுமாய் அவர்கள் இருக்க.. இவளோ எளிமையின் சிகரமாய் இருக்க.. அவளுக்கே சந்தேகம் இந்த வேலை கிடைக்குமா? என்று!

பியூன் வந்து இருபதாவது டோக்கன் கொடுத்துவிட்டு செல்ல. ஒவ்வொருவராய் அழைக்கப்பட்டு.. இவள் முறை வந்தபோதும் இவளை அழையாமல்.. அடுத்த எண் அழைக்கப்பட்டது.

அப்ளிகேஷனில் அவளைப் பார்த்து.. அவள் எளிமையை போட்டோவில் கண்டுதான் தூக்கியெறிந்திருக்கிறான். ராஸ்கல்!

கடைசி ஆளாகவும் அவளை அழைக்காமல் போக... வீட்டிற்கு கிளம்பியவளை.. தடுத்து நிறுத்தி.. "சார் உங்களை கூப்பிடறார் மேடம்!" என்று பியூன் கூறிவிட்டு சென்றுவிட்டான்.



எரிச்சலுடன் "மே ஐ கம்மின் சார்!" என்று கூறி.. கதவைத் தள்ளிக் கொண்டு போய் "வணக்கம்!" என்று கை குவித்தவளுக்கு அதிர்ச்சி!

செல்வம் தியேட்டர் ஓனர்!

முதலில் அதிர்ந்தவளுக்கு பின்னர் ஆச்சரியம்! 'இத்தனை பெரிய கடல் போன்ற நிறுவனங்களைக் கட்டிக் காப்பவன் இந்த இளைஞனா?' என்று நினைத்துக் கொண்டாள்.

கீர்த்தனாவின் அழகில்.. காதோரம் சொருகியிருந்த ஒற்றை மஞ்சள் ரோஜாவின் கூடுதல் கவர்ச்சியில்... மதிமயங்கி இருந்த அவன்.. அவளின் கனைப்பு சத்தம் கேட்டு நிஜத்திற்கு வந்தான்.

"ஹலோ மிஸ்! இங்கே என்னை எதிர்பார்க்கல இல்லையா?" என்று நக்கலாய் கேட்டான் கௌதம்.

".........................."

"கௌதம், செல்வம் என்ற பெயரில் நகரில் இருக்கும்.. அத்தனை ஸ்தாபனங்களும் அடியேனுடையதுதான்! தெரியாதில்லே? தெரிஞ்சிருந்தா வந்திருக்கவே மாட்டீங்க. இல்லையா?" கௌதம் கிண்டலாய் கேட்க..

"யெஸ் சார்..." என்று அலட்சியமாய் மிடுக்காய் பதில் வந்தது.

"அதுயென்ன மனிதர்களை மட்டமா எடைபோடும் புத்தி!! ம்ம்? ஹெல்ப்பிங் மைண்ட் இருக்கு! நல்லா பாடறே! எளிமையா இருக்கே! ஆளை அசர அடிக்கும்

அழகா வேற இருக்கே! ஆனால் கொஞ்சம் இங்கதான் குறைச்சல் போல!'' மண்டையைத் தொட்டுக் காட்டிச் சொன்னான்.

''நான் உங்களை அப்படி தப்பா எடைப் போட்டதுக்கு, ரொம்பவே வருந்துகிறேன் சார்! ரியலி.. வெரி ஸாரி!'' நிஜமான வருத்தத்தில் சொன்னாள்.

''இப்போ வருத்தப்பட்டு என்ன ஆகப் போகிறது! போலீஸ் ஸ்டேஷன்ல முதலாளிக்கு தெரியாமல்.. பகல் கொள்ளை நடக்க வாய்ப்பில்லேன்னு சாடினப்ப.. எனக்கு மானமே போனாப்பல இருந்தது. கொஞ்ச நேரத்திற்கு முன்புதான் இந்த மனுக்களைப் பார்த்தேன். அதுல உன் னுடையதும் இருந்ததைப் பார்த்து.. உன்னை கடைசியாய் அழைத்துப் பேச விஷயம் இருந்ததால்.. வெயிட் பண்ண வைத்தேன். பேசிவிட்டேன். ஓ.கே. நீங்க போகலாம்!'' என்று கண்டிப்புடன் கூறினான்.

''ஒரு நிமிடம் மட்டும் டைம் எடுத்துக்கிறேன் சார்.. அன்று தாங்க்ஸ் கூட சொல்லாமல் போய்விட்டேன். உங்கள் செக்குக்கு ரொம்பவே தாங்க்ஸ் சார்.. வர்றேன் சார்!'' என்று எழுந்து வணங்கிவிட்டு கிளம்பினாள்.

அவள் முகம் வாடி செல்ல... கௌதம் இங்கே குறும் பாய்ச் சிரித்துவிட்டு.. 'ராட்சசி! எனக்கு எத்தனை முறை போக்குக் காட்டி மறைந்தாய்? உன் பெயர், முகவரி தெரி யாமல் எவ்வளவு வேதனைப்பட்டேன். போலீஸ் ஸ்டேஷ னில் பேர் கேட்க.. சொல்லாமல் எத்தனை மிடுக்காய் சென்றாய்! என்னை சித்ரவதை செய்த அழகான பிசாசே... உன் பெயர் கீர்த்தனாவா? என் மாமனார் எத்தனை ஸ்வீட் டான.. குப்பரான பெயராய் வைத்திருக்கிறார்! 'கீர்த்தனா..



கீர்த்தி.. கீர்த் .. கீ...' நான் உன்னை எப்படி அழைக் கட்டும்?'' வேகமாகவே தன்னிடம் பேசிக் கொண்டான் கௌதம்.

* * *

கீர்த்தனாவின் களையிழந்த முகத்தையும்.. தளர்ந்த நடையையும்.. பையலை தூக்கி ஆத்திரத்தில் வீசிய விதமும்.. அம்மாவுக்கு புரிந்து போயிற்று.

''என்னடி?'' கேட்க.. அனைத்தையும் மகள் கூறி முடிக்க.. அம்மாவோ விழுந்து விழுந்து சிரித்தாள்.

''இதுவரைக்கும் எத்தனை பேருடைய மூக்கை ஆண வத்தோடும் திமிரோடும் அறுத்திருப்பே! இப்போ உன் மூக்கையும் ஒருத்தன் சாமர்த்தியமா உடைச்சி அனுப்பி இருக்கானே! ரொம்ப சந்தோஷம்! அதுக்குதான் படிச்சி படிச்சி சொல்றேன். ஓவரா இப்படி நடக்கக் கூடாதுன்னு! கேட்டாதானே! போ.. போய்.. சாப்பிட்டு விட்டு படு!''

கீர்த்தனா இரவெல்லாம் தூங்காமல் அவமானப்பட் டதை நினைத்து வருந்திக் கொண்டிருக்க..

கௌதமோ.. அவளின் போட்டோவை.. ஸ்டுடி யோவில் கொடுத்து பெரியதாக்கி மார்பில் கட்டியணைத்து நிம்மதியாய் தூங்கிக் கொண்டிருந்தான்.

மறுநாள் தபால்காரன் கொடுத்த கவரைப் பிரித்துப் பார்த்தவள்.. பிரமித்து விட்டாள்.

வேலையில் சேருவதற்கான ஆர்டர்! கூடவே ஒரு வெள்ளைத்தாளில் கௌதம் தன் கைப்பட எழுதிய கடிதம்.

*"என்னங்க கீர்த்தனா.. ரொம்ப பிரமிப்பா இருக்கா? இங்கே இருந்தே.. உங்க முகத்தின் பிரதிபலிப்பு எனக்கு தெரியுது! நேற்று அப்படி பேசியவன், ஒரு கேள்வியையும் கேட்காமல்.. எப்படி இந்த வேலையை கொடுத்தேன் என்று ஆச்சரியப்பட வேண்டாம். இந்த வேலைக்கு தகுதியான நபர் நீங்கள் மட்டுமே! உங்கள் அறிவையும்.. திறமையையும் உங்களுடைய சர்டிபிகேட்டிலும்.. உங்களின் அசாத்திய துணிச்சலையும்.. உதவி செய்யும் மனப்பான்மையையும் நேரிலும் என நிறையவே கண்டுள்ளேன்! உங்களின் பணி எங்கள் நிறுவனத்திற்கு தேவை! உங்கள் விருப்பம் போல எப்போது வேண்டுமானாலும் வேலையில் சேருங்கள் என்று சொல்ல முடியாத நிலையில் உள்ளேன். செகரட்டரி இல்லாமல் திண்டாடு கிறேன். உடனே வேலையில் சேரவும். நேற்று அவ்வாறு பேசியதெல்லாம் 'சும்மாங்க!'*

*இப்படிக்கு*

*கௌதம்."*

வேலைக்கான ஆர்டரில் மாத சம்பளம் முப்பதாயிரம் என இருக்க.. அவள், அவளது குடும்பத்தினர் அனைவருமே பூரித்து விட்டனர்.

இந்த சந்தோஷம், பூரிப்பு நிலைக்காது எனத் தெரியாமல்.



# 9

மறுநாள் ரொம்பவே அழகாய் விடிந்தது போல இருந்தது கீர்த்தனாவிற்கு!

பெரிய கம்பெனி.. அதிலும் நல்ல கம்பெனி என்று கேட்போரெல்லாம் கூறும் வார்த்தை.. அதிலும் இத்தனை சம்பளம்.. இதுவரை கிடைத்தில்லை.

முதல் மாத சம்பளம் வாங்கியதும்.. புலம்பியே தீர்க்கும் அம்மாவுக்கு நல்லதாய் ஒரு வைரத்தோடு எடுத்துத் தரவேண்டும். தாயின் கருவறை குளிர்ந்தால் தானே.. அவளால் நல்லாயிருக்க முடியும்!

அதற்கு அடுத்த மாதம் என்ஜினீயரிங் படிக்கும் ரம்யா குட்டிக்கும்.. மருத்துவம் படிக்கும் ஈஸ்வருக்கும் எக்ஸாம் பீஸ் கட்ட வேண்டும். மீதி தொகைக்கு அப்பாவிடம் கேட்க வேண்டும்.

ரம்யா இந்த ஆண்டோடும், ஈஸ்வர் அடுத்த ஆண்டோடும் படிப்பை முடிக்கப் போகின்றனர். அவர்கள் சம்பாதித்து இரண்டு மாணவருக்கு உதவினால்.. சங்கிலித் தொடராய்.. இல்லாத மாணவர்களும் உயர முடியும்!

அம்மா, அப்பா, பாட்டியென ஒவ்வொருவர் காலிலும் விழுந்து வணங்கினாள்.

"நல்ல பெரிய கம்பெனி! உன்னிடம் மன்னிப்பு கேட்டு கடிதம் எழுதும் அளவு பண்பான முதலாளி.. நல்ல

சம்பளம், இதை விட வேறென்ன கீர்த்தனா வேண்டும்! எனக்கு சந்தோஷமா இருக்கும்மா.. உன் நல்ல குணத்திற்கு மேலும் மேலும் வளருவாய் கீர்த்தி!'' அப்பா வாழ்த்தினார்.

''ஏய் பெண்ணே! உன் கோபத்தையெல்லாம் மூட்டைக் கட்டி வைத்து விட்டு.. ஏதாவது உனக்கு பிடிக்காதது நடந்தாலும்.. ஒரு முறைக்கு இருமுறை யோசித்து.. இந்த கம்பெனிக்கு ராஜினாமா கடிதம் எழுதி கொடுத்துட்டு வா! என்னடி?'' என்று தமிழ்ச்செல்வி கூற..

கிருபாகரன் மனைவியை முறைத்தார்.

''போயிட்டு வா கீர்த்தி'' பாட்டி சொன்னாள்.

அவள் அங்கு சென்றதே சீக்கிரம் என்றால், அதற்கு முன்பாகவே கௌதம் வந்து இருந்தான்.

''குட்மார்னிங் சார்'' சொன்னவளுக்கு ''குட்மார்னிங்'' என்று பதிலளித்து விட்டு நாற்காலியை காட்ட... அவள் அமர்ந்தாள்.

''இன்றே வருவாய் என்று எதிர்பார்க்கவில்லை!'' அவன் ஆச்சரியமாய் சொன்னான். பின்பு ''ஆபீஸ் டைம் பத்து தான்'' என்றான்.

''எனக்கு காலதாமதம் பிடிக்காது சார். அதுவும் கடைசி நேர.. பதைபதைப்பாய் உள்ளே வரப் பிடிக்காது. நீங்க மட்டும் நேரத்தில் வரவில்லையா?'' திருப்பி கேட்டாள்.

''நான் முதலாளி. கால நேரம் பார்த்து உழைக்கக் கூடாது!'' என்று கூறி சிரித்தான்.

அவன் சிரிப்பு அழகாய் இருந்தது.



''கீர்த்தனா.. நேற்றைக்கு முதல் நாள் அப்படி பேசியதற்கு மன்னிக்கணும்.''

''என்ன சார் என்கிட்டேப் போய் மன்னிப்பெல்லாம் கேட்டுட்டு!'' பதறினாள்.

''நான் வேலைன்னு வந்து விட்டால் கண்டிப்பானவன்.. கரெக்டா இருக்கணும்!''

''உங்க எதிர்பார்ப்பை விட நிறையவே செய்வேன் என்ற நம்பிக்கையிருக்கிறது சார்!''

''ஓ.கே. நம்பறேன். ஏதாவது கம்பெனியில் வேலைப் பார்த்த முன் அனுபவம் இருக்கா?''

''நிறையவே! படிச்சி முடிச்ச ஐந்து வருடத்தில் ஆறு இடத்தில் வேலைப் பார்த்திருக்கேன்.''

''நிறைய முன் அனுபவம் போல!'' என்று அவன் கிண்டலாய் கூற..

அவளுக்கு கோபம் வந்து விட்டது.

''முதலில் ஒரு கம்பெனியில் வேலைப் பார்த்தேன். ரொம்ப பெரிசும் இல்லே.. சம்பளமும் சொற்பம்தான். ஆனால் முதலாளியோட பார்வை சரியிருக்காது. ஜொள்ளு விடுவான் பாருங்க.. அதை குடத்தில் பிடித்தால்.... இந்த சேலம் மாநகருக்கே தண்ணீர் பஞ்சம் வராது.. ஆனால் வயது ஐம்பதுக்கு மேல்! பேசறது அத்தனையும் இரட்டை அர்த்த வசனங்கள். அப்பா வயது மனிதன் என்று சகித்துக் கொண்டேன்...

ஒருநாள் தொழிற்முறை கருத்தரங்கு என்றும்.. மாலையே திரும்பி விடலாம் என்றும்.. நீ கட்டாயம் வரவேண்டும் என்று வற்புறுத்தவே சென்றேன். கருத்தரங்கு மாலையே

முடிய... 'என் வயசுக்கு.. நோயுள்ள உடம்புக்கு திரும்ப இத்தனை தூரப் பயணம் ஒத்துக்காது. ப்ளீஸ்ம்மா.. இன்று இரவு மட்டும் ஒட்டலில் தங்கி காலையே சென்று விட லாம்' என்று கெஞ்சி.. ரூமும் போட்டான். எனது ரூமிற்கு சிறிது நேரத்திலே வந்து கதவைத் தட்டிவிட்டு.. உள்ளே புகுந்து.. தாழ்ப்பாள் போடவும் பதறிவிட்டேன். 'ஊர் உலகத்துல நடக்காதது இல்லை. நீயின்னா எனக்கு இஷ்டம்.. இதுபோல் சந்தர்ப்பம் வராதான்னு ஏங்கினேன். எனக்கு பணிந்து போனால் இரண்டு மடங்கு சம்பளம்' என்று கூறி.. அருகே நெருங்க.. விபரீதம் புரிந்து.. நான் கராத்தேயில் ப்ளாக் பெல்ட் வாங்கி உள்ளதால் வயதான அவனை கண்மண் தெரியாமல் அடித்து துவைத்து விட்டு.. அப்போதும் ஆத்திரம் அடங்காததால் என் செருப் பாலேயே அவன் முகத்தில் சாத்து சாத்து என்று சாத்தி விட்டு.. டாக்ஸி பிடித்து வந்து சேர்ந்தேன். 'உன்னால் எனக்கு மீண்டும் தொல்லை ஏற்பட்டால் போலீஸ் ஸ்டே ஷன் போகவும் தயங்க மாட்டேன்' என்று மிரட்டிவிட்டு தான் வந்தேன். அப்புறம் அந்த நாய் என்னிடம் வாலாட்டவே யில்லை." என்று கூறி முடித்தவளுடைய உடல் விறைத்து.. கோபத்தை அடக்க கைகளை இறுக்கிக் கொண்டாள்.

சூழ்நிலையை எளிதாக்க கௌதம் ஜோக்கடித்தான்.

''அம்மா.. தாயே.. நான் உன்கிட்ட ஜாக்கிரதையாவே பத்தடி தள்ளியிருக்கணும் போல! கராத்தேயில் ப்ளாக் பெல்ட் லேடி வேற.. அதைவிட எனக்கு சண்டையெல் லாம் வராதும்மா...!'' என்று அவன் பயந்தது போல நடிக்க...

''நீங்கள்.. அந்த மாதிரி கீழ்த்தரமான செயலிலெல்லாம் ஈடுபட மாட்டீர்கள் என்று எனக்கு நம்பிக்கை சார்."



''அடேயப்பா.. புல்லரிக்குது! என்னைப் பற்றி இவ்வளவு நம்பிக்கை எப்போதிருந்து வந்தது?''

''வெளியே நிறைய பேரிடம் விசாரித்தேன்!''

''டிடெக்டிவ் வேலையா?''

''இது உளவு வேலையல்ல! வேலைக்கு போற இடம்
எப்படி? அதன் முதலாளி எப்படிப்பட்டவர் என்று விசா
ரிப்பதெல்லாம்.. ஒரு எச்சரிக்கை.. ஆர்வம். சரியில்லாத
இடமாக இருந்து.. வேலையில் சேர்ந்த உடனே ராஜி
னாமா செய்துவிட்டால் அம்மாவிடம் யார் திட்டு வாங்
குவது?''

''அப்புறம் மீதி கம்பெனி அனுபவம் பற்றி சொல்ல வில்லையே!''

''ஒவர் டைம்.. தில்லு முல்லு.. வேலை அதிகம்..
சம்பளம் குறைவுன்னு ஏதாவது காரணம் இருந்தது. வரி
ஏய்ப்பு எனக்கு சுத்தமாகப் பிடிக்காது!''

''அநியாயம் கண்டு கொதித்தெழும் பாரதி கண்ட
புதுமைப் பெண்ணாய் இருப்பீங்க போல! ஆமாம் ஏதா
வது வேலையிருந்தால் ஓவர் டைம் செய்து கொடுத்
துட்டு போக முடியாதா? ஓவர் டைமுக்காக சம்பளமும்
கிடைக்கும். இதிலென்ன பிரச்சினை?''

''காலையில் நேரம் கழித்து வருவதோ.. மாலையில்
லேட்டாய் செல்வதோ.. என்னால் முடியாது... அப்படி
யொரு நிலைமையிருந்தால்.. இப்போதே சொன்னால்...
இந்த வேலை வேண்டாம். கோடி ரூபாய் கொடுப்பதாய்
இருந்தாலும் கூட!'' அவள் கறாராய் சொல்ல.. கௌதம்
காரணம் புரியாமல் திகைத்தான்.

"ஏன்? என்ன காரணம்? எனக்கு அதற்கு கட்டாயமாக காரணம் தெரிய வேண்டும்!" அவன் கட்டளையாய் கேட்க...

"காலையில் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு படிப்பு.. மாலையில் பாட்டு டியூசன். அதனால் ஓவர் டயம் எல்லாம் என்னால் செய்ய முடியாதுங்க சார்!"

"ஓவர் டைம் செய்து கிடைக்கும் காசை விட டியூஷனில் நல்ல வருமானமோ?" என்று நக்கலடித்து நகைக்க..

"என் வேலையை சொன்னால் செய்வேன். ஆபீஸ் டயமாயிடிச்சி!" என்று அவள் கூற..

அவளைப் புரிந்து கொள்ள முடியாமல் திகைப்போடு நோக்கினான். கௌதம்!

## 10

கௌதம் அவளை அழைத்துப் போய்.. முக்கிய பதவியில் உள்ளவர்களிடம் அறிமுகப்படுத்த.. மரியாதை யோடு நடத்தினர்.

கீர்த்தனா வந்த கொஞ்ச நாட்களிலேயே வேலையைக் கற்றுத் தேர்ந்தாள். அவன் வேலையை சொல்லி முடிக்க.. சில நிமிடங்களிலேயே.. அந்த கோப்புடன் அவன் முன்பு வந்து நின்றாள்.

நல்ல சுறுசுறுப்போடு வேலையில் தவறு செய்யாமல் நேர்த்தியாய் செய்து அவளிடம் பாராட்டைப் பெற்றாள்.



அவளுடைய நேர்மை, காலம் தவறாமைக் கண்டு வியந்தான்.

கீர்த்தனாவும் கூட கௌதமின் வேலை வாங்கும் பாங்கு, இவ்வளவு பெரிய சாம்ராஜ்யத்தை உருவாக்கி.. கட்டிக் காக்கும் திறமையைக் கண்டு வியந்து போனாள்.

நான்கைந்து நாள் சென்றது.

தினம் தினம் அவன் செய்ய வேண்டிய வேலை, செல்ல வேண்டிய இடம்,கையெழுத்து இட வேண்டிய பைல்கள், பார்வையிட வேண்டிய பைல்கள் என்று துல்லியமாய் தொகுத்து, கீர்த்தனா அவனின் கோபத்திற்கு ஆளாகவில்லை.

முதன் முதலாய் அன்று தான் அவளிடம் கடுமையாய் கோபப்பட்டு கண்டிருக்கிறாள்.

'ஸ்பின்னிங் மில்'லை அன்று பார்வையிட செல்லும் நாள். அவன் அழைத்தபோது..

"சார்.. இடம் சொன்னால் என் வண்டியிலேயே வந்து விடுவேன்!" என்று கீர்த்தனா கூற, கோபமானான்.

"நீயோ என் செகரட்டரி! ஆபீஸில் உட்கார்ந்து பார்க்கும் வேலையைவிட என்னோடு ஒவ்வொரு பேக்டரி, மில், காலேஜ், சில்க் பேலஸ் என்று பார்வையிட பாதி நாட்களுக்கு மேல் செல்ல வேண்டும். அடிக்கடி போய் நின்றால் தானே முதலாளி மீது தொழிலாளிகளுக்கு பயம் இருக்கும்...

அதுவும் கௌதம் பில்டர்ஸ்ங்கிற பேர்ல சிட்டியில நிறைய கட்டிடங்கள் கட்டித் தருகிறோம். அதையெல் லாம் நேரில் விசிட் செய்யாமல் ஏ.சி. அறையில் உட் கார்ந்து கொண்டால் நன்றாக வேலை நடக்குமா?

கையில் குறிப்பு நோட்டோடு என்னோடு வந்து நான் சொல்வதை குறித்துக் கொள்வதும்.. உனக்கு தெரிந்த.. நம்ம கம்பெனிக்கு தேவையான ஐடியாக்களைக் கூறு வதும் செகரட்டரியின் கடமைகளில் ஒன்று! என் கண் களுக்கு புலனாகாதது உனக்கு புலனாகும்! அதுவும் பெண் களை செகரட்டரியாய் தேர்ந்தெடுப்பதே உங்களுக்கு தோன்றும் புதுப்புது கருத்துக்களுக்காகவும்தான்! நாம் பார்வையிட மூன்று இடத்திற்கு இன்று செல்ல வேண் டும். ஒவ்வொரு இடத்தின் முகவரியை சொல்லிவிட்டு.. நீ வருவாய் என.. வழிமேல் விழி வைத்து என்னால் காத் திருக்க முடியாது.. மற்ற இடத்தில் ஏற்பட்ட அனுபவத்தில் சிறுதுளி கூட ஏற்படாது. அதுவும் இல்லாமல்.. உன்மேல் பிறரின் தப்பான பார்வை பட்டால் கூட நான் சகித்துக் கொள்ள மாட்டேன்'' என்று அவன் மனதை மறைக்காமல் கூற.. அவள் ஒரு மாதிரி சந்தேகமாய் நோக்க.. கௌதம் தர்மசங்கடத்திற்கு ஆளாகி.. பின் சமாளித்தான்.

"நீ என் செகரட்டரி அல்லவா? உன் பாதுகாப்பு என் கடமை யல்லவா?'' என்று கூறவும், அவனோடு பயமில்லாமல் காரில் செல்ல ஆரம்பித்தாள்.

ஒரு நாள் எல்லோரும் சாப்பிடப் போக.. கௌதம் சாப் பிடாமல் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்க கேட் டாள்.

''பசிக்கல கீர்த்தனா'' என்றவனை விடாமல்.. அக் கறையாய் அவள் உணவில் பாதியைக் கொடுத்து.. அவ னோடு உண்டாள்.

''சாப்பாடு நல்ல டேஸ்ட் கீர்த்தனா. இவ்வளவு ருசி யாய் தினமும் சாப்பிட்டேன்.. அவ்வளவுதான்... நடந்து என்னால் போக முடியாது.. உருண்டுதான் போகணும்!''



''ஜோக்கா...? சகிக்கவே இல்லை!'' இப்போதெல்லாம் அவனோடு சமமாய் சகஜமாய் பேசிப் பழகினாள்.

''இவ்வளவு அருமையா சமைக்கற மாமியார் எனக்கு கிடைக்கப் போறாங்க'' என அவன் முனக,

''என்ன.. என்ன.. சொன்னீங்க?'' என்றாள்.

''இவ்வளவு அருமையா சமைக்கற மாமியார் கிடைக்க.. எவனுக்கு கொடுத்து வச்சிருக்கோன்னு சொன்னேன்'' என்று கூறி சமாளித்து சிரிக்க, அவனுக்கு புரையேறியது.. அவள் ஓடிவந்து தண்ணீர் நீட்டி ''அச்சச்சோ!'' என்று தலையில் தட்டிவிட.. அன்று முழுவதும் அவள் தொட்ட இடத்தை தொட்டுத் தொட்டு சந்தோஷப்பட்டான் கௌதம்.

அந்த மாத சம்பளத்தில் அம்மாவுக்கு வைரத்தோடு.. பாட்டிக்கு பட்டுப்புடவை.. அப்பாவுக்கு பட்டு வேட்டி.. சட்டை என்று வாங்கி கொடுத்து அமர்க்களப் படுத்திவிட் டாள்.

அன்று..

''கீர்த்தனா வேலை முடிஞ்சதா? இன்று காலேஜ் விசிட். நீ இன்னமும் நம்ம காலேஜை பார்க்கலையே! இப்போ கிளம்பினால்தான்.. மாலை ஐந்துக்கெல்லாம் திரும்ப முடியும். கமான் குயிக்'' அவசரப்படுத்தினான்.

கீர்த்தனாவிற்குள் கொஞ்சம் கலவரம். அங்கேத்தான் ரம்யா படிக்கிறாள்.

கல்லூரி வேலை முடிந்து நீண்ட வராண்டாவில் நடந்து வரும்போது.. ஒரு வகுப்பில் இருந்து ''அக்கா.. கீர்த்தனா அக்கா...'' என்று அழைத்துக் கொண்டே ரம்யா ஓடி வர.. இவளுக்கு வியர்த்து விட்டது.

"நீங்க போங்க சார்.. தெரிந்த பெண்! பார்த்துவிட்டு நொடியில் வருகிறேன்" என்று கூறியதும் "அப்படியென்ன ரகசியம் பேசப் போகிறாய்! ம்?" என்று அவன் அசை யாமல் நிற்க.

"அக்கா.. எக்ஸாம் பீஸ் கட்டணும். நானும் இன்னும் சில பேருமே கட்டவில்லை!"

"கட்டிடலாம் நீ போ..." அவளை விரட்டுவதிலேயே குறியாய் இருந்தாள்.

"சொந்தமா கீர்த்தனா?"

"இல்லே சார்.. அக்கா இருக்கும் தெருவில் தான் குடி யிருக்கேன்.. அப்பாவால் என்னை படிக்க வைக்க முடிய வில்லை. என்னை நான்கு வருடமாய் பீஸ் கட்டி படிக்க வைப்பதே.. அக்காத்தான்!" பெருமையாய் கூறிச் சிரித் தாள் அந்தப் பெண்.

"என்ன உளறல்? போ.. போடி!" என்று கீர்த்தனா கூற, புரியாமல் ரம்யா சென்று விட்டாள்.

கௌதம் கீர்த்தனாவை உலக அதிசயத்தை பார்ப்பது போல பார்த்தான். அவன் கூர்ந்து நோக்க.. என்ன சொல்லப் போகிறானோ என்று பயந்து..'தலைகுனிந்தாள்.

"கீர்த்தனா என்னவெல்லாம் இன்னும் அதிசயம் செய் கிறாய்? எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் பேரதிசயப் பட்டு.. என்னைக் கொஞ்சம் சமாளித்துக் கொள்வேன்! உன் ஒவ்வொரு செயலிலும் அன்னை தெரசாவை நினை வூட்டுகிறாய்! ஏய் இதெல்லாம் என்னம்மா?" எண்கள் பளபளக்க கேட்டான்.

கீர்த்தனா சாதாரணமாய் சொன்னாள்.



"நான் ஒன்றும் பெரிதாய் செய்துவிடவில்லை. ரம்யா நல்ல மார்க் வாங்கினாள். அவளுடைய அப்பாவால் படிக்க வைக்க முடியாத கஷ்டம். நுழைவுத் தேர்வில் கொஞ்சம் மார்க் கம்மியாகி விட்டதால்.. கவர்மெண்ட் கோட்டாவில் உங்கள் காலேஜில் சீட் கிடைத்தது. ரம்யாவுக்கு செலவு அதிகம். மருத்துவம் படிக்கும் ஈஸ்வர்க்கு கவர்மெண்ட் காலேஜில் சீட் கிடைத்தது. படிக்கிறான். அவனுக்கு செலவு குறைவுதான்."

"நானும் நிறையவே செய்கிறேன். உன்னோடு கம்பேர் பண்ணும்போது என்னுடையது குறைச்சல் போலத் தெரியுதே! இன்னும் நான் நிறைய செய்யணும் போல வெறி வருது! இவர்களைப் படிக்க வைப்பதால் உனக்கு என்ன ஆதாயம்?"

"எனக்கு ஆதாயம் தேடிக் கொள்ள நான் எதுவும் செய்யவில்லை. எனக்கு ஆத்மத் திருப்தியை தருது. இவர்களுக்கு நான் உதவ இவர்கள் நல்ல நிலைமைக்கு வந்து.. மற்றவர்களுக்கு உதவினால்.. இல்லாதவர் வீட்டில் நன்கு படிக்கும் மாணவர்களும் வெளிச்சத்திற்கு வரு வார்கள் அல்லவா? நான் இரண்டு பேருக்கு உதவ.. அவர்கள் நான்கு பேருக்கு உதவ.. என்று சங்கிலித் தொடராய் போனால் சமுதாயம் முன்னேறுமல்லவா? இதை எதிர்பார்த்துதான் செய்கிறேன் சார்" என்று கூறி முடித்த அவளை ஆசைப் பொங்க பார்த்தான் கௌதம்.

"சரி கீர்த்தனா.. உன் ஆசைகள் நிறைவேற என் வாழ்த்துக்கள்!அம்மா பெயரில் நிறுவி இருக்கும் ட்ரஸ்ட் மூலமா.. வருடத்திற்கு பத்து நாட்கள் இலவச மருத்துவ முகாம் நடத்துவேன். அதை இப்போது செய்யணும். அதற்காக சிட்டியில் இருக்கும் புகழ்பெற்ற டாக்டர்ஸ்

எல்லோரையும் பார்த்து.. அப்பாய்ண்ட்மெண்ட் செய்து.. அவர்களுக்கான சம்பளத்தொகையினை பேசி முடிக்கணும். எல்லா வகை அறுவை சிகிச்சை.. நோய்கள் என்று அனைத்திற்கும் நல்ல மருத்துவம்.. நல்ல மாத்திரை, மருந்துகள் கொடுப்போம். சிட்டியை சுற்றி உள்ள மக்கள் நிறைய பேர் பயன் பெறுவர். இதற்கான வேலையை உன் ஒருத்தியால் பார்த்துக் கொள்ள முடியுமா?'' சந்தேகமாய் கேட்க...

''நிச்சயமாய் சார். காத்திருக்கேன் சார்'' என்று சொல்லி விட்டு தயக்கமாய் அவனைப் பார்க்க, ''என்ன?'' என்று அவன் கேட்டான்.

''பத்து நாளை.. ஒரு மாதமாய் உயர்த்தக் கூடாதா? நம்ம மாவட்டம் கொஞ்சம் மழையில்லாமல் வறண்ட.. வறுமையில் வாடுபவர்கள் உள்ள மாவட்டம். தங்களின் உடல் நலனில் அக்கறை கொள்ள முடியாமல் வசதியற்றவர்கள் நிறையபேர் உள்ளனர். அதனால் தான் சார் சொன்னேன். தவறாய் சொல்லியிருந்தால் மன்னிக்கணும் சார்!''

''ஏய் என்ன இது? மன்னிப்பெல்லாம் கேட்டுட்டு! நீ சொன்னா நல்லதுக்குத்தான் சொல்லுவே! அதிலும் நீ வந்த நாள் முதல்.. நீ சொல்லி எதை மறுத்திருக்கேன்? ம்?'' என்று கேட்டதும்.. பார்த்ததும்.. அவளுக்கு எதையோ உணர்த்தியது. ஆனால், இன்னதென்று புரிந்துதான் கொள்ள முடியவில்லை.



# 11

மருத்துவ முகாம் நடத்துவதற்கு.. ரொம்பவே அலைந்து.. திரிந்து.. நல்ல டாக்டர்களை நியமித்து.. ஒருவழியாய் மருத்துவ முகாமும் முடிந்தது.

ஆனால் கீர்த்தனாவிற்கு தான் அதிக அலைச்சலாய் உடல் நலம் சரியில்லாமல் படுத்து விட்டாள்.

கௌதம் அந்த நாட்களில் காலை, மாலை என சென்று பார்த்துவிட்டு வந்தான். கூடை கூடையாய் ஆப்பிளும்.. சாத்துக்குடியும்.. திராட்சையையும் கொண்டு போய் அவர்கள் வீட்டில் கொடுத்து.. அவனுடைய அன்பைக் காட்ட, 'இப்படி ஒரு நல்ல மனிதனா?' என்று கீர்த்தனாவின் குடும்பமே அவன் புராணம் பாட ஆரம்பித்து விட்டது.

ஓரளவு உடல் நலம் தேறி.. அவள் ஆபீசுக்கு வந்ததும் தான்.. அவனுடைய இருட்டடித்த முகத்திற்கு வெளிச்சம் வந்தது.

இத்தனை நாட்களும் அவள் இல்லாமல் நாட்களை கடத்தியவன்.. சந்தோஷத்தை மறைக்க நிறையவே சிரமப்பட்டான்.

இவள் மற்ற சராசரிப் பெண்களைப் போல் இருந்திருந்தால்.. தன் காதலை இத்தனை நாட்கள் மூடி மறைத்து வைத்திருக்க மாட்டான். தனக்கு ஏற்பட்ட ஈர்ப்பு.. அன்பு போல அவளிடம் ஏற்பட்டதற்கான அறிகுறியே இல்

லாமல் இருக்கும் போது, இவன் தனது காதலைக் கூறப் போய்.. மற்ற கம்பெனிகளில் ராஜினாமா கடிதம் எழுதி வீசியது போல.. வீசிவிட்டு சென்றுவிட்டால்.. அப்புறம் ஒன்றுமே செய்ய முடியாது என்று காத்திருந்தான்.

பழம் பழுக்கும் வரை காத்திருப்பதை விட... பழம் பழுக்க புகைபோடுவது போல.. இனிமேல் மெல்ல ஜாடை மாடையாய்.. மெதுவாய்.. தன் விருப்பத்தை வார்த்தை களாலும்.. செய்கையாலும்.. அன்பொழுக காட்ட வேண் டியது தான் என்று நினைத்தான்.

"கீர்த்தனா.. ரொம்ப முடியாம தெரியறே! உன் சக்திக்கு மீறி.. அதிகப்படியா வேலை வைத்து.. இந்த வெய்யிலில் நீ அலைந்து திரிந்தது தான்.. உன் உடம்புக்கு முடியாமல் போய்விட்டது. இவ்வளவு பெரிய பொறுப்பு உன்னிடம் கொடுத்து கஷ்டப்படுத்திவிட்டேன். ஸாரி.. ஸாரிம்மா" என்று கூறிக் கொண்டே... எழுந்து வந்து... அவள் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு சொன்னான்.

"நீயில்லாமல் என்னால் வேலை பார்க்க முடியல.. ஆபீஸ் தவிர வேறு எங்கும் சைட்டுக்கே போகல. உனக்கு முடியாம போக நானே காரணம் என்ற குற்ற உணர்ச்சியில் தவிச்சிட்டேன். கீர்த்தனா!"

அவன் குரலில் அவனின் தவிப்பு தெரிந்தது. கையை வேறு விடாமல் பேசிக் கொண்டிருக்க.. அவளுக்கு ஒரு மாதிரி இருந்தது.

இதுவரை அப்பாவைத் தவிர.. வேற்று ஆண்களின் ஸ்பரிசத்தையே உணராதவள் சூடான அவன் கைகளுக் குள் இவள் கையிருக்க.. என்னவோ போல் இருந்தது. அவனின் அன்பு பொங்கும் பார்வையும்.. கதகதப்பான கைப்பிடிப்பும்.. ஒருவித மயக்கத்தை தந்தது.



இதுபோல் உணர்ச்சிகளுக்கெல்லாம் அவள் மனம் மயங்கினால் இவள் கொள்கை என்னாவது? இவளுடைய கொள்கையினைக் கேட்டு ஓடியவர்களின் பட்டியல் ஏராளம். இவன் மட்டும் விதிவிலக்காகி நிறைவேற்றி வைப்பானா? மாட்டான்.

கீர்த்தனா தன்னுடைய மனத்திற்கு ஓங்கி ஒரு குட்டு வைத்து.. மெதுவாய் அவன் கைகளுக்குள் சிறைப்பட்டு இருந்த கைகளை மீட்டாள்.

இயல்பாய் நடந்தது தான். ஆனாலும் இந்த கௌதம் பொல்லாதவன்!... பார்வையாலும்... பேச்சாலும்.. சிரிப் பாலும்.. தன்னை மயக்குவது இல்லாமல்.. இதுயென்ன புதுசாய் தன் கைகளையெல்லாம் தொட்டு பேசுவது இனிமேல் இது போல சந்தர்ப்பம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

"ஓ.கே. கீர்த்தனா! முடிஞ்ச வேலையை செய்! முடிய லேன்னா என் ரெஸ்ட் ரூமில் படுத்து ஓய்வெடுத்துக் கொள். என்ன?"

"ம்..." என்று அவள் செல்லவும்.. அவன் அழைத்தான்.

"கீர்த்தனா.. இங்கே வாயேன்! உட்கார். உன்னிடம் ஒரு அபிப்ராயம் கேட்க வேண்டும். நீ இல்லாதப்போ மருத் துவ முகாமில் பிஸியாயிருந்தப்போ.. புதுசா ஒரு விளம் பரப் படம் நம்ம 'செல்வம் கோல்டு பேலஸ்க்கு எடுத்தேன். அது டி.வி.யிலும் வருது! அதைப் பார்த்தாயா?"

"ஓ... பார்த்தேனே!" தன் பெரிய விழிகளை விரித்துச் சொன்னாள்.

"நம்ம தொழிலாளர்கள்... இராப்பகலாகக் கஷ்டப்பட்டு.. பிரத்யேகமா வடிவமைச்ச டிசைன்ஸ் எல்லாம் போட்டு

விளம்பரம் எடுத்தோம். எப்படி இருக்கு? எல்லா டிசைனும் விளம்பரத்தில் நல்லா தெரியுதில்லே!''

''ம்.. சூப்பரா இல்ல தெரியுது!'' என்று கிண்டலாய் கூறினாள்.

''என்ன கீர்த்தனா உனக்கு அந்த விளம்பரம் திருப்தியா இல்லையா? கிண்டலடிக்கறாப் போலத் தெரியுதே! இப்போ மாடலிங் உலகில் கொடிகட்டி பறக்கும் பெண், அதுவும் இல்லாம டாப்ல இருக்கிற மாடலிங் டைரக்டர்.. அவர்கள் அனைவரையும் பிடித்து.. இந்த விளம்பரத்தை எடுக்க நான் பட்டபாடு உனக்கு எப்படி தெரியும்? எத்தனை பணம் கொட்டி இறைச்சிருக்கேன். தெரியுமா? ஆமாம்.. விளம்பரத்திற்கு என்ன?'' புரியாமல் கேட்டான்.

''பின்னே என்ன சார்? நாம செய்யறதோ நகைக்கடை விளம்பரம்! அந்த பெண் அழகு தான்! ஆனால் அவ போட்டிருக்கிற நகைகள் எங்கே தெரியுது?''

''அப்புறம் என்னதான் தெரியுது?'' அக்கறையுடன் கேட்டான் கௌதம்.

''அவ வயிறும்.. நேர்த்தியான இடுப்பும்.. படு கவர்ச்சியான அவ தொப்புளும்... கண்களும்.. கண்ணைக் கூசறாப்போல அவ முன்னழகும் இல்ல தெரியுது! அவள் போட்டிருக்கிற நெக்லஸ், ஆரம், ஒட்டியாணம் எங்கே தெரியுது? பத்தாததுக்கு குளோசப்பல வேற காட்டறான் டைரக்டர். இதிலெல்லாம் எடுத்து கிட்ட அக்கறையை நகையும் காட்ட கொஞ்சம் எடுத்திருக்கலாம்... இல்லையா?'' கீர்த்தனா எரிமலையாய் சீறினாள்.

''..................''



''நகைக்கடை விளம்பரத்தை வெறைச்சிட்டு பார்க்கறது ஆண்கள் அல்ல! லோஹிப் பாவாடையும்... இடுப்பையும் காட்ட!'' முகம் சுளிக்கச் சொன்னாள்.

கௌதம் அவள் கூறக்கூற மலைத்துப் போய் பார்க்க... மேலே தொடர்ந்தாள்.

''பெண்களுக்கான, பிரத்யேகமான விளம்பரத்தில் கவர்ச்சியை விட்டொழுச்சிட்டு.. பாந்தமா சேலைக் கட்டி... நகைகள் கண்ணுக்கு தெரியறாப்போல எடுத்திருக்கணும்! அதை விடுத்து பெண்கள் எல்லோரும் முகம் சுளித்து அருவருக்கத்தக்க விதமாவா பார்க்க விளம்பரம் எடுப்பது? ம்?''

''...........................''

''என் பாட்டி, ச்சே! என்னடி உங்க கடை விளம்பரம் ஒரே கருமமா இருக்கு. உங்க எம்.டி. நல்ல பையனாட்டம் உன்னைப் பார்க்க வந்துட்டுப் போனான். நீ கொஞ்சம் ஜாக்கிரதையாவே இருன்னு சொன்னாங்க'' சொல்லி விட்டு விழுந்து விழுந்து சிரித்தாள்.

''பாட்டி பொல்லாதவங்களா இருப்பாங்க போல!''

''சரி விஷயத்துக்கு வருவோம். அந்த சி.டி.யை கம்ப்யூட்டர்ல போட்டு பார்த்துட்டு.. நான் சொன்னது சரியான்னு சொல்லுங்க!'' கூறிவிட்டு போய் விட்டாள்.

அவன் பார்த்தான். கீர்த்தனா சொன்னது அத்தனையும் உண்மையே!

டைரக்டருக்கு போன் செய்து கத்தினான்.

''திரும்பவும்.. மாடல் ஸ்வப்னாவோட... படப்பிடிப்பு குழுவோட வந்து சேர்!'' கட்டளையிட்டான். எல்லாம்

பணம் படுத்தும் பாடு! அந்த டைரக்டர் விரைவிலேயே வந்தான்.

"கீர்த்தனா.. எப்படி செய்யலாம்?" என்று அவளிடம் அக்கறையாய் கேட்டான். "இனி உன்னைக் கேட்காமல் எதுவுமே செய்ய மாட்டேம்மா...!" வருத்தமான குரலில் கூறினான்.

"மாடல் நல்ல நிறமா இருக்கா! அதனால் திக்கான கலரில்... லேசான டிசைன் செய்த பட்டுச்சேலை கட்டி... நம்ம நகைகளைப் போட்டு எடுத்தா நல்லா இருக்கும். லேசா ஆடினாப் போதும்! நகைகளை மட்டுமே குளோசப்ல காட்டச் சொல்லுங்க...!" 'மட்டுமே'க்கு அழுத்தம் கொடுத்து சொல்ல.. கௌதம் அவமானமாய் உணர்ந்தான்.

டைரக்டர் கௌதம் அருகில் வந்தான். மெதுவாய் சொன்னான்.

"சார்.. நம்ம ஸ்வப்னாவைவிட... உங்க செகரட்டரி பெட்டரா இருக்காங்க சார். அவங்க கலரும்.. லட்சணமும்.. அந்த நீண்ட கூந்தலும்... கொடியிடையும்... கூடுதலான கண்களின் ஒளியும்.. சூப்பரோ சூப்பர் சார். இந்த விளம்பரத்துக்கு இவங்க சூட்டாவாங்கன்னு தோன்றுகிறது சார்!" டைரக்டர் கண்கள் பளபளக்க வர்ணிக்க...

கௌதமிற்கு எங்கிருந்துதான் அவ்வளவு கோபம் வந்ததோ! ஓங்கி ஓர் அறைவிட்டான். படப்பிடிப்பு குழு மொத்தமும் திரும்பி பார்க்க.. கத்தினான்.

"ராஸ்கல்.. ஸ்டுபிட்... என்ன திமிர் இருந்தா கீர்த்தனாவை இந்த அளவு பார்த்திருப்பே! அதுவும் என்னிடமே வர்ணிப்பே! போய்.. போயிடு... ஒரு நிமிடம் நின்றாலும் கொலை காரனாயிடுவேன்!" புயலாய் சீறினான்.



கீர்த்தனா கொதித்துப் போனாள்.

'என்னை எவனோ வர்ணித்தால் இவருக்கு ஏன் கோபம் பொத்துக் கொண்டு வரவேண்டும்!'

## 12

கௌதம் அன்று டைரக்டரை... அவ்வளவு கோபமாய்... கீர்த்தனாவை வர்ணித்த ஒரே காரணத்திற்காக.. அறைந்து தள்ளியதிலிருந்து... கொஞ்சம் நிதானத்தோடு தள்ளியே பழகினாள். ஏதாவது ஐடியா கேட்டால் தெரியலையே? புரியலையே? என்று மழுப்பினாள்.

ஆனால் கௌதமிற்கு அவளிடம் ஏற்பட்ட வித்தியாசம் தெரியாமலேயே.. எப்போதும் போல இருந்தான். அப்புறம் கொஞ்ச நாள் கழித்து.. வாங்கும் சம்பளத்திற்கு விசுவாசமாய் இருக்க வேண்டும் என்று நினைத்து சில்க் பேக்டரிக்கு புதுப்புது டிசைன்களை இரவு பகல் பாராமல் வரைந்து கொடுத்தாள். நகைகளுக்கும் டிசைன் வரைந்து கொடுத்தாள்.

அன்று காலை அலுவலகம் கிளம்பி காரில் செல்லும் போது... செல்போன் சிணுங்கியது. 'கீர்த்தனா காலிங்' என்று இருக்க.. ஓ.கே. பட்டனை ஆன் செய்து கேட்டான்.

"என்ன கீர்த்தனா?"

"இன்று மட்டும் லீவ் தரமுடியுமா?"

"எதுக்கு"

"பர்த் டே!"

"என்ன கீர்த்தனா சொல்லவேயில்லையே! நேற்றே சொல்லியிருக்கக்கூடாதா?" குறைபட்டுக் கொண்டான்.

"ஆஹா... ஒரு முரசு கொண்டு வாங்க. அறிவிச்சுடலாம்" சிரித்தபடி கூறி "லீவ் கிடைக்குமா?" என்றாள்.

"உன்னை என்னுடைய மாந்தோட்டத்திற்கு அழைத்துப் போகலாம் என்றிருந்தேன். இன்றைக்கு குத்தகைக்கு விடறதா அறிவிப்பு கொடுத்து.. ஆட்களும் காத்திருப்பார்களே!"

"சரி போகலாம் சார். ரெடியாயிடறேன். வீட்டுக்கே வந்து பிக்கப் பண்ணிட்டு போயிடறீங்களா? ஒரு பதினோரு மணி வாக்கில்! ம்!"

"ஓ.கே. கீர்த்தனா!" என்று அவள் அழைப்பை நிறுத்தி விட்டு சத்தமாய் பேசினான்.

'ராட்சசி.. எனக்கே எனக்குன்னு பிறந்த நீ உன் பிறந்த நாளை இவ்வளவு லேட்டாவாக சொல்வது? நேற்றே சொல்லியிருந்தால்... இரவு பன்னிரெண்டு வாக்கில் செல்லில் அழைத்து 'ஹேப்பி பர்த்டே கீர்த்தனா!' என்று சொல்லியிருப்பேனே! மறைத்ததற்காக என்ன தண்டனை கொடுக்கலாம். வழக்கமான தண்டனைக்கு ரெடியாகுடி கீர்த்தனா!' சொல்லிவிட்டு.. செல்போன் திரையை உயிர்ப்பித்து.. அவளின் உருவம் வந்ததும் 'என் அழகான கள்ளிக்கு... இந்த அன்பான காதலனின் பரிசு!' என்று முத்தமிட்டான்.

அவளுக்கே தெரியாமல்.. அவளை விதவிதமாய் படம் பிடித்து வைத்திருந்தான்.



பூங்கொத்து ஒன்றை வாங்கிக் கொண்டு... நகைக் கடைக்கு செல்ல... அப்பா அவனை ஆச்சரியமாய் பார்க்க...

"பிரண்டோட சிஸ்டருக்கு பர்த்டேப்பா... மோதிரம் எடுத்துட்டு போகலாம்னு வந்தேன்" என்று அசடு வழிந்து விட்டு.. எல்லா மோதிரங்களையும் அலசிவிட்டு.. கடைசியாய் இரு இதயம் இணைந்தது போல இருந்ததை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

"என்னடா நிஜமாகவே பிரண்டோட சிஸ்டருக்குத்தான் பர்த்டேவா?" என்று திரும்பத் திரும்ப கேட்ட அப்பாவை சமாளித்து விட்டு வர... போதும் போதும் என்றாகி விட்டது.

அவனை அந்த காலையில் கண்ட தமிழ்ச்செல்வியும்.. பாட்டியும் ஆச்சரியமாய் பார்க்க...

"கீர்த்தனா எங்கே? பர்த்டேன்னு இப்பொழுதா சொல்வது?" என்று படபடப்பாய் கௌதம் கேட்டான்.

'அவளுக்கெங்கே பர்த்டே? அவள் முதியோர் இல்லத்துல தத்து எடுத்திருக்கிற பாட்டிக்குப்பா!'

"புரியலையே?"

'கீர்த்தனாவும், அவளோட படிச்ச பிரண்ட்சுகளும்.. அம்மாபேட்டையில இருக்கிற முதியோர் இல்லத்து வயதான தாத்தா பாட்டியை தத்தெடுத்து.. அடிக்கடி போய் பார்த்துட்டு வருவாங்க. அந்த பாட்டிக்குத்தான் பர்த் டேன்னு சொல்லலையா?"

"இல்லையே!" கீர்த்தனாவை நினைத்து ஆச்சரியப் பட்டான்.

தமிழ்ச்செல்வி ஆரம்பித்துக் கொண்டாள்.

"காலையில பசங்களுக்கு படிப்பு... மாலையில பாட்டு வகுப்புன்னு இல்லாதவங்க வீட்டுப் பிள்ளைகளுக்கெல்

லாம் சொல்லித் தருகிறாள். அதுவும் இலவசமாகவே! தவறாம ரத்த தானம் செய்கிறாள்.''

''எவ்வளவு நல்லப் பெண்ணாய் பெற்று வைத்திருக் கிறீர்கள்!''

''போலியோ சொட்டு மருந்து முகாமுக்கும். தடுப்பு ஊசி முகாமுக்கும் தவறாமல் ஓடிடுவா. தன் கண்ணை தானமா எழுதி வச்சிட்டா. அதையெல்லாம் விட ஒரு படி மேலேப் போய் தான் இறந்த பிறகு தன்னுடைய உடலை மருத்துவ கல்லூரி மாணவர்களுடைய படிப்புக்காக... தஞ்சாவூர் மெடிக்கல் காலேஜுக்கு எழுதி வைச்சிருக்காள். என்ன பெண் இவள்? எதையும் நாங்கள் சொல்வதை கேட்பது இல்லை.'' ஆத்திரத்தோடு சொன்னாள்.

தமிழ்ச்செல்வி பேசப்பேச கீர்த்தனா அவன் மனதில் உயர்ந்துக் கொண்டேப் போனாள். அவன் ஆச்சரியத்தின் சிகரத்திற்கே போனான்.

''அவள் வாழறதே இந்த சமுதாயத்திற்குன்னு சொல்லிவிட்டு... கிறுக்கி மண்டைக்கனம் பிடிச்சி... தன் வாழ்க்கைப் பற்றியே சிந்திக்காம இருக்காப்பா. நீங்க அவளுக்கு கொஞ்சம் அறிவுரை சொல்லக் கூடாதா தம்பி?''

''எவ்வளவு நல்ல மனம் கொண்ட பெண்ணை பெத்து வச்சிருக்கீங்களே ஆன்ட்டி! பெருமைப்பட்டுக்க வேண் டாமா?''

''நல்லா சொல்லுப்பா. இவ புத்தியில படட்டும். ஊரா ருக்கெல்லாம் என் பேத்தி அருமை தெரியுது! இவளுக்கு தெரிய மாட்டேங்குதே'' பாட்டி சலித்துக் கொண்டாள்.



''இவ்வளவு நல்லப் பெண்ணை பெற்ற உங்களுக்கு ஏதாவது ப்ரசண்ட் பண்ணணுமே! கடைக்கு வரீங்களா ஆன்ட்டி?''

''கீர்த்தனாவுக்கு இதெல்லாம் பிடிக்காதுப்பா! பத்ர காளியாயிடுவாள்! நீங்க சொன்னதே சந்தோஷம். எவ் வளவு தங்கமான பிள்ளையா இருக்கீங்களே!'' வியந்து போனாள்.

அவன் முதியோர் இல்லம் சென்றபோது... வெளியே மரத்தடியில் இருந்த பெஞ்சில்... ஐவர் படையும் இருக்க... ஒரு வயதான பெரியவரும்...பாட்டியும் இருந்தனர்.

கௌதமைக் கண்ட கீர்த்தனாவிற்கும்... தோழிகள் பட்டாளத்திற்கும் ஆச்சரியம்!

''என்ன சார்.. பர்த்டேன்னு கீர்த்தனா சொன்னதும்.. அவளுக்குத்தான்னு தவறா நினைச்சி வந்துட்டீங்களா?'' என்று தேவி கிண்டலடித்தாள்.

''சரியா சொல்லக் கூடாதா கீர்த்தனா?'' தவிப்பான குரலில் கேட்டான் கௌதம்.

''சார் ஏமாந்துட்டாரே! சார் அசடு வழியுது துடைச் சிக்குங்க! கர்ச்சீப் இருக்கா? இல்ல கீர்த்தனாகிட்ட வாங்கிக் கொடுக்கட்டுமா?'' தேவி கூற..

''உனக்கு வாலில்லா குறை ஒன்றுதான் போல!'' என்றவன் ''ஹேப்பி பர்த்டே பாட்டி!'' பூங்கொத்தையும்... மோதிரத்தையும் கொடுத்தான்.

''கீர்த்தனா இந்த இல்லத்தலைவி தெரிஞ்சவங்க... நான் போய் பார்த்துட்டு வரேன்'' என்றான்.

''ஏய் கீர்த்தனா.. உன் எம்.டி. உன்னை விரும்பறா ரோன்னு தோணுதுடி!'' தேவி சொல்ல..

''ச்சீ... வாயை கழுவுடி! அவர் ஜென்டில்மேன்!'' கோபப்பட்டாள் கீர்த்தனா.

''கோபப்படாதே! இந்த மோதிரம் சொல்லுதே!''

''போடி.. அவருக்கு அப்படி ஒரு எண்ணமே இல்லை! இருந்தா என்னிடம் சொல்லியிருப்பாரில்லையா?''

''அன்று யாரோ ஒரு டைரக்டர் வர்ணிக்க அறைஞ்சார். இன்று பர்த் டேன்னு சொன்னதும்... பூங்கொத்தோடும், மோதிரத்தோடும் பறந்து ஓடி வருகிறார். எதுக்கு அறையணும்? எதுக்கு அவசரமா ஆபீஸ் கூட போகாமல் ஓடி வரணும்? ம்ம்... நீயோ சாமியார்! உனக்கு எந்த குறிப்பு கொடுத்தாலும் புரிஞ்சிக்காத மட்டி ஜென்மம்! போடி இவளே!''

தேவி சொல்லி முடிக்க, கீர்த்தனாவின் உள்ளம் உலைக் களமாய் கொதித்தது!

## 13

என்றைக்கும் இல்லாத சுட்டெரிக்கும் வெயில் நகரத்தை கொளுத்தியெடுத்தது.

மதியம் மூன்று மணியளவில் கௌதம் முன் வந்து நின்றாள் கீர்த்தனா.

''என்ன கீர்த்தனா.. அன்றைக்கு பர்த் டேன்னு சொல்லி முட்டாளாக்கியது போல... இன்றைக்கு என்ன விஷயம் வைத்திருக்கிறாய்? அந்த முதியோர் இல்லத்துக்கு



வருடத்திற்கு ஒருமுறை பெரிய அளவில் டொனேஷன் தரேன் தான்! ஆனாலும் உன் செயலால் என்னுடையது தாழ்ந்துவிட்டது போலத் தெரியுது. பணத்தை விட அன்பு தானே பெரியது! பாசம் தானே பெரியது! உன்னிடம் தோற்றுக் கொண்டே போவது போலத் தெரிகிறது. எனக்கும் ரெண்டு தாத்தா, பாட்டிகளைத் தத்தெடுத்துக் கொடு! நீ போகும் போது நானும் வருகிறேன். நிஜமாத்தான். அப்படி கண்களை விரிக்காதே! சரி... என்ன விஷயம்?''

''இன்று என்னை பெண் பார்க்க திருச்சியிலிருந்து வருகிறார்கள். கொஞ்சம் சீக்கிரம் போகணும்!''

''கீர்த்தனா... இது ஒன்றும் ஜோக் இல்லையே! என்னை முட்டாளாக்கலையே! நிஜமாச் சொல்லுமா? உன்னையா? உன் தோழியையா?'' வேகமாய் கேட்டான் கௌதம்.

''இதுல போய் யாராவது ஜோக்கடிப்பாங்களா சார்! என்னைத்தான்!'' அவள் கூறி முடிக்கவும், கௌதமிற்கு கோபம் வந்துவிட்டது. அனல் கக்கும் கண்களுடன் கத்தினான்.

''ச்சே! வந்து எவ்வளவு நாள் இருக்கும்? வேலைக்குன்னு வரவேண்டியது.. அரை குறையா இருந்து.. முழுமையா வேலை கத்துக்கும்போது.. அவன் வரான் இவன் வரான்னு சொல்லி போயிட வேண்டியது. தீபாவளி நெருங்கிட்டு இருக்கு.. நீ வரைஞ்சி கொடுத்த டிசைன்ல செய்த பட்டுக்கு இங்கேயும்.. வெளிநாடுகளிலும் ரொம்ப கிராக்கி. விற்பனை அமோகம்! ஏற்றுமதியும் இந்த வருடம் அதிகம். இப்படிப்பட்ட நேரத்தில்... கல்யாணத்துக்கு என்ன அவசரம்? கொஞ்ச நாள் பொறு! சீட்டுக்கு போ'' விரட்டினான்.

''வீட்டுல... நான் போகலைன்னா திட்டுவாங்க சார்!'' அங்கேயே நின்று... முனகினாள்.

"போ... போய் தொலை!" சீறினான்.

'என்னைப் பெண் பார்க்க வந்தால்.. இவருக்கு ஏன் கோபம்? ஒரு வேளை தேவி சொன்னது போல... ச்சே இருக் காது. வீணாக கற்பனைப் பண்ணிக் கொள்ளாதே மனமே!'

அவள் போய்விட... கௌதம் இங்கே கொதித்துப் போய் இருந்தான்.

'என்றைக்கு உன்னைப் பார்த்தேனோ அன்றே.. உன்னை என்னவளாய் நினைத்து.. தினமும் கனவில்... கற்பனையில் குடும்பம் நடத்தி பிள்ளைகளையும் பெற்று சீராட்டுகிறாய். எனக்காகவே பிறந்தவள் நீ என்று நானிருக்க.. எவனோ ஒரு பன்னாடை வருவானாம்... அவன் முன்பு அலங்காரம் பண்ணிக் கொண்டு நிற்பாளாம். அவன் உச்சி முதல் பாதம் வரை இவனை பார்த்து ரசிக்க.. ஓ... நோ... விடமாட்டேன்டி. உன்னை அவன் முன்பு நிற்கவே விடமாட்டேன். போடி.. போ... வருகிறேன்டி உன் பின் னோடே! உடனே உன்னிடம் என் காதலைச் சொல்லி... அதுவும் மொத்தமான மஞ்சள் கயிற்றை உன் கழுத்தில் கட்டுகிறேன் பார்! வித்தியாசமானவளாய் இருக்கிறாயே என்று... மெல்ல மெல்ல... உன்னிடத்தில் என் மேல் ப்ரியத்தை காதலை ஏற்படுத்தி... பின்னர் கேட்கலாம் என்று இருந்தால்...'

கௌதம் நரம்புகள் புடைக்க... கோபத்தில் வெறி கொண்ட சிங்கமாய் அறைக்குள் உலாவினான். ஒரு இரண்டு மணி நேரம் கடந்து... அவள் வீட்டிற்கு செல்ல... மாப்பிள்ளையும்... பெற்றவர்களும் அமர்ந்திருக்க... உள்ளேயிருந்து கீர்த்தனா எளிமையான பட்டில்... தேவதை கணக்காய்... காபி அடங்கிய ட்ரேயை ஏந்தி வர... சட்டென கீர்த்தனாவும்... வீட்டினரும் அவனை அங்கே எதிர்பார்க்கவில்லை!



காபி ட்ரேவை வாங்கி தமிழ்ச்செல்வியிடம் கொடுத் தான். படபடப்பாய் பேசினான்.

"ஸாரி ஆன்ட்டி... ஸாரி சார்.. செவ்வாய் பேட்டையில ஒரு பெரிய ஹோட்டல் கட்டிட்டு இருக்கோம் இல்லையா...? நம்ம பில்டர்க்காக!' அதுல என்ஜினீயருக்கும்... மேஸ் திரிக்கும் ஏதோ பிரச்சினையாம்! போன் வந்தது. அவசரம்! கீர்த்தனா இல்லாமல் என்னால் ஒன்றுமே முடியாது மாப் பிள்ளை சார்! கொஞ்சம் காத்திருங்கள். ஸாரி சார்... ஸாரி ஆன்ட்டி... கமான் குயிக் கீர்த்தனா... என்ன பார்க்கிறாய்? யாரும் ஒன்றுமே சொல்ல மாட்டார்கள். வா என்னோடு" உரிமையாய்... அந்த மாப்பிள்ளை பையன் பார்க்க... அவள் கைப்பிடித்து அழைத்துப் போனான்.

கார் வேகமாய் சென்றுக் கொண்டிருந்தது.

கௌதம் முகமே சரியில்லாததால்... அவளும் இந்த அதிர்ச்சியிலிருந்து மீளாததால்... தலைகுனிந்து அமர்ந் திருக்க... அவன் அவளை இமைக்காமல் பார்ப்பதும்... பின்னர் ரோட்டில் கவனத்தை வைப்பதும்... திரும்பவும் விழி விரிய... அவளை தாபத்தோடு அவள் அழகைப் பருகுவதுமாய் அவன் வந்தான்.

'நான்பாட்டுக்கு சாமியார் போல இருந்தேன். என் கண்முன்னே தென்றலாய் வந்து... என்னை பித்துப் பிடிக்க வைத்து... எவன் முன்போ நிற்கப் போனால்... பார்த்துக் கொண்டிருக்க இந்த கௌதம் என்ன முட்டாளா? இன்றே... இன்றே... என் மனதில் உள்ள ஆசைகளை உன்னிடம் சொல்லாமல் விடமாட்டேன் கீர்த்தனா...' மனதைக் கட்டுப்படுத்த முடியாமல் ஸ்டீரிங் வீலில் கைகளைக் குத்திக் கொண்டான்.

"பெரிய பிரச்சினையா என்ன?" அவள் கேட்க....

அவன் பதிலேதும் கூறவில்லை. அவ்வளவு கோபம் அவனுக்கு!

கட்டிடத்தின் முன்பு காரை நிறுத்தி... "இரு வரு கிறேன். காஸெட் போட்டு பாட்டுக் கேள். பிரச்சினை எந்த அளவு இருக்கிறது? என்று பார்த்து விட்டு.. உன்னை அழைக்கிறேன்!" என்றவன் உள்ளேப் போய் என்ஜினீயர் நண்பனுடன் உட்கார்ந்து சிரித்துப் பேசி... சிகரெட் பற்ற வைத்து மகிழ்ச்சியாய் இருந்து விட்டு வந்தான்.

உள்ளே போனவன் அரைமணியாகியும் வரவில்லையே என்று பதறிப்போய் இவள் உட்கார்ந்து இருக்க.. "ஒன் றுமே இல்லாததை ஊதி பெரிசாக்கிவிட்டான் கீர்த்தனா அந்த மடையன்! பிரச்சினையை நானே முடிச்சிட்டேன்!" என்று கூலாக சொல்லிக் கொண்டே வந்தான்.

"அப்போ வீட்டுக்கு போகலாமா? அங்கே காத்திருப் பார்களே!"

"பொறு... பொறு... என்ன அவசரம்? சேகோ பேக்டரி வரை போயிட்டு திரும்பிடலாம். அங்கே போவதும்... அங் குள்ள மக்களோடு பேசுவதும் உனக்கு ரொம்பவே பிடிக் குமே! உன்னை அவனுக்கு பிடித்திருந்தால் காத்திருப்பான் நீ வரும் வரை!" கௌதமின் குரல் கேலியாய் ஒலித்தது.

அவன் அருகில் உள்ள பேக்டரிக்கு போகாமல்... தொலைவில் உள்ளதற்கு அழைத்துப் போனான்.

அவன் அலுவலக அறைக்கு சென்று மானேஜரிடம் கணக்குகளைக் கேட்டுப் பார்க்க... இவள் அங்கே வேலை செய்துவிட்டு திரும்புபவர்களிடம் பேசிக் கொண்டிருந் தாள். அங்கு பணிபுரிவோர் அனைவருக்கும்.. அங்கேயே நீண்ட ஓட்டுக் கட்டிடங்கள் கட்டி கொடுத்திருந்தான்.



அதிலேயே அவர்கள் தங்கி குடும்பம் குடும்பமாய் வேலைப் பார்த்தனர்.

கௌதம் வேலை முடிந்து அவளிடம் வந்து "கிளம்ப லாமா?" என்றான்.

"சார் இவர்களுக்கு கொடுக்கும் சம்பளம் ரொம்பவே குறைச்சல்னு சொன்னேனே.. கொஞ்சம் அதிகமாகக் கொடுக்கக் கூடாதா?"

"படிக்காதவர்களுக்கு தினம் நூறு போதாதா? பத்தாத தற்கு குடியிருப்பு... தீபாவளி, பொங்கல்ல போனஸ்... இலவச துணிமணிகள்! இதைவிட இன்னும் என்ன செய்யணும்?"

"ம்கூம்.. இன்றைய விலைவாசியில் சம்பளம் குறைவு தான்!"

"ஓ.கே. நீ சொன்னால் சரியாதான் சொல்லுவே! செய் துடலாம் கீர்த்தனா!"

"உங்ககிட்ட வேலை செய்யும் தொழிலாளி வீட்டு பிள்ளைகளுக்கும் கான்வென்ட்ல படிக்கணும்ன்னு ஆசையிருக்காதா? அவங்களுக்காக.. அவங்க வீட்டுப் பிள்ளைகள் படிக்கவே ஒரு கான்வென்ட் கட்டிக் கொடுத்தா.. கூடுதலான சந்தோஷத்தில்.. தன்னுடைய முதலாளிக்கு இன்னமுமே உழைக்க காத்திருப்பாங்க... நீங்க நினைத் தால் முடியும் சார்!" மெதுவான குரலில் கூறினாள்.

"ம்.. அப்புறம்?"

"பகலெல்லாம் வெயிலில் கஷ்டப்பட்டு விட்டு... இரவில் கிடைக்கும் சுகத்தைக் கூட அனுபவிக்க முடியாமல் சின்ன வீட்டில் ரெண்டு... மூன்று குழந்தைகளோட குடித்தனம் நடத்துவது கஷ்டமில்லையா? உங்களுக்காகவே உழைப்

பவர்களுக்கு... நல்லதாய் ஒரு ஹால்... சமையலறை... படுக்கையறையோடு ஒரு குடியிருப்பு ஏற்படுத்தி தரக் கூடாதா? அவங்க கஷ்டம் உங்களுக்கு புரியாது? ஏன்னா ஒரு கல்யாணம் உங்களுக்கு நடந்திருந்தால் தெரியும்! ஆமாம் சார்" என்று அவள் சொல்ல... அவளருகே வந்து.. அவள் முகத்தை உற்று நோக்கினான் பின்பு...

"இந்த விஷயம் அம்மணிக்கு மட்டும் எப்படி தெரியுமாம்? ம்ம்? அங்க மட்டும் திருமணமாயிடிச்சா என்ன?" அவன் அப்படி கூறி சிரிக்கவும்.

அவளுடைய முகம் நாணத்தில்.. அந்திவானமாய் சிவந்து விட்டது.

"போங்க சார்!" அவள் வெட்கத்தோடு நிலம் நோக்க...

"கீர்த்தனா.. நீ இப்படி வெட்கப்படும் போது எவ்வளவு அழகாய் இருக்கிறாய்? கூடுதலாய்.. இந்த பட்டில் எப்படி ஜொலிக்கிறாய்! தெரியுமா?" கௌதம் தாபத்தோடு அவள் முகவாயை... ஒரு விரலால் தொட்டு நிமிர்த்த.. அவள் பதறி நகர.. அவளுக்கு பின்புறம் சிமெண்ட் பெயர்ந்து சிறுபள்ளம் இருந்து... தடுமாறி விழப் போனவளை... ஓடி வந்து விழாமல் கட்டியணைத்துக் கொண்டான் கௌதம்.

அந்த தீண்டுதலில்... தீப்பற்றிக் கொண்டது போல இருந்தது!

கீர்த்தனா தன்னை சமாளித்து.. அவளிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள். மனசே இல்லாமல் தான் விட்டான் கௌதம்.

"காபி தண்ணீ குடிக்கிறீங்களா சின்னம்மா? சின்னம்மா எம்புட்டு அழகா இருக்கீங்க! பொருத்தமாவும் இருப்பீங்க. பெரியய்யா.. பெரியம்மாவெல்லாம் சுகமா சின்னய்யா?" கேட்டுவிட்டு ஒரு வயதான மூதாட்டி சென்றாள்.



"தொழிலாளிங்க கூலி.. பிள்ளைங்க படிப்பு... குடியிருப்பு எல்லாம் கொஞ்சம் ஞாபகம் வச்சிக்கங்க சார்! எவ்வளவு பாசமாய் இருக்கிறார்கள்... எல்லோருமே! அதுயென்ன அந்தம்மா என்னை புதுசா சின்னம்மான்னு கூப்பிடறாங்க!"

"அப்பாவை பெரியய்யா.. அம்மாவை பெரியம்மா.. என்னை சின்னய்யா.. உன்னை சின்னம்மான்னா என்ன அர்த்தம்னு தெரியாதா? நீ... நான் கல்யாணம் பண்ணிக்க போற பொண்ணுன்னு நினைச்சுட்டாங்க!"

"ஐயோ! இல்லேன்னு சொல்லிட்டு வந்துடவா?" அவசரம் காட்டினாள்.

"பொறு என்ன அவசரம்? பிறகு வந்தால் சொல்லிக் கொள்ளலாம். கீர்த்தனா... நீ சொல்வதையெல்லாம் செய்வதற்கு காத்திருக்கேன்... நான் சொல்வதை நீ கேட்பாயா?" தாபத்தோடு கூறினான் கௌதம்.

'இதுதான் தருணம். ஏய் மடையா... உன் காதலை சொல்லிவிடுடா' என்று மனம் கூற... கௌதமும் சொல்வதற்கு ஆயத்தமாகும் போது... செல்போன் அழைத்தது.

"கௌதம்.. உங்க அம்மாவுக்கு ஏதோ சாதாரண காய்ச்சல்ன்னு நினைச்சி அசால்டா இருந்தோம்! இப்போ சீரியஸ்! ஹாஸ்பிடல் கோகுலத்துல அட்மிட் பண்ணியிருக்கேன். உன் பெயரை சொல்லியே பினாத்திட்டு இருக்கா... உடனே வாப்பா" அப்பா பதற்றமாய் கூற... ஆடி விட்டான்.

பின்பு கார் வேகமாய் ஆஸ்பத்திரியை நோக்கி சீறிப் பாய்ந்தது.

"அம்மா... அம்மா... கௌதம்மா... கண்களை திறங்கம்மா" சிறுபிள்ளையாய் அழுதவனிடம்.

"ஆன்ட்டிக்கு ஒண்ணுமில்லே! நல்லா ட்ரீட்மெண்ட் கொடுத்தா சீக்கிரமே குணமாயிடும். அட... இந்த ஆன்ட்டி, அங்கிளை பார்த்திருக்கேனே! ஞாபகம் வந்துடிச்சி. தை கிருத்திகைக்கு கோயில்ல சந்திச்சேனே... தண்ணீர் கூட கொடுத்தீங்களே... அந்த பெண் நான் தான்! சார்கிட்டதான் பி.ஏ.வா வொர்க் பண்றேன் ஆன்ட்டி" என்றவள் கையை விஜயலட்சுமி கெட்டியாய் பிடித்துக் கொண்டாள்.

கௌதம், கீர்த்தனா இருவரையும் அருகருகே பார்க்க... அவளுள் ஆசைகள் தோன்றி... அலைக்கழித்து... கண்களில் கண்ணீரை வரவழைத்தது.

"அச்சச்சோ... என்ன ஆன்ட்டி? இவ்ளோ பெரியவங்க வெறும் பீவருக்கெல்லாம் அழுவாங்களா? ஏற்கனவே உங்கப்பிள்ளை குழந்தையாகவே மாறிட்டார். நீங்க அழுதா அவரும் கஷ்டப்படுவாரே! அழக்கூடாது... சொல்றேன் இல்ல!...." என்று பாசமாய்... மென்மையாய் அன்பொழுக கூறியவள் தனது முந்தானையால் விஜயலட்சுமியின் முகத்தை துடைக்க அவளுக்கு மேலும் அழுகை வந்து உடல் குலுங்கியது.

கீர்த்தனா செல்லில் விஷயம் சொல்ல, வீட்டிலிருந்து அனைவரும் வந்து விட்டனர்.

"சார்.. அம்மாவுக்கு துணையா இன்று இரவு மட்டும் கீர்த்தனாவை விட்டுட்டு போக முடியுமா?"

"கீர்த்தனா பத்திரமாய் இரும்மா" என்று ஆஸ்பத்தியில் விட்டுவிட்டு வெளியேறிய கிருபாகரனை மட்டும் பிடித்துக் கொண்டான்.

"அங்கிள்... என்மேல் கோபமா? நான் அப்படி உங்களை அழைக்கலாமா? அம்மாவுக்கு உடம்பு நல்லானதும்...



கீர்த்தனாகிட்டேயும் கன்பர்ம் பண்ணிட்டு அப்புறமா முறைப்படி பெண் கேட்டு உங்க வீட்டுக்கு வருகிறேன். அதுவரை கீர்த்தனாவிடம் சொல்லாதீர்கள். எனக்கு கீர்த்தனாவை ரொம்ப பிடிச்சிருக்கு அங்கிள்! எனக்கு சொந்தமாகப் போறவளை எவனோ ஒருவன் பார்ப்பதா என்ற கோபத்தில் தான்... நான் மாலை அவ்வாறு நடந்துக் கொண்டேன். மரியாதை குறைவாய் நடந்திருந்தால் என்னை மன்னிக்கணும் அங்கிள்! ப்ளீஸ்..." அவன் கெஞ்சினான்.

எவ்வளவு பெரிய இடம்!

கௌதம் சொன்ன செய்தியால் அப்படியே பூரித்துப் போனார் கிருபாகரன். 'என் செல்ல குட்டிக்கு இந்த அளவு அதிர்ஷ்டமா?' என்று வியந்தார்.

இந்த அதிர்ஷ்டத்தில் கூடிய சீக்கிரமே மண் விழப் போவது தெரியாமல்!

## 14

கீர்த்தனாவிற்கு பட்டுச் சேலையில் கசகசத்தது. மாற்றுத்துணி கூட இல்லாமல்... இன்று இரவை எவ்வாறு கழிப்பது என கவலையுடன் இருந்த போது... கௌதம் பாலிதீன் பை ஒன்றை நீட்ட... பிரித்துப் பார்த்தவள் திகைத்தாள்.

"நைட்டி.. உள்ளாடைகள்."

"அளவு தெரியாது. தோராயமாய் எடுத்து வந்தேன்!"

"இவ்ளோ காஸ்ட்லியான நைட்டி தேவையா?"

''எங்க கடையில் எடுத்தது. இதுக்கு மேல மட்டமா எனக்கு எடுக்கத் தெரியாதும்மா! இந்த உதவியை உயிர் உள்ளவரை மறக்க மாட்டேன் கீர்த்தனா'' அவன் கூற... அவளுக்கோ கோபம் வந்துவிட்டது.

''என்ன சார்... என்னை கேவலப்படுத்தறாப்போல இருக்கு உங்க பேச்சு! உங்களுக்கு உதவாமல்... போங்க சார்... போய் நிம்மதியா தூங்கி எழுந்து வாங்க'' என்றாள்.

மறுநாள்.

''ஒரே ஒரு உதவி மட்டும் செய்ய முடியுமாம்மா?'' விஜயலட்சுமி கேட்க,

''என்ன ஆன்ட்டி?''

''நான் ஆஸ்பத்திரியில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகும் வரை... என்னோடு இருக்க முடியுமா?''

''சார் தான்...'' என்று இழுத்தவளிடம்... அங்கே வந்த கௌதம் சொன்னான்.

''எனக்கு சம்மதம் கீர்த்தனா. எவ்வளவு வேலையானாலும்... சமாளித்துக் கொள்வேன். என் ஆசை அம்மா சீக்கிரமே குணமாகணும்!''

செல்வமும் உள்ளே நுழைந்தார்.

''கீர்த்தனாவோட கவனிப்பில் சீக்கிரமே வீடு திரும்பிடுவேன். என்னங்க... நீங்களும் கவலையேப் படாமல்... உங்க வேலையைப் பாருங்க!'' என்று செல்வத்தைப் பார்த்து கூறினாள்.

கீர்த்தனா வேளாவேளைக்கு மருந்து, மாத்திரை, உணவு என்று கொடுத்து கண்ணும் கருத்துமாய் பார்த்துக் கொண்டாள். அடிக்கடி டாக்டரை அழைத்து வந்து



காட்டினாள். உடை மாற்றி... உடம்பு துடைத்து... தலைவாரி என்று அனைத்து வேலைகளுக்கும் கஷ்டப்படாமல், அன்புடன் கவனித்துக் கொண்டாள்.

தினமும் தமிழ்ச்செல்வியும், கிருபாகரனும் வந்து பார்த்துவிட்டுச் சென்றனர். கம்பெனி வொர்க்கர்ஸின் படையெடுப்பால் ஆஸ்பத்திரியே கூட்டமாய் காணப்பட்டது.

அன்று மாலை கௌதம் வந்தான்.

''பரவாயில்லையா அம்மா?'' என்று கேட்டு.. ஆசையாய் கன்னத்தில் முத்தமிட்டான்.

''கீர்த்தனா இல்லேன்னா... இந்த அளவு தேறியிருக்க முடியாதுப்பா... நான் வாய் ஓயாமல் ஒரு பெண்ணைப் பற்றி பேசுவேனே ஸ்கூட்டி பெண்.... அது இவள்தான்'' விஜயலட்சுமி கூற... கௌதம் ஆச்சரியமாய் நோக்கி விட்டு.... ''நான் கூட சொல்வேனே... என்னை படியில் இருந்து விழாமல் காப்பாத்தினால் ஒருத்தின்னு... அதுவும் இவள் தான்!''

கீர்த்தனா... கௌதமை ஆச்சரியத்தோடு நோக்கி... ''எங்கே? எப்போ?'' என்று கேட்டாள்.

''சென்னிமலை கோவில்ல.. அதுவும் தைக்கிருத்திகை அன்றுதான்!''

''எனக்கு அப்படி ஒரு ஞாபகமில்லையே! உங்களை முதல் முதலா பார்த்தது போலீஸ் ஸ்டேஷன்ல இல்லே!''

''அன்று நீ எரிமலையாய் வெடித்து.. குற்றம் சுமத்தியதற்கு... வேறொரு பெண்ணாய் இருந்தால்... ஏதாவது பொய் கேஸ் போட்டு உள்ளே தள்ளியிருக்க மாட்டேன்!''

"என்ன ஒரு அநியாயமாய் பேசறீங்க சார்! அவ்வளவு கடுமையானவரா நீங்கள்! அப்படி கூட செய்வீங்களா பணமிருந்தா...?" கீர்த்தனா சீற...

"அம்மா... கோபத்துல ரொம்பவே அழகாயிருக்கா... இல்லே!"

"ச்சோ! விளையாட அளவில்லையா? அவன் சும்மா... உன்னை சீண்டறாம்மா... என் பிள்ளை அப்படியெல்லாம் செய்யமாட்டான். நல்லவன் அம்மா" விஜயலட்சுமி கூறவும் அடங்கினாள் கீர்த்தனா.

"விளையாடினது போதுமா கீர்த்தனா?" ஆபீஸ் விஷயம் பேசலாம். நம்ம பருப்பு கம்பெனி விற்பனை இந்த வருடம் ரொம்ப டல்லா இருக்கு! என் தாத்தா நிறுவியது. நாங்கள் இத்தனை உயரம் வளர அதுவே அடித்தளம். ஏகப்பட்ட போட்டி கம்பெனிகள் வந்தாச்சி! போட்டியை சமாளித்து... விற்பனையை அதிகரிக்க என்ன செய்யலாம்? அம்மா உங்களுக்கு ஏதாவது யோசனை தோன்றுதா?"

"ம்கூம்.. சமையற்கட்டு, நீ, அப்பாவை தவிர எனக்கு எதுவுமே தெரியாது!" உதட்டைப் பிதுக்கினாள்.

கீர்த்தனா யோசனையாய்... நெற்றியில் ... ஒற்றை விரலால் தேய்த்துவிட்டு... சொன்னாள்.

"என் ஐடியா பிடிச்சிருக்கா பாருங்க சார். துவரம் பருப்பில்.., ஒரு கிலோ பாக்கெட்டில்... ஆயிரம் பாக்கெட்டிற்கு ஒன்றில்... இலவச பெரிய குக்கர் பரிசு கூப்பனும். அரை கிலோ பாக்கெட்டில் அதைப் போலவே ஆயிரத்திற்கு ஒன்றில் சிறிய குக்கர் பரிசு கூப்பனும் வைக்கலாம்."

"ம்... அப்புறம்?"



"உளுத்தம் பருப்பில் பெரிய கிரைண்டர், மிக்ஸி கூப்பன் வைத்தால்... போட்டியை சமாளிக்கலாம். டி.வி. ரேடியோவில் நல்லா விளம்பரப்படுத்திடலாம். இதனால் உங்களுக்கு நஷ்டம் வர வாய்ப்பில்லை. நல்லதரமான குக்கர், கிரைண்டர் கம்பெனியிடம் அதிக பொருட்கள் வாங்கினால்... சலுகை விலைக்கே தர வாய்ப்பிருக்கு... செய்து பாருங்கள். விற்பனை உயர்ந்தால் தொடரலாம்.. இல்லையென்றால் விட்டுவிட்டு வேறு யோசிப்போம்!"

"ஸ்டாக் நிறைய இருக்கு. அதுவும் இல்லாமல் வியாபாரிகளிடம் உள்ளதற்கு என்ன செய்யலாம்" கௌதம் கவலையாய் கேட்டான்.

"கூப்பனை ரெடி பண்ணி... சில பேக்கிங்குகளை பிரித்து வையுங்கள். கொள்முதல் அதிகம் செய்த வியாபாரிகளை நாமே நாடிச் சென்று... கூப்பனை உள்ளே வைத்துக் கொடுக்கலாம்... எனக்கு நம்பிக்கை இருக்கு சார்! வெற்றி பெறுவோம்! டோண்ட் ஒர்ரி...!"

அம்மாவின் முகத்திலும் திருப்தியை கண்டான் கௌதம்.

"எனக்கு கூட பிடிச்சிருக்கும்மா! இதனால் விற்பனை உயரும் என்ற நம்பிக்கையிருக்கு!" சந்தோஷத்தில் அம்மாவை கட்டி முத்தமிட்டான்.

"எப்போ பாரு சின்ன பிள்ளையாட்டம்.. இதே வேலையாப் போச்சிம்மா...! இவனுக்குன்னு ஒருத்தி வந்திட்டா... இந்த இம்சையிலிருந்து எனக்கு விடுதலை! அந்த விடுதலை எப்போ கிடைக்குமோ!" விஜயலட்சுமி கூற... கீர்த்தனா சிரித்துவிட்டு சொன்னாள்.

''சார் மஞ்சு அவசரமாய் பார்க்க வேண்டும். என்றாள். ஒருமணி நேரத்தில் திரும்பிடறேன் சார்'' என்று கேட்டு விட்டு ஓடினாள்.

செல்வமும் வர... கீர்த்தனாவின் யோசனையை தெரிவிக்க...

''நல்ல புத்திசாலி பொண்ணு! எந்த கம்பெனிக்காரனும் கொடுக்காத சலுகை. சூப்பர்டா!'' என்றார்.

''ஏய் கௌதம்... இந்த பெண்ணை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்குடா!'' அம்மா ஆதங்கத்தோடு சொல்ல....

''உங்களுக்கு மட்டும்தானா? எனக்கும் தான். தடுக்கி அவள் மேல் சாய்ந்தேனே அன்றிலிருந்தே!'' அழகாய் புன்னகைத்து சொன்னான்.

''திருடா... திருடா... சரியான அழுத்தக்காரன்டா நீ!''

''பாட்டு, டான்ஸ், கராத்தேன்னு அவளுக்கு அத்துபடி வீரத்துல ஜான்சிராணியாக்கும்! பெண் கேட்டு வருபவர்கள்... இவள் கொள்கையை கேட்டு ஓடுகிறார் களாம். மெதுவா என் காதலை சொல்லணும்... அவ கொள்கை என்னன்னு பார்த்து நிறைவேற்றணும்! கொஞ்ச நாள் காத்திரும்மா... என்றைக்கு இருந்தாலும். இவள் தான் உன் மருமகள்! இதில் எந்த மாற்றமும் இருக்காது!'' கௌதம் திடமாய் கூறினான்.

''போதும்டா... இது போதும்டா கண்ணா! உன்கிட்ட தவமாய் நினைச்சி கேட்டுக்கறேன். சீக்கிரமே கீர்த்தனா என் மருமகளாகணும்! காலம் கடத்தாமல் பேசிடுப்பா!'' என்று சந்தோஷமாய் கூறி.. அவன் கைகளை எடுத்து முகத்தில் வைத்துக் கொண்டாள்.



இவளின் சந்தோஷம்... கனவு... கானல் நீராய் போகப் போவது... தெரியாமல்!

## 15

அம்மா உடல் சுகம் பெற்று வீடு திரும்ப... கீர்த்த னாவும் ஆபீசுக்கும் வர... இலவச பரிசு கூப்பன் திட்டம் முழுமையாய் பலன் தந்து... அமோக விற்பனை! ஸ்டாக் விற்று தீர்ந்து... மேலும் மேலும் வியாபாரம் பிய்த்துக் கொண்டு போனது. என்றும் விற்பனையாகாத இமா லய சாதனை! கூட்டிக் கழித்து பார்த்தால்... லாபங்கள் ஏராளம்.

''கீர்த்தனாவுக்கு என்ன வேண்டும்? பட்டா? தங்கமா? வைரமா?'' ஆசையாய் கௌதம் கேட்க...

''ஐயோ எதுவுமே வேண்டாம். என் கடமையை செய் தேன்!'' என்றவளின் கன்னத்தைத் தட்டி ''இந்த குணம் தான் கீர்த்தனா எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு! ஐ லைக் யூ கீர்த்தனா!'' கண்கள் பளபளக்க கூறினான்.

கௌதம் சந்தோஷத்தில் திளைத்தான். அப்பா அவளை பாராட்ட... அம்மாவோ ''பேசினாயா?'' என்று தினந் தோறும் நச்சரித்தாள்.

இனிமேல் அவனுக்கும் தாங்காது! எத்தனை நாட்கள் போட்டு அடைத்து வைப்பது தன் காதலை! அவனுக்கு

உள்ளுக்குள் உதறல்தான்! தான் கேட்டு மறுத்துவிட்டாள் என்றால்... என்ன செய்வது என்று!

நகரின் அருகிலேயே இருந்து ஸ்பின்னிங் மில் பின்புறம் ஒரு சிறிய குன்று இருந்தது. அதன் அடிவாரத்தில் பூங்கா அமைத்து... அழகு படுத்தி... இரு சிமெண்ட் பெஞ்சுகள் போட்டு... இவனுக்கென்றே அந்த பூங்கா அமைக்கப் பட்டது. சந்தோஷ தினங்களிலும்... துன்பமான தினங் களிலும் அவன் வரும் இடம். இதுவரை அவளை அழைத்து வரவில்லை.

ஒருநாள்... மலையடிவார பூங்காவிற்கு கீர்த்தனாவை அழைத்து வந்தான்.

''வாட் எ சர்ப்ரைஸ்! வாவ்! வாட் எ பியூட்டிபுல் ப்ளேஸ்! நைஸ் ப்ளேஸ்! இது நாள் வரை எனக்கு காட்டவே யில்லையே!'' குறைப்பட்டுக் கொண்டாள்.

''ஆபீஸ்ல ஒரே அறையில... ஸைட்டுக்கு ஒரே கார் லன்னு... நாம் அதிகமாய் இருப்பதே தனியாத்தானே! அங்கெல்லாம் பேசாத பேச்சு... அப்படி என்ன இருக்கு? ம்?'' ஆச்சரியத்தோடு கேட்டாள்.

''இது பர்சனல் கீர்த்தனா!''

''என்ன சார் புதிரா பேசறீங்க!''

''நேரே விஷயத்துக்கு வரேன். நான் உன்னை காதலிக் கிறேன் கீர்த்தனா!'' அவன் மெதுவாய் உயிர் உருக கூற...

''வாட்? வாட் எ ஜோக்?'' விழுந்து விழுந்து சிரித்தாள்.

''சிரிக்காதே! சீரியஸா சொல்றேன். நான் உன்னை நேசிக்கிறேன்! ஐ லவ் யூ கீர்த்தனா!''



கண்கள் காதலில் பளபளக்க கூறினான்.

அவள் உள்ளம் கலவரத்திற்குள்ளானது.

''எப்போதிருந்து?''

''பார்த்த முதல் நாளே! கோயில்ல தடுக்கி விழ இருந்த என்னை தாங்கி பிடித்து... ஒரு பார்வை பார்த்தாயே... அப்பவே இந்த கண்ணுல விழுந்துட்டேன். இல்லே! இல்லே! விழுந்தா கூட எழுந்துடலாம் கீர்த்தனா. நான் அப்படியே புதைஞ்சிட்டேன்! உன் பார்வை ஒரு வரமாய் கிடைக்க... தவமாய் தவமிருக்கேன் கீர்த்தனா! என்னை புரிஞ்சிக்கோ கீர்த்தனா! ப்ளீஸ்...'' மனமுருக சொன்னான்.

கீர்த்தனா மௌனமாய் அவனைப் பார்த்தாள்.

''என்ன கீர்த்தனா அப்படி பார்க்கறே! என்னை கல் யாணம் பண்ணிட்டா உன் சுதந்திரம் பறி போயிடும்னு கவலைப்படவேண்டாம்! இப்போ எப்படி சேவை... உதவின்னு செய்கிறாயோ... அதைவிட பல மடங்காய் செய்யலாம். உன் விருப்பம் போல இருக்கலாம். அப்பா, அம்மாவுக்கெல்லாம் ஓ.கே.! நீ சரி என்றால்... எங்கள் வீட்டு குத்துவிளக்கு... மகாராணியெல்லாம் நீதான்!'' புன்னகையோடு கூறினான்.

''என்னை திருமணம் செய்துக்க உங்களுக்கு தகுதி யிருக்கா?'' அவள் கேட்டதும்தான்... கௌதம் கொதித்துப் போனான்.

''ஏய் கீர்த்தனா... விளையாடறீயா? தெரிஞ்சித்தான் பேசறீயா? எனக்கு அழகில்லையா? அந்தஸ்து இல் லையா? அறிவில்லையா? உன்னை மணக்க... இன்னும் என்ன தகுதிகள் வேண்டும்? இதை விட ஒரு ஆணுக்கு

இன்னும் என்ன என்ன தகுதிகள் வேண்டும்? தானதருமங்கள் நானும் நிறைய செய்கிறேன்.''

''இது போதாதே!'' அலட்சியமாய் பதில் வந்தது.

''இன்னும் என்ன செய்யணும்? செய்துடலாம்? சொல்?'' அவன் அக்கறையாய் கேட்டான்.

''வேண்டாம். கோபம் வரும்!''

''வராது! என்னத்தான் செய்யணும்? சொல்லித் தொலையேன்! எதுக்கு இப்படி பீடிகை போடறே!'' எரிச்சல் பட்டான்.

''உங்களிடம் இருக்கும் கம்பெனிகளிலேயே படிக்காத பாமர மக்கள் வேலை செய்யும் கம்பெனிகளை அவர்கள் பெயரில் எழுதி வைக்கணும்! அதில் வரும் லாபங்கள் அத்தனையும் அவர்களைப் போய் சேரணும்!''

அவள் சொல்லி முடிக்கவும்... கொதித்து விட்டான்.

''என்ன சொல்றே நீ? எங்க சொத்துக்களை தானமா கொடுத்துட்டு.. நடுத்தெருவுல நின்னு பிச்சை எடுக்க சொல்றியா? மடைச்சி! இந்த நிலைமைக்கு உயர எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன்! ஏழு வருடமா... கடுமையா.. எந்த ஆசாபாசங்களுக்கும் அடிமையாகாமல்... தொழில் ஒன்றே குறிக்கோள்னு வேலை செய்து... இந்த இடத்தை பிடிச்சிருக்கேன்! எத்தனை இடர்கள்? எத்தனை பிரச்சினைகள்? எத்தனை சந்தோஷங்களை இழந்திருப்பேன்? ஒரு நிமிடத்துல தூக்கி கொடுக்க சொல்றியே! பாதகி!'' எரிமலையாய் வார்த்தைகளைப் கக்கினான்.

''எல்லாத்தையும் இல்லே! உங்க அப்பா, தாத்தா சொத்துக்களை கொடுக்கச் சொல்ல.... எனக்கு என்ன உரிமையிருக்கு?''



ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு.. அவள் அருகில் வந்து அமர்ந்தான்.

''உங்க ஸ்பின்னிங் மில்ஸ்... சேகோ பேக்டரி... சில்க் பேக்டரி... மாடர்ன் ரைஸ்மில்... இதுல வேலை செய்யறவங்க எல்லாரும் படிக்காதவர்கள்! அவர்களுக்கு நீங்கள் தரும் சம்பளம் சொற்பம்! படிக்காத பாமர மக்களுக்கு செய்தால் குறைந்து விடமாட்டீங்கள்.''

''வாயை மூடுடி!'' கத்தினான் வேகமாய்.

''நீங்க இந்த அளவு உயர வெயிலிலும் மழையிலும் கஷ்டப்பட்டு வேர்வை துளி சிந்தி உழைத்த தொழிலாளிங்கதான் காரணம்! உங்கள் வளர்ச்சிக்கு தன் ரத்தத்தை வேர்வையாக்கியவர்களுக்கு கொடுக்க தயங்கறீங்களே! மற்ற கம்பெனிகளின் தொழிலாளிகளுக்கு கொடுக்கற சம்பளமா இந்த படிக்காதவர்களுக்கு கொடுக்கறீங்க? அவர்களின் வாழ்வு சிறப்பாய் இருக்க!''

''படிக்காதது அவர்கள் தப்பு!''

''ஆமாம். இல்லேங்கல! அப்படிப்பட்ட அடிமட்ட தொழிலாளர்கள் பணிபுரியுமிடத்தை... அவர்களுக்கு எழுதி வைத்து... அதில் வரும் லாபங்களை... அவர்கள் வாழ்வு சிறக்க தரக்கூடாதா?'' திரும்ப கேட்டாள்.

''போடி அறிவு கெட்டவளே! இப்படி ஒரு காரியத்தை செய்தால்... என்னை பைத்தியம்னு கை கொட்டி சிரிப்பாங்க. அப்புறம் என்னை ஒரு பய மதிக்கமாட்டான்'' எண்ணெயில் விழுந்த கடுகாய் பொரிந்தான்.

''இது தவறான கருத்து! நிச்சயமா மாட்டாங்க. உங்களைப் பார்த்து... ஒவ்வொருவரும் இதுபோன்று ஏதாவது செய்தால்... இந்த சமுதாயம் முன்னேறும்! எனக்கு

நம்பிக்கை இருக்கு. எனக்கு வரும் புருஷன் சுயநலமில் லாமல்... ஏதாவது செய்து காட்டி... இந்த சமுதாயத்திற்கு முன்னோடியா இருக்கணும்னு ஆசைப்படுகிறேன்'' என்று கூறி முடித்தாள்.

''இது தான் உன் கொள்கையா? இப்போ புரியுதுடி... உன்னை பார்க்க வந்தவனெல்லாம்... ஏன் திரும்பிப் பார்க்காமல் ஓடினான்னு! உன் கண்டிஷன்களுக்கு எந்த இளிச்சவாயன் தான் ஒத்துப்பான்! முதலில் உன்னைப் பெற்றவர்கள்... என்னைப் பெற்றவர்கள் ஒத்துப்பார்களா? உன் அம்மாவிடம் உனது கொள்கையை சொன்னால் என்ன நடக்குமென்று நினைத்துப் பார்'' படபடப்பாய் கூறினான்.

''ஏழே வருடத்தில் இத்தனை உயர்ந்தவர்... இன்னும் எவ்வளவோ காலமிருக்கு. உங்களால் இதைவிட நிறைய சாதிக்க முடியும் கௌதம் சார்!''

''போடி பைத்தியக்காரி! அப்படி என்ன தான்டி ஸ்பெஷலா இருக்கு... உன்கிட்ட? எல்லாத்தையும் தூக்கி தாரை வார்த்துட்டு.. உன்னை கட்டிக்க! எவளிடமும் இல்லாதது உன்னிடம் என்ன இருக்கு?'' அவன் கேட்க...

''கௌதம்... ஓவரா பேசறீங்க! திஸ் ஈஸ் டூ மச்! வாடி... போடின்னு சர்வ சாதாரணமா சொல்றீங்களே! வாடா... போடான்னு சொல்ல.. எனக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்?'' நெஞ்சை நிமிர்த்தி அருகில் வந்து கேட்க...

''சொல்லிடுவியாடீ..?'' சவால் விட.

''சொல்லுவேன்டா...! எனக்கென்ன பயமா?'' என்ற தெனா வட்டாய் கூற.. அவன் கை அவளின் கன்னத்தில் இடியாய் இறங்கியது.



# 16

கீர்த்தனாவின் கன்னத்தில்... கௌதமின் ஐந்து விரல் களும் பதிந்து விட்டது. எதிர்பாராத தருணத்தில் வேகமாய் அறைவும்... கன்னத்தை பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள். கண்ணீர் வழியும் கண்களோடு முறைத் தாள்.

''ஏன்டி... இப்படி வேதனைப்படுத்தறே! மிருகமாக் கறே! ஐயோ கன்னத்தில்.. விரல் பதிஞ்சுடிச்சே!'' கன் னத்தை தடவி விட அருகில் ஓடி வந்தான் கௌதம்.

''தொட்டீங்க நடக்கறதே வேற! என் அப்பா கூட இந்த அளவு அடிச்சதில்லே! என்னை கைநீட்டி அடிக்க... உங் களுக்கு என்ன உரிமையிருக்கு?'' எரிமலையாய் வார்த்தை களை கக்கிவிட்டு... அழுதாள்.

''கண்ணம்மா...கண்ணம்மா... என்னை மன்னிச் சிடுடா! உன் பேச்சு என்னை கோபப்படுத்தி விட்டது! இனி மேல் இதுபோல தப்பை பண்ண மாட்டேன். உன்னை நான் வேற யாரோவா பார்க்கல. என் மனைவியாத்தான் பார்க்கறேன்... நினைக்கறேன்! அந்த உரிமையிலதான் வாடி... போடின்னு பேசிட்டேன்.''

''ச்சே! இப்படியெல்லாம் பேச உங்களுக்கு வெட்கமா இல்லையா? நான் உங்க பி.ஏ.! அந்த லெவல்லேயே பேசுங்க... நான் வீட்டுக்கு போகணும்!'' என்று எழுந்த வளை... பிடித்து மீண்டும் அமர்த்தினான்.

"கீர்த்தனா... என் கண்ணே! என்னைப் புரிஞ்சுக் கோடா! உன்னைப் பற்றி என் நெஞ்சில்... அதிகமான ஆசையை வளர்த்துட்டேன். அலட்சியப்படுத்தாதே! நான் நொறுங்கிப் போயிடுவேன்!" அவன் தணிந்த குரலில் கூறினான்.

"உங்களுக்கு ஆசை ஏற்படுத்துவது போல இதுவரை ஒரு வார்த்தை... ஒரே ஒரு வார்த்தை பேசியிருப்பேனா?" வேகமாய் கேட்க...

"பேசினால் தான் ஆசை வருமா? நீ இனிக்க... இனிக்க... சிரிச்சி பேசியிருந்தால் கூட இந்த அளவு ஆசை வச் சிருக்க மாட்டேன்!

கீர்த்தனா... உன் செயல்தான்டி... என் சிந்தனையை கலக்கிடிச்சி! உன் அறிவுதான்டி... என் இதயத்தை ... உன்னோட கட்டிப் போட்டிருச்சி! உன் சிந்தனைதான்டி.... என்னை உன்மேல் மோகம் கொள்ள வச்சது! உன் புத்திசாலித்தனம் தான்டி... என்னை உன்னோட கலக்க வச்சது! கலங்க வச்சது! உன் உதவி செய்யும் உயர்ந்த குணம் தான்டி... என் உயிரைக் கரைச்சது! உன் மந்த காசமான பார்வைதான்டி... என்னை மயக்கிடிச்சி! எனக்கே எனக்குன்னு பிறந்த தேவதையடி நீ! மாட்டேன்னு மட்டும் சொல்லிடாதடி என் ராசாத்தி! எதை வேண்டு மானாலும் தாங்குவேன்! நீ இல்லாத ஒரு வாழ்க்கையை தாங்கவே மாட்டேன்! உனக்கு பிடிச்ச அத்தனையுமே எனக்கும் பிடிக்கும்!...

நம் இரண்டு பேர் மனம்... எண்ணம்... குணம் ஒன் றாய் இருக்கும் போது... எதுக்குடி வீண் பிடிவாதம்? நீ என்ன சின்ன குழந்தையா... கன்னத்துல ரெண்டு அறை



விட்டு திருத்துவதற்கு! யோசி... கண்ணம்மா... யோசிடி கொள்கை அது இதுன்னு வீண் பிடிவாதம் பிடிக்காதே! என் சாம்ராஜ்யம் முழுக்க... உன் பேரில் வேண்டு மானாலும் எழுதி.. உன் காலடியில் சமர்ப்பிக்கிறேன்!"

"யாருக்கு வேணும்? உங்க பணமும்... சொத்தும்... சாம்ராஜ்யமும்! போய் குப்பையில போடுங்க!" துச்சமாய் பேச...

"இதுதான் உன் முடிவா? என் வாழ்க்கையில... இதுநாள் வரை யாரிடமும் இப்படி இறங்கி போனதில்லே கீர்த்தனா! என்னை புரிஞ்சுக்கடா கீர்த்தனா! எனக்கு உன்னை அந்த அளவு பிடிச்சிருக்கு! நேசிக்கற பெண்கிட்ட கெஞ்சறதுல மான அவமானம் பார்க்கக் கூடாதுன்னு உன்கிட்ட திரும்பத் திரும்ப கேட்கறேன்! ப்ளீஸ்..." கெஞ்சினான்.

"உங்களை யாரு என்னிடம் கெஞ்சச் சொன்னது? திரும்பத்... திரும்ப கேட்டாலும் என் பதில் ஒன்றேதான். அதில் மாற்றமில்லை!"

"என்னைப் பார்த்து சொல்லு? என் மேல் உனக்கு அன்பில்லையா? உண்மையைச் சொல்லணும்? ஏய் கீர்த்தனா... கேட்டுட்டே இருக்கேன். பதில் சொல்லாமல் இருந்தா என்ன அர்த்தம்?" அவளைப் பிடித்து உலுக்கி னான்.

கீர்த்தனா மெதுவாய் கூறினாள்.

"நானும் பெண்தானே! மரக்கட்டையா என்ன? உங்க நல்ல குணமும்... வேலைக்காரங்களுக்கு கொடுக்கும் மரியாதையும்... உங்க அபார திறமையையும்... அயராத உழைப்பும் எனக்கு முதலில் பிடிச்சது!

சதா காதலோட நோக்கற கண்களுமாய்... என் இதயத்தை துளைக்கறாப்போல பார்க்கற பார்வையும் என்னை சலனப்படுத்தியது! அந்த பார்வையின் தாக்கத்தை தாங்க முடியாமல்தான்... உங்க முகத்துக்கு கூலிங்க்ளாஸ் பியூட்டி புல்லா இருக்கு! சூப்பரா இருக்கீங்க கண்ணாடியிலன்னு போட்டுக்க சொன்னேன்!"

"அப்போ... நீ சொன்னதெல்லாம் பொய்யா?"

"ஐயோ! இல்லே! கண்ணாடியில பெட்டராக இருப்பீங்க!" என்று மனதை மறையாமல் சொல்லிவிட்டு... நாக்கை கடித்துக் கொண்டாள் கீர்த்தனா.

கௌதம் அவளை ஆச்சரியமாய் நோக்க....

"அன்றைக்கு பார்த்டேன்னதும் வந்து நின்னீங்களே, அப்பவே எனக்கு பகீர்னு ஆயிடிச்சி!...

அப்புறம் என்னை பெண் கேட்டு வந்த அன்று... உங்க முகமாற்றமும்... கோபமும்... இன்னொருத்தர் என்னைப் பார்க்கக் கூடாதுன்னு அப்புறப்படுத்தியது... பிரச்சினையே இல்லாத சைட்டுக்கும்.. வேலையே இல்லாமல் பேக்டரிக்கும் அழைத்துப் போய் நேரம் கடத்தியதுன்னு... ஒவ்வொன்றிலும் உங்கள் காதலைக் கண்டேன்! உங்க மேல் ஈர்ப்பு வரும்! அப்போ எல்லாம் என் கொள்கை தடுக்கும். அந்த அன்பும்... ஈர்ப்பும் காணாமல் போகும்!" கூறி முடித்தாள்.

"என்னடி பெரிய கொள்கை? உன்னைப் போல ஒரு முட்டாள் பெண் இருக்கமாட்டாள்!"

"என் வாழ்க்கையில இதெல்லாம் நிறைவேறுமானால்... கல்யாணத்திற்கு பின்னாடிதான் காதல்!"



"உனக்கு இந்த ஜென்மத்துல கல்யாணம் நடக்காது! வேலையை விட்டு நிற்கணும்னு அவசியமில்லே! உன்னை இனிமேல் வற்புறுத்தமாட்டேன். இந்த நிமிடமே... என் காதலுக்கு சமாதி கட்டிட்டேன். வா போகலாம்."

கீர்த்தனாவுக்கு திக்கென்றது. நிமிர்ந்து அவனை விழிகளால் நோக்கினாள்.

"இப்படி பார்க்காதே! இப்படி பார்த்து... பார்த்துதான் இந்த நிலைக்கு ஆளானேன்... கெட்டு குட்டிச்சுவரானேன்! உன் மேல் பைத்தியமும் ஆனேன்!" எரிச்சலோடு கூறினான்.

கீர்த்தனாவிற்கு இரவெல்லாம் உறக்கமே வரவில்லை.

எதற்காக மற்ற பெண்களிடம் இருந்து தான் வித்தியாசப்பட வேண்டும். இவளின் அழகில் மயங்கி எத்தனை வரன்கள் இதுவரை வந்திருப்பார்கள்? அவர்கள் அனைவரையுமே ஓட ஓட விரட்டி விட்டாள்!

அதிலும் கௌதம்... எல்லோரையும் மிஞ்சி நேசிக்கவும் செய்கிறான். ஆனாலும் தன் இதயத்தை மாற்றிக் கொள்ள முடியாமல் திண்டாடினாள்.. தவித்தாள்... இரவெல்லாம் தலையணையை நனைத்தாள்.

'பாவி... நல்லா இருந்த என்னை இப்படி தவிக்க விட்டு விட்டாயே! என் இதயத்தை கூறுபோட... இத்தனை ஆண்டுகள் கழித்து... ஏன் என் கண்ணில் பட்டுத் தொலைத்தாய்? இப்பவே என் காதலுக்கு சமாதி கட்டி விட்டேன்' என்று வீரவசனம் பேசிவிட்டு வந்து... கௌதம் இங்கே பாக்கெட் பாக்கெட்டாய் சிகரெட்டை ஊதி தள்ள... அவள் அழுகையிலும்... இவன் ஆத்

திரத்திலுமாய் இரவை கழித்துவிட்டு... இருவரும் ஆபீஸில் சந்திக்கும் போது... இவன் சிவந்த விழிகளுடன் பாறையாய் இறுகிய முகத்துடனும்... அவள் அழுது வீங்கிய முகத்துடனும் சந்தித்துக் கொண்டனர்.

வேலையை தவிர அநாவசிய பேச்சில்லாமல்... நாட்களை நகர்த்தினர்.

இந்த சமயத்தில் ஸ்கூட்டி பஞ்சராகி... ரிப்பேராகிப் போக... அவள் காலை, மாலை ஆட்டோவில் வந்து போனாள். தினமும் ஒரே ஆட்டோவில் வருவதும்... ஆட்டோ டிரைவரிடம் சிரிப்பதும்.. பேசுவதும்... விடைக் கொடுப்பதுமாய் அவளைக் காண கௌதமுக்கு எரிந்தது. மாலையானால் ஆட்டோவோடு அவன் வந்து காத்திருந்து அழைத்துப் போனது.. எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போல இருந்தது.

'கண்டவனிடம் இளித்து பேசுகிறாள். ஒரு ஆட்டோ டிரைவரைவிட நான் கேவலமா? விடக்கூடாது?' என்று அலுவலகம் முடிந்து கிளம்பியவளை தடுத்தான்.

"ஸ்கூட்டி எங்கே?"

"மெக்கானிக் ஷாப்லே!"

"அதுயென்ன காலையிலும், மாலையிலும் அந்த பொறுக்கி ஆட்டோவிலே வர்றே! ம்? மாலையானால் கரெக்ட் டயமுக்கு வந்து.. தேவிக்காக தவமிருக்கான். எனி ஸ்பெஷல்?"

"அவரை பொறுக்கின்னு சொல்ல நீங்க யார்? நாக்கை அடக்கி பேசுங்க!" சீறிவிட்டாள்.

"மாலையானால் உனக்காக தவம் இருக்கானே!"



"ஏன் நீங்க மட்டும் தான் எனக்காக தவமிருக்கணுமா? விரும்பணுமா?"

"உனக்கு தான் ஆண்களை எல்லாம் தன் காலடியில் விழ வைக்கும் கலை கை வந்த கலையாச்சே! உன்னிடம் மயங்கி... எனக்கு பின்னாடி வரிசையில் நிற்பவனில்... அவனும் ஒருவனா?" நக்கலாய் கேட்டான்.

"ச்சே! இப்படியெல்லாம் பேச அசிங்கமா இல்லையா?"

"அப்படித்தான் பேசுவேன்! ஒரு நாளாவது என்னிடம் அப்படி பேசியிருப்பாயா? என்னை விட அவன் என்ன உயர்வு? உனக்கு அப்படி என்ன அவன்மேல் தனி மரியாதை? அவனுக்கும் வந்து... காத்து இருந்து.. அழைத்துப் போகும் தனி அக்கறை! ம்?" நெற்றியை சுருக்கி கேட்டான்.

"காமாலை கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சளாக தெரியுமாம்! அப்படியிருக்க உங்க பார்வை. பேச்செல்லாம்! அவர் ஒரு பட்டதாரி... வேலை கிடைக்காமல் அலைஞ்சிட்டு இருந்தப்போ... அந்த ஆட்டோ வாங்க... நானும் கொஞ்சம் பணம் கொடுத்து உதவினேன். அந்த நன்றி உணர்ச்சிதான் விசுவாசம்தான் எனக்காக காத்து இருந்து அழைத்து செல்வது! கௌதம் சாருக்கு விளக்கம் போதுமா? இன்னும் வேணுமா?" கீர்த்தனா நக்கலாய் கூறி செல்ல.

கௌதமின் முகம் விளக்கெண்ணெய் குடித்தது போல ஆனது.

'உன் திமிரை கூடிய சீக்கிரமே அடக்கறேன்டி!' கறுவினான் கௌதம்!

# 17

அந்த வருடம் பட்டு ஏற்றுமதியில் சிறந்து விளங்கினர்.

விஜயலட்சுமி அடிக்கடி போன் செய்வாள். அந்த பக்கம் வந்தால்... கீர்த்தனாவைப் பார்க்காமல் போகமாட்டாள். அன்று விஜயலட்சுமி போன் செய்தாள்.

"ஹலோ கீர்த்தனா... நாளைக்கு தைக் கிருத்திகை தெரியுமா? எங்கள் கல்யாண நாள். கண்டிப்பா வரணும். இதுவரை வீட்டிற்கு வராமல் ஏமாற்றினாய்! நாளை வந்துடும்மா."

மறுநாள் காலையிலேயே பரிசுப் பொருளுடன் நின்று விட்டாள். தோட்டத்தில் நடைபயின்று விட்டு வந்த கௌதமுக்கு கீர்த்தனாவைக் கண்டு ஆச்சரியம்.

"ஏய் கீர்த்தனா. வாட் எ சர்ப்ரைஸ்?" என்று கௌதம் கேட்க... "அடடா கீர்த்தனாவா? ஏன் வெளியே நிற்கறே! உள்ளே வாம்மா... நான்தான்டா கீர்த்தனாவை அழைத்தேன்" என்றாள் விஜயலட்சுமி.

பெரிய பங்களா... நேர்த்தியான அழகு... ஆங்காங்கே கண்களுக்கு குளிர்ச்சியாய் நிஜப்பூவில் அலங்கரித்த பூங்கொத்தோடு பிரம்மாண்டமாய் இருந்தது.

"வாம்மா" என்றார் செல்வம்.

உணவு மேஜையில் வகைவகையான உணவு காத்திருக்க... செல்வம் விஜயலட்சுமி அருகருகே அமர... கௌதம் ஒரு நாற்காலியில் அமர்ந்து... தூரப் போனவளை



"வா கீர்த்தனா... வந்து உட்கார்" எனவும். அவன் அருகில் உள்ள நாற்காலியில் முறைத்துக் கொண்டே அமர்ந்தாள்.

அவ்வளவு நெருக்கத்தில் கௌதமோடு அமர்ந்தது இல்லை. உண்ண முடியாமல் அவஸ்தைப்பட்டாள்.

"சின்ன குழந்தையாட்டம் கொறிக்கறீயே கீர்த்தனா! எங்க கௌதம் பயல் உன்னை விட மோசம். சில நாட்கள் இரவில் வற்புறுத்தி... ஊட்டி விடுவேன்னா பார்த்துக்கோயேன்! இவன்கிட்ட மாட்டிட்டு அவதிப்படறேன். இவனுக்குன்னு ஒருத்தி வந்துட்டா.. எனக்கு கவலையே இல்லேம்மா... நேரம்தான் கூடி வரலையே!" என்றாள் விஜயலட்சுமி.

"ஏம்மா கீர்த்தனாகிட்டே போர் அடிக்கறே!"

அவள் கொண்டு வந்த பார்சலை நீட்டி... அவர்களின் காலில் விழுந்து வணங்கினாள். "என்னையும் அப்படியே ஆசீர்வாதம் பண்ணுங்கம்மா" என்று விழுந்தான், கௌதம்.

"இந்த வருடமே.. நீங்க ரெண்டுபேரும் கணவன், மனைவியா விழுந்து கும்பிடுவீங்கன்னு எதிர்பார்த்தேம்மா" செல்வம் கூறினார்.

"கௌதம்... கீர்த்தனாகிட்டே பேசவே இல்லையா? என்ன பிள்ளைப்பா நீ! ரெண்டு பேரும் முழிப்பதை பார்த்தால் அதைப் பற்றி பேசவே இல்லை போலத் தெரியுதே! எதில் காலதாமதம் காட்டுவதுன்னு தெரியாதா கௌதம்? கூடிய சீக்கிரமே நல்ல பதிலை சொல்லும்மா! என்ன இது கழுத்துல இருக்கற செயினே தெரியல... ம்?" என்றவள் தன் கழுத்தில் இருந்த செயினில் ஒன்றை கழற்றிப் போட்டாள்.

"ஐயோ... வேணாம் ஆன்ட்டி" கழற்றப் போனவளை..

"கழற்றாதேம்மா... நான் முதல் முதலாய் ஆசையாய் போட்டது. எங்க கௌதம் இதைவிட கனமா.. மொத்தமா

போடுவானே... அப்போ என்ன செய்வே?'' விஜயலட்சுமி சிரித்தபடி கூறினாள்.

''கோவிலுக்கு போகலையா ஆன்ட்டி?''

''அந்த முருகன் மேல கோபம்மா... இவனுக்கு கல்யாணம் ஆனாத்தான் போவோம்!''

''கீர்த்தனா வா... வீட்டைச் சுற்றிக் காட்டறேன்!'' அவளை அழைத்துப் போனவன், சொன்னான்.

''நீ மறுத்ததை சொன்னால் வருத்தப்படுவாங்கன்னு நான் தான் சொல்லல. எதையாவது இவர்களிடம் உளறிவிடாதே! ப்ளீஸ்...'' கெஞ்சினான்.

ஒவ்வொரு அறையாய் காட்டிவிட்டு தன் அறைக்கு அழைத்துச் சென்றான்.

அவனுடைய அறை பெரியதாய் கச்சிதமாய் இருந்தது. ஒரு கம்ப்யூட்டர், டி.வி. வி.சி.ஆர் என்று... அதனைப் பார்த்துக் கொண்டே வந்தவளுக்கு... டி.வி. மேல் இருந்த போட்டோ கோபத்தை உண்டு பண்ணியது. ஏனென்றால் அது அவளின் போட்டோ! கௌதம் ஓடிப் போய் மறைப்பதற்குள்... நாலே எட்டில் சென்றவள்... அதனை ''வேணாம்... வேணாம்.'' என்று அவன் மறுக்க... கிழித்துப் போட்டாள்.

''என்ன இது. இவ்வளவு கீழ்த்தரமானவரா இருப்பீங்கன்னு... நான் எதிர்பார்க்கலே! பெரிய பிசினஸ் மேன் ஆனால் புத்தி மட்டும் மட்டம்! ச்சே! என்ன இது திருட்டுத்தனம்?''

அவன் கோபத்தை அடக்கிக் கொண்டான்.

''சரி படத்தை கிழித்து விட்டாய். இங்கே பார்'' என்று கட்டிலில் அமர்ந்து செல்போனை எடுத்து உயிர்ப்பிக்க.



அவளின் விதவிதமான படங்களை கண்டதும் பத்ரகாளியானாள்.

''கொடுங்க.. கொடுங்க'' அந்த செல்போனை பிடுங்க முயற்சிக்க... அவன் மேலே தூக்கி.. ஒரு கையிலிருந்து அடுத்த கைக்கு மாற்ற... அவள் கோபத்தோடு எகிறி எகிறி... அவனிடம் புடுங்குவதற்கு மல்லுக்கு நிற்க... அவள் உடல் முழுவதும்... அவன் மேல்பட்டு... ஒருவித மயக்கத்தை கொடுக்க... கட்டிலைச் சுற்றி ஓட... அவளும் பின்னோடு துரத்தி வர... அவனை கெட்டியாய் பிடித்து... மல்லாக்க கட்டிலில் தள்ளி.. அவன் மேல் விழுந்து.. அவன் கையில் இருந்த செல் போனைப் பற்றி... பிடுங்கி... காலில் போட்டு மீதித்தாள். ஆத்திரம் தீரும் வரை!

கட்டிலில் இருந்து எழுந்து. அமர்ந்து ''போட்டோவை கிழிச்சுட்டே! செல்போனை சுக்கல் சுக்கலாக்கிட்டே! எல்லாத்தையும் அழிச்சுட்டதா நினைப்பா? இங்கே ... இங்கே... என் உயிராய்.. ஓவியமாய்.. தேவதையாய் இருக்கியே அதை என்ன செய்வாய்? எப்படி அழிப்பாய்?'' என்று இதயத்தைத் தொட்டுக் காட்டினான். ''ம்..'' என்று புருவத்தை தூக்கி சிரிக்க... அவளின் கோபம் அதிகமாகி... ஆவேசமாய் வந்து.. இரு கைகளாலும் வேகமாய் குத்தினாள்.. அவன் மார்பில்!

''அம்மா...'' என்று மார்பை பிடித்துக் கொண்டு கட்டிலில் மல்லாந்து விழுந்தான். பேச்சு... மூச்சில்லை!

கீர்த்தனா பதறிப் போனாள். தன் நெஞ்சில் அறைந்துக் கொண்டாள். அவன் மூக்கருகே கையைக் கொண்டு போய் பார்த்தாள். அவன் நெஞ்சில் தலை வைத்து... இதயத்

துடிப்பை ஆராய்ந்தவள் கத்தினாள். "கொன்னுட்டேனே! என் கையாலயே கொன்னுட்டேனே! ஆன்ட்டி.... அங்கிள்!" என்று அழுது கத்தியவள் வாயைப் பொத்தினான்.

"கீர்த்தனா... கத்தாதே! சும்மா நடிப்பு...! விளையாட்டு!" என்று கண் சிமிட்டிய பின் சொன்னான்.

"என் இதயம் துடிக்கலன்னு தெரிஞ்சதும்... வாயோட வாய் வச்சி... உன் மூச்சுக் காற்றைக் கொடுப்பேன்னு எதிர்பார்த்தேன். ஏமாத்திட்டியே ராட்சசி!" என்று கிண்டலாய் சலித்துக் கொள்ள...

"உங்களை திருத்தவே முடியாது!"

"எப்படி முடியும்? இப்படியெல்லாம் என் மேல் விழுந்து புரண்டால்... இன்னும் பல மடங்கு ஆசை பெருகுமா? குறையுமா? ஒரு பெண்ணோட தொடுகை இந்த அளவு சுகம் தருமா? எனக்கு இவ்வளவு நாளாய் தெரியாமப் போச்சே!" ரசித்துக் கூறினான்.

"உங்களுக்கு தான் கையை சொடுக்கினா.. ஒரு க்யூவே நிற்குமே! அவர்களிடம் அனுபவிக்க வேண்டியது தானே!" அலட்சியமாய் கீர்த்தனா கூற...

"ச்சே! ச்சே! என்ன பேச்சு பேசறே? இந்த மனசு, உடம்பு கீர்த்தனா ஒருத்திக்குதான் சொந்தம்! இந்த ஜென்மம் எடுத்ததே கீர்த்தனாவோடு வாழத்தான்! புரிஞ்சுக்கோ! எதையாவது உளறி என்னிடம் வாங்கிக் கட்டிக் கொள்ளாதே!" அழுத்தமாய் கூறினான்.

"நல்லா நினைவு வச்சிக்கங்க... நான் உங்களுக்கு கிடைக்க மாட்டேன்!"

"விட மாட்டேன். கடைசி வரை போராடுவேன்."



"என் கொள்கை நிறைவேறாம... நானும் உங்களைத் திருமணம் செய்ய மாட்டேன்!"

"எல்லாத்தையும் ஒரு நாள் விட்டுட்டு.. என் காலடியில் விழத்தான் போறே!"

"அது ஒரு நாளும் நடக்காது!"

"நீயும் தீவிரமாய்... நேசிக்கிறாய் என்னை!"

"இல்லே... இல்லே!"

"அது சீக்கிரமே புயலாய்... பூகம்பமாய்... உன் இதயத்தை புரட்டிப் போடும்!" அவன் சவால் விட்டான்.

"பார்ப்போமா?"

"பார்க்கலாம்! நம் இருவரில் யார் வெல்வோம் என்று!" கூறிவிட்டு புயலாய் படியிறங்கினாள்.

## 18

கீர்த்தனா ஒன்றை மட்டும் புரிந்து கொண்டாள். அவளைக் கேளாமலே... என்ன கட்டுப்பாடு போட்டாலும்.. அவள் மனம் கௌதம் வசம் சென்று கொண்டிருந்தது. அன்றைய நிகழ்ச்சிக்குப் பிறகு... அவள் வாழ்க்கையிலும் கௌதம் ஒருவனுக்கு மட்டுமே இடமுண்டு.. வேறு ஒரு ஆணுக்கு இடம் இல்லை என்பதை தெளிவாகப் புரிந்துக் கொண்டாள். அவளின் இதயம், அவளைக் கேளாமலே கௌதமிடம் இடம்மாறி விட்டது! நெஞ்சு முழுக்க கௌதம்!

கௌதம் தான்! அவள் கேட்டதைச் செய்தால் கௌதமை மணந்து, குழந்தைகளைப் பெற்று இன்பமாய்.. ஆனந்த மாய் வாழ்வாள். இல்லையென்றால், இப்படியே கன்னி யாக, ஊருக்கு உழைத்துக் கொண்டு.. இன்னும் நிறையப் பிள்ளைகளை படிக்க வைத்துக் கொண்டு.. மிச்ச காலத்தை ஓட்டிவிட முடிவு செய்தாள்.

இதற்கிடையே கௌதம், விஜயலட்சுமியின் தொல் லையை தினமும் தாங்காமல்... ஒருநாள் தனக்கும், கீர்த்தனாவிற்கும் இடையே நடந்த பேச்சுக்களைக் கூறினான்.

"என்னடா... என்ன பெண் இவள்? இப்போ நாம செய்யும் சேவையே அதிகம். மருத்துவ முகாம்... முதி யோர் இல்லம். அநாதை இல்லம். தீவாவளி, பொங்கல் போனஸ்... காலேஜ்ல படிக்க முடியாத பிள்ளைகளை இலவசமாகவே சேர்த்துகிறோம். இப்படி நாம் செய்யும் உதவிகளை பட்டியல் போட்டுகிட்டே போகலாம் எத்தனைக் கோடிகள் பெறுமானமுள்ள சொத்துக்களை தாரைவார்க்க சொல்கிறாள்!" அம்மா புலம்பினாள்.

"வேறு யாரையாவது காதலிக்கிறாளா? அதனால்தான் உன்னை தட்டிக் கழிக்க... சொத்துக்களைத் தொழிலாளி கள் பெயரில் எழுதி வைக்க சொல்கிறாளா?" என்று அப்பா கூறினார். பின்பு.

"அப்படியெல்லாம் செய்து அவளைக் கட்டிக்கணும்னு விதி ஒன்றும் இல்லை. ரொம்ப புத்திசாலிப் பெண் என்று நினைத்தேன் இவ்வளவு அடிமுட்டாளாய் இருக்காளே! ச்சே! போடா... போய் உன் வேலையைப் பார். இவளை விட நல்லப் பெண்ணாய் நான் பார்த்து கல்யாணம் செய்து வைக்கிறேன்!" என்றார்.



இந்த விஷயத்தை விஜயலட்சுமி போய்... கீர்த்தனா வீட்டில் சொல்லி புலம்பினாள்.

"எவ்வளவு ஆசையாய் இருந்தேன். இது நாள் வரை கல்யாணமே வேண்டாம்னு சொன்ன பையன்... உங்க பெண்ணை பார்த்ததும் பிடித்துப் போய்... கட்டினா இவளைத்தான் கட்டுவேன்னு சொன்னானே! எவ்வளவு நேசம் வைத்திருக்கிறான் இந்த பெண்மேல்! நாங்களும் உங்க பெண்தான் மருமகள்னு நினைச்சி சந்தோஷப் பட்டுகிட்டு இருக்கும் போது.... இப்படி ஒரு குண்டை தூக்கிப்போட்டுட்டாளே! அப்படியெல்லாம் செய்து, உங்கள் பெண்ணை கட்டிக்கணும்னு அவசியமே இல்லே! இனி ஒரு போதும்... உங்கள் பெண் எங்களுடைய மரு மகளாய் வருவது சாத்தியப்படாது! வருகிறேன்." என்று கிளம்பி விட்டாள்.

"பேத்தி... பேத்தின்னு பரிஞ்சி பேசுவீங்களே... உங்க பேத்தி சொல்ற காரணங்களைப் பார்த்தீங்களா? விட்டில் பூச்சி தானாகவே விளக்கில் விழுந்து சாகுமாமே! அந்த கதையா இல்ல இருக்கு! யானைத் தன் தலையி லேயே மண்ணள்ளிப் போட்டுகிறாப்பல... அவ தலை யில் மண்ணையள்ளி போட்டுகிட்டதும் இல்லாமல்.... அவன் தலையிலயும் போடப் பார்க்கிறாளே! பிடிவாதக் காரி! அப்பாவும்... பாட்டியும் விவரம் தெரிந்து சமூக சேவைன்னு சுத்த ஆரம்பித்தப்போதே கண்டித்து வைத்திருந்தால்... இது போல பேசியிருப்பாளா? ஐந்து லேயே வளைச்சிருந்தா வளைந்திருக்கும்! அப்போவெல் லாம் விட்டுட்டு இப்போ வளைக்கவா முடியும்! உங்க இரண்டு பேரோட செல்லத்தால்... இப்போ எல்லாமே குட்டிச் சுவர்! எப்பேர்ப்பட்ட பணக்கார இடம் எவ்வளவு

திறமைசாலியான பையன்! மகாராணியைப் போல வச்சி... தாங்கக் கூடிய மாமியார்! இவள் மேல் ஆசை வச்சி... காலில் விழுந்து கெஞ்சாத குறையாய் கேட்டிருக்கான்! ச்சே! எருமைகணக்கா வளர்ந்து என்ன புண்ணியம்! பெண் பெரிய இடத்தில் வாழப் போறாளேன்னு எவ்வளவு கனவு கண்டேன்! பாதகி... தவமா தவமிருந்திருந்தாலும்... இப்படி ஒரு சம்பந்தம் கிடைக்குமா? எந்த ஜென்ம புண்ணியமோ கூடிவர நேரத்தில்... கொள்ளை... கொத்தவரங்கான்னு போட்டு உடைச்சிட்டாளே! கழுதை இதுநாள் வரை வாயைத் திறந்ததா பாருங்கள். வந்த நல்ல வரன்கள் எல்லாம் இவளோட இந்த கண்டிஷனைக் கேட்டுதான் ஓடியிருக்கான். இது தெரியாம போச்சே! இந்த ஜென்மத்துல இவளுக்கு திருமணம் நடக்கும்னு எனக்கு தோணல! சனியன். என் வயிற்றில் வந்து பொறந்து தொலைச்சதே! இதுக்காகவே விஷம் குடிச்சி சாகணும் போல இருக்கு!'' தமிழ்ச்செல்வி காட்டுக்கத்தலாய் கத்தினாள்.

அப்பா... பாட்டிக்கு கூட இவள் செயலால் கோபம். மாலை அவள் வந்தபோது யாருமே பேசவில்லை. இதே நிலை நீடித்தது.

வீட்டிலும் இவளிடம் யாரும் பேசுவதில்லை. ஆபீசுக்கு போனால் கௌதமும் முன்பு போல பேசுவதில்லை.

இந்த நேரத்தில் தான்.. அவள் தோழி மஞ்சு, சதீஷை காதலித்த விவரம் அறிந்து, அவளைப் பெற்றவர்கள் மஞ்சு எவ்வளவு கெஞ்சியும் கேளாமல்... வேறு ஒரு அரசு பணியில் இருப்பவனோடு திருமணத்திற்கு ஏற்பாடு செய்தனர்.

மஞ்சு ஓடிவந்து கீர்த்தனாவிடம் கதறி அழ... கீர்த்தனா நேரே சென்று அவள் பெற்றோரிடம் பேசிப் பார்த்தாள்.



''சதீஷ் வெறும் எம்.ஏ. பட்டதாரி. கிராமத்தான்! வேலை தேடி.. பட்டணத்திற்கு வந்து... நண்பனின் அறையில் ஓசி குடித்தனம் நடத்தும்... வேலையில்லாத வெட்டி பயலுக்கு என் பொண்ணைக் கட்டி வைப்பேன்னு கனவு காணாதே! எல்லா ஏற்பாடும் முடிஞ்சிடிச்சி! அவள் தான் காதல் ..... கத்திரிக்காய்னு உளறினால்... உனக்கு அறிவு எங்கே போயிடிச்சி? பேசாம போயிட்டே இரு! உன்னோடவெல்லாம் பழக விட்டது எவ்வளவு தப்பு!'' என்று கடுமையாய் கூறி அனுப்பிவிட்டனர்.

கீர்த்தனாவும், தேவியும் சதீஷை தேடிப் போய்... அவனை கட்டாயப்படுத்தி பதிவு திருமணத்திற்கு சம்மதிக்க வைத்து... ரிஜிஸ்டர் ஆபீஸ் போய் மனு கொடுத்து விட்டு.. அவர்கள் வரச் சொன்ன தேதிக்குப் போய்... சதீஷ் - மஞ்சுவின் திருமணத்தை எளிமையாய் முடித்து... ஒரு தொகையைக் கொடுத்து... கன்னியாகுமரியில் உள்ள தோழி வீட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

அன்று முதல் நாளே ஆபீஸில் லீவ் லெட்டர் எழுதி மேஜை மேல் வைத்தவளிடம் ஏன்? எதற்கு? என்று கௌதம் கேட்கவில்லை. அவளும் எதுவும் சொல்லாமலேயே வந்து விட்டாள்.

மதியம் இரண்டு மணி வாக்கில் கீர்த்தனா வீட்டின் முன்பு போலீஸ் ஜீப் வந்து நின்று... அவளை அழைத்துக் கொண்டு போனது. ஏற்கனவே தேவியும் ஜீப்பில் அமர்ந்து இருந்தாள்.

அம்மாவும், பாட்டியும் வயிற்றில் அடித்துக் கொண்டு அழ... அப்பாவோ காரணம் புரியாமல் திண்டாடினார். அன்று அவருக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்த

தால் வீட்டில் இருந்தார். செய்வது அறியாது தவித்தவர்... உடனே உதவிக்கு கௌதமை அழைத்து விவரம் சொன்னார்.

"தம்பி.. என்ன செய்தாளோ தெரியலைப்பா! போலீஸ் வந்து... கீர்த்தனாவை கூட்டிட்டு போயிடிச்சி! எனக்கு பயமா இருக்குப்பா! கொஞ்சம் வந்து உதவ முடியுமா?"

"வரேன்.. வரேன் அங்கிள். எந்த ஸ்டேஷன்?" அவர் கூற... அவனும் கிளம்பினான்.

மஞ்சுவின் அப்பா... புகார் கொடுத்ததின் பேரில் கைது செய்து இருந்தனர். மஞ்சுவின் அப்பா, கிருபாகரனைப் பார்த்து கத்தினார்.

"ச்சே! பொண்ணாய்யா பெத்து வைத்திருக்கே! மாப்பிள்ளைப் பார்த்து... பத்திரிகை அடிச்சி... ஊரெல்லாம் கொடுத்தாச்சு... இந்த நேரத்தில்... அந்த பயலோட திருமணம் செய்து என் பெண்ணை... எங்கேத்தான் அனுப்பினாளோ தெரியல! எத்தனை அவமானம்? என்னால் இனி வெளியே தலை காட்ட முடியுமா? என் வயித்தெரிச்சல் உங்களை சும்மாவே விடாது!" சபித்தார்.

லாக்காப்பில்...

துணிச்சலான கீர்த்தனாகூட கலங்கி விட்டாள். தேவி ஒரு படி மேலேப் போய் தேம்பி தேம்பி அழுதுக் கொண்டிருந்தாள்.

'யாரோ? எப்படியோ போகட்டும்!' என்று இருந்துவிட கௌதமால் முடியவில்லை.

கௌதம் பரபரப்புடன் உள்ளே நுழைய கூடவே வக்கீல்கள் பட்டாளமே இருந்தது.



வாக்கப்பில் இருந்த கீர்த்தனா... இவனைக் கண்டதும்... தலை குனிந்துக் கொண்டாள்.

கௌதமின் இதயம்... அவளை அங்கே... அந்தக் கோலத்தில் கண்டதும்.. சுக்கு நூறாய் உடைந்து விட்டது. லேடி இன்ஸ்பெக்டர் அவனைக் கண்டதும் முகமலர்ந்து... "வாங்க ... வாங்க கௌதம் சார்!" என்று வரவேற்றாள்.

"கேஸ் எதுவும் பதிவு பண்ணலையே மேடம்."

"ம்ஹூம்..."

"நீங்கதான் கேஸ் கொடுத்ததா? வாங்க சார். என்ன பிரச்சினை? கீர்த்தனா, தேவி என்ன செய்தார்கள்? ம்?" என்று மஞ்சுவின் அப்பாவிடம் உரிமையாய் கேட்டு. அவர் தோளில் கைப்போட்டு தனியே அழைத்துப் போனான்.

"வெறும் பயலை காதலிச்சா... முடியாதுன்னுட்டேன்! அவளிடம் பேசி.. சம்மதிக்க வைத்து.. பத்திரிகை அடிச்சி ஊரெல்லாம் கொடுத்துட்ட பின்னாடி... இந்த ரெண்டு பெண்களும்.. அவளுக்கு திருட்டுக் கல்யாணம் பண்ணி வைத்து அனுப்பிட்டாங்க! அவர்கள் எங்கே இருக்காங்கன்னே தெரியல! எப்படி சார் இந்த அவமானத்தை தாங்குவேன்?"

"இனி மாற்றவா முடியும்? நடந்தது நடந்துப் போச்சு! பேசி தீர்த்துடலாம். அதுவும் இல்லாமல் மாப்பிள்ளையும் பெண்ணும் மேஜர்! ரெண்டு பேரும் திருமணம் செய்துக்க உரிமையிருக்கு! இயல்பாகவே கீர்த்தனா இளகிய மனசுக்காரி! ப்ரண்ட் கெஞ்சினான்னு உதவி செய்திருப்பாள். இவங்க மேல் கேஸ் பதிவு பண்ணாத போது ஏன் உள்ளே

வைத்தீர்கள்? ம்... இன்ஸ்பெக்டர் நான் உங்க மேல் கேஸ் போட்டு... கடுமையா நடந்துக்க... எனக்கும் முடியும். என்ன சொல்றீங்க?''

''இவர் தான் சார்... தன் பெண்ணை கடத்திப்போய் கல்யாணம் செய்து வைத்ததாய் கேஸ் கொடுத்தார். கிருபாகரன் சார்... உங்க பேரைச் சொன்னதால்தான் நான் கேஸே பதிவு பண்ணல.. இல்லேன்னா...''

''உங்க பேச்சை கேட்டுட்டு இருக்கற மூடுல நான் இல்லை முதல்ல அவங்களை வெளியே விடுங்க!''

இன்ஸ்பெக்டர் லேடி அவனுக்கு தூரத்து உறவு. அது தான் இந்த அதிகாரம்!

தேவியிடம் கேட்டான்.

''அவர்கள் எங்கே?''

''கன்னியாகுமரியில் உள்ள ப்ரண்ட் வீட்டுக்கு அனுப்பியுள்ளோம். ரெயில்ல போயிட்டு இருக்காங்க...''

''அவங்களை உடனே வரவழைக்கிறேன் சார். சதீஷுக்கு வேலையில்லையென்பதை தவிர குறை யிருக்கா?''

''வேற ஜாதி..!'' என்று இழுக்க...

''அதையெல்லாம் இனி பார்க்க முடியாது. நல்ல வேலை... நல்ல குடியிருப்பு... எல்லாவற்றிற்கும் நான் பொறுப்பு! குறித்த தேதியில் ஒரு மண்டபத்தில் சதீஷுக்கும் மஞ்சுவுக்கும் உங்க திருப்திக்காக ஒரு வரவேற்பை நடத்திடலாம்! போதுமா சார்?''

கௌதம் பிரச்சினையை சுமூகமாய் முடிக்க...



''நீங்க போய் வீட்ல சொல்லுங்க... ஆன்ட்டியும், பாட்டியும் பயந்துட்டே இருப்பாங்க. நான் பின்னாடியே கீர்த்தனாவை அழைத்துக் கொண்டு வந்து விடுகிறேன். சரியா அங்கிள்?''

கீர்த்தனா, அவனைப் பார்த்து பயந்துக் கொண்டே காரில் ஏறினாள்.

## 19

**கா**ர் சீரான வேகத்தில் சென்றது.

கௌதம் மட்டும் அங்கே வரவில்லையென்றால் எப்.ஐ.ஆர். போட்டு உள்ளே தள்ளி... கோர்ட் வரை செல்ல வேண்டி இருந்திருக்கும். தப்பித்தாள்.

கீர்த்தனாவிற்கு கௌதமைப் பார்க்கவே முடிய வில்லை. அவமானமாய் உணர்ந்தாள். கல்லாய் இறுகிப் போய் அமர்ந்திருந்தாள்.

கீர்த்தனா படிவாதக்காரி! இதில் அவமானம் வேறு பட்டிருக்கிறாள்! அவளாக பேசமாட்டாள் என்று அவனுக்கு தெரியும். அதனால் இவனே பேசினான்.

''உனக்கு ஏன்... இந்த வேண்டாத வேலையெல் லாம்?''

"என்ன அது வேண்டாத வேலை?"

"நடிக்கறியா? யாராருக்கோ ஹெல்ப் பண்ணி... வரக் கூடாத இடமான போலீஸ் ஸ்டேஷனுக்கெல்லாம் வரணுமா? உன்னை லாக்கப்ல பார்த்ததும் ஆடிப் போயிட்டேன்! எனக்கு உயிரே போனது போல இருந்தது கீர்த்தனா!" அவன் நிஜமான வருத்தத்தில் கூறினான்.

"அவங்க வேறு யாரோ அல்ல! என் பெஸ்ட் ப்ரண்ட். இதே நிலையில் வேற யாரோ ஒரு பெண் கேட்டிருந்தாலும்... இதைத்தான் செய்திருப்பேன்!"

"அப்படியா...? நானும் ஒரு பெண்ணை உயிருக்குயிராய் காதலிக்கிறேன்! அவளைத் தவிர வேறு யாரையும் திருமணம் செய்துக்க முடியாதுன்னு சொன்னாலும்... அவள் மாட்டேன்னு பிடிவாதம் செய்கிறாள். எனக்குக் கொஞ்சம் ஹெல்ப் பண்ணேன். அவள் பெயர் கீர்த்தனா!" என்று விளையாட்டாய் அவன் கூறி சிரிக்க... அவள் முறைத்துக் கொண்டே... அழகுக்காய் வைத்திருந்த பொம்மையை எடுத்து... அவன் மேல் வீசினாள்.

"உங்களை என்ன செய்யறதுன்னே தெரியலை!"

"சரி... சரி... அவ்ளுடைய பெற்றவர்களுக்கு எவ்வளவு அவமானம்? அதையெல்லாம் நினைத்துப் பார்த்தாயா?"

"இப்போ வருந்தி என்ன செய்யட்டும்? அவள் தன் காதலைச் சொல்லி... கெஞ்ச கெஞ்ச... கதறக்கதற... வேறு மாப்பிள்ளை பார்த்து... பேசி முடித்தார்கள்... அல்லவா? படட்டும்! அவமானப் படாமல் அன்றே நல்ல மாதிரியாய்... அவள் காதலை ஏற்றிருக்கலாம்!' சதீஷுக்கு வேலை கிடைத்ததும்... இவளுக்கு திருமணம் செய்து



வைத்திருக்கலாம். அவர்கள் அநியாயமாய் ஒரு வழியைத் தேர்ந்தெடுக்க... அதை விட அநியாயமாய் நாங்கள் ஒரு வழியைத் தேர்ந்தெடுத்தோம். இதில் தப்பு எங்கே இருந்து வந்தது?" ஆவேசமாய் கேட்டாள்.

"என்ன கீர்த்தனா இப்படி பேசறே? நீ பேசறது நியாயமா? தன் மகளுக்கு... எந்த மாதிரி மாப்பிள்ளை அமையணும்னு... பெற்றவர்களான அவர்களுக்கும் கனவு இருக்கும் இல்லையா?"

"மஞ்சுவுக்கும் அவள் வாழ்க்கையைப் பற்றிய கனவு, கற்பனைகள் இருக்கும் என்பதே... உங்களுக்கு நினைவில்லையா? அந்த கனவு பொசுங்கலாமா? சதீஷுக்கு என்ன குறைச்சல்? நல்ல படிப்பு... அழகு... அறிவிருக்கு. வேலையில்லை என்பதைத் தவிர!"

"ஒரு ஆணுக்கு வேலைதானே அழகு!"

"நான் இல்லைன்னு சொல்லல. ஆனால் வேலை தேடிட்டு தானே இருந்தார்!"

"நண்பனோட அறையில் தங்கி... நண்பனின் உதவியால்... வாழ்க்கையை ஓட்டிகிட்டு இருந்தவருக்கு... எந்தத் துணிச்சலில் திருமணம் முடிச்சி வச்சே? அவருக்கு வருமானமும் இல்லை! தங்கி குடித்தனம் நடத்த இடமில்லாமல்... கையில் காசில்லாம எப்படி வாழ்வார்கள்? இதையெல்லாம் எண்ணிப் பார்ப்பதே இல்லையா? இந்த அழகான மண்டையில் மூளையைத் தவிர... வேறு என்னதான் இருக்கு?"

அவன் கோபமாய் கூறினான்.

"மஞ்சு சம்பாதிக்கிறாள். தங்கிக்க என் மாடி வீட்டு ரூம்! அவளுக்கு ஹெல்ப் பண்ண நான் இருக்கும்போது கவலை எதற்கு? பணமானாலும்... பொருளானாலும்... அவருக்கும் வேலை கிடைக்கும் வரை என்னால் கொடுத்து உதவ முடியும்கிற நம்பிக்கையில் திருமணம் முடித்து வைத்தேன்."

"நீ எந்த சமாதானம் சொன்னாலும் தப்பு தப்புதான்! அவளுடைய பெற்றவர்களை அவமானப்பட வைத்தது பெரும் தவறுதான் என்பேன்!"

"நான் போய் பேசிப் பார்த்தேன். அவமானப் படுத்தி அனுப்பி விட்டார். இவ்வளவு வக்காலத்து வாங்கறீங்களே... காதலிச்சுட்டு... ஜோடிப் புறாவாய் திரிஞ்சிட்டு இருந்தவர்களைப் பிரிப்பது உங்களுக்குத் தப்பாத் தெரியலையா? ஏன் இப்படி அநியாயமா... அபாண்டமா பேசறீங்க?"

"ஐயோ... அம்மா! உன்னிடம் பேசி ஜெயிக்க முடியுமா? நான் தோல்வியை ஒத்துக் கொள்கிறேன். நீ செய்ததுதான் சரி தாயே!" கையெடுத்துக் கும்பிட்டான்.

"காரை பார்த்து ஓட்டுங்க! பின்ன என்ன சார்? நெஞ்சில் ஒருத்தனை சுமந்துட்டு... இன்னொருத்தனோட வாழ எந்த பெண்ணாலும் முடியாது! மஞ்சு மட்டும் இதற்கு விதிவிலக்காயிட முடியுமா?" அவள் வேகமாய் கூற...

"இது என்ன தத்துவம்? எனக்குத் தெரியலையே!" ஆச்சர்யம் காட்டி கேட்டான்.

"காதலிச்சு நெஞ்சுல ஒருத்தனை சுமந்துட்டு... அப்பாம்மா சொல்றாங்கன்னு இன்னொருவனை



கட்டிட்டு... அவனோடு படுக்கையைப் பகிர்ந்துக்கிறா பாருங்க... அவதான் வேசி!"

கௌதம் உதட்டைப் பிதுக்கி... நக்கலாய் புருவம் தூக்கி அவளைப் பார்க்க...

"அன்பே... ஆருயிரே... கண்ணே... மணியே... உயிரே... உயிர் மூச்சேன்னு உருகி உருகி வசனம் பேசிட்டு... என் அப்பாம்மா பேச்சை மீறி ஒன்றும் செய்ய முடியாதுன்னு சொல்லி... ஒரு ஆண் மகனை ஏமாற்றுபவள் சாக்கடைக்குச் சமம். அந்த சாக்கடையா ஆகச் சொல்றீங்களா என் மஞ்சுவை!"

"ஏய் கீர்த்தனா... கொஞ்சம் மூச்சு வாங்கி பேசும்மா! உனக்கு ஏதாவது ஒன்று ஆகிவிட்டால்... உன் அப்பாவுக்கு பதில் சொல்ல வேண்டியது நான் இல்லையா? ஆமாம்... இந்த தத்துவம் பெண்ணுக்கு மட்டும் தானா?"

"என்ன?" புரியாமல் கீர்த்தனா கேட்க...

"ஆணுக்கு உன் தத்துவம் சரிப்படாதா? உன்னை இந்த நெஞ்சு முழுக்க வச்சி... உருகிட்டு... வேற ஒருத்தியை கட்டிட்டு... அவளோட நான் வாழ்ந்தால்... அதுக்குப் பேர் என்ன?"

கௌதமை வேறு ஒருத்தியோடு கற்பனை செய்துப் பார்த்தவள்... தாங்க முடியாமல் கத்தினாள்.

"ஐயோ! ஏன் இப்படிப் பேசறீங்க?" கண்களில் நீர் எட்டிப் பார்த்தது.

"என்னோட... கற்பனையா கூட... இன்னொருத்தியை நினைச்சுப் பார்க்க முடியல இல்லையா கீர்த்தனா?" அவன் கேட்டான்.

"அதெல்லாம் இல்லை!" மறுத்தாள்.

"இதுக்கு பேர்தான் காதல்! உன் நெஞ்சைத் தொட்டு சொல்லு! ஏன் இப்படி என்னை கொல்றே? உன் இதயத்தில நான் இல்லைன்னு... என் தலையில் அடித்து சத்தியம் பண்ணு. அப்புறம் நம்பறேன்!"

கௌதம் கேட்க விக்கித்து... விதிர் விதிர்த்து... வாயடைத்துப் போய் விட்டாள் கீர்த்தனா!

## 20

கௌதம் சொன்னது போலவே சதீஷுக்கு நல்ல வேலையாய் போட்டுக் கொடுத்து... அருமையான தங்குமிடம் தந்து... அவனின் உபயோகத்திற்கு ஒரு பைக்கும் வழங்கி... தான் மஞ்சுவின் அப்பாவுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றி விட்டான்.

மஞ்சுவின் பெற்றவர்களுக்கு தாங்க முடியாத சந்தோஷம். தான் பார்த்த மாப்பிள்ளையோடு கூட மகள் இந்த அளவு சந்தோஷமாய் இருந்திருக்க மாட்டாளே! இந்த வசதியும், வாழ்க்கையும் ஏற்படுத்திக் கொடுத்த



கௌதமிடமும், கீர்த்தனா, தேவியிடமும் பகிரங்கமாய் மன்னிப்பும் கேட்டுக் கொண்டனர்.

ஒரு நல்ல நாளில்... சதீஷ், மஞ்சுவை அழைத்துச் சென்று... புது வீட்டில் பால் காய்ச்சி கொடுத்து விட்டு... நேரத்தில் கிளம்பியும்... ட்ராபிக் ஜாமில் மாட்டிக் கொண்டு... நேரம் கழித்து அலுவலகம் வந்து சேர்ந்தாள். அங்கு பணிபுரியும் அனைவர் முகமும்... என்றுமில்லாத சந்தோஷத்தில் தெரிந்தது... பிரமையா? அல்லது நிஜமா? என்று கீர்த்தனாவால் கண்டு கொள்ள முடியவில்லை.

"ஸாரி சார்... சொன்ன நேரத்தைவிட கொஞ்சம் லேட்டாயிடிச்சி!" என்று கூறிவிட்டு வேலையைப் பார்த்தாள்.

மதியம் லஞ்ச் சாப்பிடும்போது ஆபீஸ் தோழி கௌசல்யா கேட்டாள்.

"ஏய் கீர்த்தனா... பாஸ் விஷயம் சொன்னாரா?"

"என்ன?"

"என்னடி தெரியாதது போலக் கேட்கிறாய்? நடிக்கிறியா என்ன? இத்தனை நேரம் பாஸ் உன் கிட்ட சொல்லாமல் இருப்பாரா?"

"சொல்லலையே! என்ன விஷயம்? சொல்லித் தொலையேன்! ஏன் புதிர் போடறே?"

"பட்டு ஏற்றுமதியில் சிறந்து விளங்கியதால் 'சிறந்த பட்டு ஏற்றுமதியாளர் விருது' நம்ம பாஸுக்குக் கிடைத்திருப்பதாய் குடியரசு தலைவர் மாளிகையிலிருந்து கடிதம் வந்துள்ளது. இந்த நல்ல செய்தியை உன்னிடம்தான் முதலில் சொல்லுவார் என்று நினைத்தேன்."

கீர்த்தனாவிற்கும் பெரிய ஏமாற்றம்தான்! "நான் லேட்டாய் வந்ததால்... மறந்திருப்பாரடி கௌசி!" என்று மழுப்பினாள்.

உணவு செல்லவில்லை. அப்படியே மூடி வைத்து விட்டாள்.

எத்தனை நெஞ்சையள்ளும்... புதுமையான டிசைன் களை அவள் இரவு பகல் பாராமல் வரைந்து தந்து நெய்யச் சொல்லி இருப்பாள். ச்சே! என்ன மனிதன்? ஒவ்வொரு டிசைனையும் அந்த அளவு பாராட்டி விட்டு... இப்போது சொல்லவே இல்லையே! இந்த விருது கிடைக்க... அவளுடைய பங்கும் கொஞ்சம் இருக்கிறதல்லவா?

மதியத்திற்கு மேலும் சொல்லாமல்... வேலைக் கொடுத்துக் கொண்டே இருந்தானே தவிர... விருது கிடைத்த விஷயத்தைப் பற்றி மூச்சு விடவில்லை!

வேலை முடிந்து... ஐந்து மணிக்கு பையை எடுத்துக் கொண்டு கிளம்பும் போது கௌதம் அழைத்தான்.

"கீர்த்தனா..."

காதே கேளாதவள் போல செல்லவும்... ஒரு எட்டு வைத்து... அவள் முன்பு நின்று வழியை மறித்தான்.

"கீர்த்தனா... நான் அழைத்தது காதில் விழவில்லையா? என்னோடு கொஞ்சம் வெளியே வர முடியுமா? வீட்டுக்கு தகவல் கொடுத்து விடலாம். திரும்ப நானே அழைத்துப் போய் வீட்டில் விடுகிறேன்."

கீர்த்தனா தயங்கி நிற்க...



"என்னோடு வருவதற்கு விருப்பம் இருந்தால் வா. கஷ்டத்துடன் வர வேண்டாம்... நான் கட்டாயப்படுத் தவும் இல்லை" என்று அலட்சியமாய் அவன் கூறி னான்.

"சரி வருகிறேன்" என்று காரில் ஏறி உட்கார்ந்தாள். கார் போய் நின்ற இடம் ஸ்பின்னிங் மில் பின்புறம் இருந்த... அழகிய மலையடிவார பூங்கா.

இருள் சூழ இருந்த நேரம் என்பதால் கீர்த்தனாவிற்கு பயமாய் இருந்தது. அவளின் முக உணர்வை கண்டு... காவலாளியை செல்லில் அழைத்து... லைட்டைப் போட வும்... அவள் முகமும் பிரகாசமாவதை திருப்தியுடன் ரசித்து, புன்னகைத்து... கீர்த்தனாவைப் பிடித்து சிமெண்ட் பெஞ்சில் அமர வைத்து... அந்த கடிதத்தை அவளிடம் நீட்டினான்.

அவளுக்குக் கோபம்...! அதனால் அதனை வாங்காமல் வேறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"என் கீர்த்தனாவுக்கு கோபமா? என்னடா... காலையி லேயே சொல்லாமல்... வொர்க்கர்ஸிடமெல்லாம் சொல்லி விட்டு... இப்போது சொல்கிறானேன்னு நினைச்சிட்டியா? நானா சொல்லல! அந்த கடிதத்தைப் பிரிக்கும்போது மானேஜர் இருந்துட்டார். அவர் போய் எல்லோரிடமும் சொல்லி... உன் காதுலயும் விழுந்திடிச்சி! ப்ராமிஸ்! அங் கேயே சொல்லியிருப்பேன். ஆனால் பிடிக்கல. எனக்குப் பிடிச்ச பூங்காவுல... என் கண்ணம்மாவிடம் சொல் வதைத்தான் விரும்புகிறேன்! ம்... பிரிச்சி படி!" அவள் கையில் திணித்தான்.

'சிறந்த பட்டு ஏற்றுமதியாளர் விருது' தங்களுக்குக் கிடைத்துள்ளது... இந்த தேதியில் வரவும். வாழ்த்துக்கள் கூறியும் ஜனாதிபதி மாளிகையில் இருந்து கடிதம் வந்திருந்தது.

"கீர்த்தனா... இவ்வளவு நாள் கிடைக்காத இந்த விருது... இப்போ கிடைக்க நீதான் காரணம்! நீ சொன்ன ஐடியா... நீ வரைந்து கொடுத்த புதுப்புது டிசைன்கள்... இதுவரை யாருமே நெய்தேயிராத... புதுமையான... பாரம்பரிய மிக்க... கலை நுணுக்க வேலைப்பாடுகளுடன்... நம்மோட கைதேர்ந்த நெசவாளர்களால்... இதற்காகவே சிறப்பாக வடிவமைக்கப்பட்ட விசேஷ தறிகளில் நெய்யப்பட்ட... நெஞ்சையள்ளும் டிசைன்னாலும்... நம்ம பட்டுக்கு இங்கேயும் வெளிநாடுகளிலும் அமோக வரவேற்பு கிடைத்து... நம்ம ஏற்றுமதி அதிகமாகியது. இதற்காக இரவு பகல் பாராமல் உழைத்தவள் நீ! இந்த விருது கிடைக்கக் காரணம் நீ! எனவே இந்த விருது உனக்கு சமர்ப்பணம் கீர்த்தனா!" உணர்ச்சி வசப்பட்டு நன்றியோடு கூறினான்.

"நான்... நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன்! இதற்குக் காரணமாய் இருந்தவள் நீ! நீ எனக்கு வேண்டும் கீர்த்தனா! என்னோடு... என் வாழ்க்கை முழுமைக்கும் நீ வேண்டும் கண்ணம்மா! நீ என்னோடு என்னவளாய்... அருகில் இருந்தால்... இதைவிட இன்னும் பெரியதாய் என்னால் சாதிக்க முடியும் கீர்த்தனா! ப்ளீஸ்..." எழுந்து போய் அவளருகில் மண்டியிட்டு... இரு கைகளையும் பிடித்துக் கொண்டான்.

"உங்களுக்குக் கொஞ்சம்கூட அறிவில்லையா? எத்தனை முறை கேட்டாலும்... கெஞ்சினாலும் என் ஒரே



பதில் 'நோ' தான்! ஏன் என்னை டார்ச்சர் பண்றீங்க?" எரிச்சலுடன் கூறினாள்.

"என்னதான்டி சொல்ல வர்றே?" கௌதமுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"நான் கேட்டதை முதலில் செய்யுங்க... அப்புறம்... நானே உங்க காலடியில் விழுந்து கிடக்கறேன்."

"என்னடி பைத்தியக்காரத்தனம்! உன் பிடிவாதத்திற்கு அளவே இல்லையா? அறிவு கெட்டவளே! அங்கங்கே காதலுக்கும்... கல்யாணத்திற்கும் ஜாதி, மதம், பணம், அந்தஸ்து, பெற்றோர்கள்னு தடையாய் இருக்கும். ஆனால், இங்கே உன் வீணான பிடிவாதம் கொண்ட கொள்கை தடையா இருக்கே! எனக்கு எங்கே போய் முட்டிக்கிறதுன்னே தெரியலையே!"

"..........."

"என்றைக்கு உன்னைப் பார்த்தேனோ... அன்றையில 'இருந்தே என் கெட்டகாலம் ஆரம்பமாயிடிச்சி! நிம்மதி போச்சு! ஏன்டி இப்படி சித்ரவதைப்படுத்தறே? ஏன் இப்படி வேதனைப்படுத்தி... வேடிக்கை பார்க்கிறாய்? நான் அப்படி என்ன பாவம் பண்ணினேன்? உன் கண்ணில் பட்டதிலிருந்தே... உருக்குலைஞ்சி போயிட்டேனே! இங்கே... இங்கேயிருந்து சித்ரவதை படுத்தறியேடி!" நெஞ்சைத் தொட்டுக் காட்டினான்.

"உன்னிடம் இதுவரை எந்த அளவு கண்ணியமாய் பழகி இருக்கேன்னு தெரியும்! வெளியூர்.. வெளிநாடு தொழில் சம்பந்தமாய் செல்லும்போது... நீயும் வர வேண்

டும் என்று வற்புறுத்தியிருப்பேனா? என் பெற்றோரின் திருமண நாளன்று... என் செல்போனை பிடுங்க... என்னை கட்டிலில் தள்ளி... விழுந்து... புரண்டு பிடுங்கி... அதை உடைத்து தள்ளியது ஞாபகம் இருக்கா? நான் ஆண் பிள்ளை! நான் ஆசைப்பட்ட நீ... என் மேல் குப்புற விழுந்து புரளும்போது... என்னை கட்டுப்படுத்த எவ்வளவு கஷ்டப்பட்டேன்! தெரியுமா? அப்போதே கட்டியணைத்து... முத்தமிடத் தோன்றிய என் உணர்வுகளுக்கு அணைப்போட்டு... எவ்வளவு கண்ணியமாய் நடந்துக் கொண்டேன், நினைத்துப் பார் கீர்த்தனா!''

''.........''

''இங்கே பார் கீர்த்தனா! இங்கே யாருமே இல்லே! உன்னை இப்போ... இங்கே... என்ன வேண்டுமானாலும் என்னால் செய்ய முடியும்!'' அழுந்தக் கூறினான்.

''செய்துடுவீங்களா? என்ன சார் செய்வீங்க?'' அருகில் வந்து... அலட்சியமாய் கண்ணோடு கண் வைத்துக் கேட்டாள்.

''செய்யமாட்டேங்கிற திமிர்ல பேசறடி! ஏய் கீர்த்தனா... என் மனசுக்குப் பிடிச்சவளோட சம்மதம் இல்லாமல்... தொடக்கூடாதுன்னு நினைக்கிறேன்! இப்போ... இங்கே.... நினைச்சேன்னா... உன்னை கசக்கி முகர முடியும். அப்புறம், உன் தலைவிதி... என் காலடியில் விழுந்தே கிடக்கணும்!'' அவன் கூறிவிட்டு வேகமாய் சிரிக்கவும், திரியை தூண்டி விட்ட விளக்கு ஆங்காரமாய் எரிவது போல, ஆத்திரத்தில் கத்தினாள்.

''ஓகோ... சாருக்கு அப்படி ஒரு கீழ்த்தரமான எண்ணம் இருக்கா? என்னைக் கெடுத்துட்டா... காலடியில



விழுந்துடுவேன்னு நினைப்பா? அதான், தனியா யாருமே இல்லாத அத்துவான காட்டிற்கு... இந்த நேரத்தில் அழைத்து வந்தீர்களா?'' என்று அலட்சியமாய் நோக்கி... திமிராய் ஒரு பார்வை பார்க்க...

''ஏய்... இந்த.. இந்த திமிர்தான்டி இன்னும் உன் மேல ஆசை கொள்ள வைக்குது!'' என்றவன் கீர்த்தனாவை இழுத்து மூர்க்கமாய் அணைத்தான்: அவள் இதை எதிர் பார்க்கவில்லை. திணறினாள்... திமிறினாள்... தவித்தாள். அவள் திமிரத்... திமிர... அவன் இன்னும் வலுவாய் அணைத்தான்.

''இந்த கண்ணுதான்டி.. உன்கிட்டே என்னை விழ வைச்சது! வேகத்தைவிட விவேகம் பெட்டர் சார்னு சொன்ன இந்த அழகான உதடுதான்டி... உன்மேல மயங்க வைத்தது.'' சொன்னவன் கண்களில் மாறி மாறி முத்த மிட்டான்.

''நோ... நோ...'' என அலற... அவள் உதடுகளைக் கவ்விக் கொண்டான்.

ஆக்டோபஸிடம் மாட்டிக் கொண்டவளாய்... தத் தளித்து... அவனது வேகத்தைத் தாங்க முடியாமல் தொய்ந் துப்போக... மதியம் உண்ணாதது வேறு களைப்பை தரவும்... அல்லிக்கொடியாய் எதிர்ப்புக் காட்டாமல்... தளர்ந்தவளை விட்டான். உதடுகளில் ரத்தம் வடிய... சிமெண்ட் பெஞ்சில் தொய்ந்து விழுந்தாள்.

கீர்த்தனா முகத்தை மூடிக் கொண்டு அழ...

''போ... போயிடு... என் கண் முன்னாடி இருந்து... இனியும் சித்ரவதைப்படுத்தாதே! அப்புறம்... இங்கே

நடப்பதற்கெல்லாம் நான் பொறுப்பில்லே" என்று கௌதம் கூற...

கீர்த்தனா நிமிர்வாய் எழுந்து உதடுகளில் வடிந்த ரத்தத்தை துடைத்துக் கொண்டு பாதை வழியே நடந்தாள்.

# 21

கௌதம் தூக்கம் வராமல் கட்டிலில் புரண்டான். கௌதமிற்கு தன் மேலேயே ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. இப்படி ஒரு கீழ்த்தரமான செயலை தான்தான் செய்தேனா என அவனால் நம்ப முடியவில்லை! கீர்த்தனா கேவலமான... அற்பமான ஜந்துவைப் பார்ப்பது போல... ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சென்ற போது உயிரே போனது போல உணர்ந்தான்.

கண்களை மூடினாலும்... திறந்தாலும் கீர்த்தனாவின் பயந்த... மிரட்சியான முகமே கண் முன் நின்று கண்ணா மூச்சு ஆடியது. நெஞ்செல்லாம் அடைப்பது போல இருந்தபோது, அம்மா கதவைத் தட்டினாள்.

"கௌதம்... லைட் எரியுதே? இன்னும் தூங்கலையாப்பா" என்றாள்.

"தூங்கறேம்மா... தூங்கிடறேம்மா..." என்று கதவை திறக்காமலேயே குரல் கொடுத்தான்.



மறுநாள் ஆபீஸ் கிளம்பும் நேரத்திற்கு கிளம்பினாள் கீர்த்தனா. ஆனால், அவள் அங்கே செல்லாமல் ஐதராபாத் செல்லும் ரெயிலில் புறப்பட்டுக் கொண்டிருந்தாள்.

நேற்றைய நிகழ்ச்சியால் மிரண்டு... உடல்நிலை சரியில்லாமல்... லீவு போட்டு... வீட்டிலேயே கீர்த்தனா இருக்கிறாள் என்று கௌதம் நினைத்துக் கொண்டான்.

மாலை ஏழாகியும் கீர்த்தனா வீடு திரும்பாததால்... கிருபாகரன் அச்சம் கொண்டு... கௌதமிற்கு போன் செய்து கேட்க... "இன்று வரவில்லையே அங்கிள்" என்றான்.

"காலையில் ஆபீஸ் போவதாய் சொல்லி விட்டுப் போனவள்... இன்னும் வீடு திரும்பலையேப்பா..." கீர்த்தனாவின் தந்தை பயத்துடனும் பதற்றத்துடனும் பேச கௌதம் அச்சம் கொண்டான்.

"கவலைப்படாதீங்க... நான் வருகிறேன்" என்றவன் அவசரமாய் அங்கு வரவும் ஒரு லெட்டரை கொடுத்தார் கிருபாகரன். பாட்டியும், தாயும் மூலைக்கு ஒருவராய் நின்று அழ, கடிதத்தில் கண் பதித்தான்.

*அன்புள்ள அப்பாவிற்கு,*

*நான் போகிறேன்... என்னைத் தேட வேண்டாம்! என்றாவது ஒரு நாள் வருவேன்... வர முயற்சிக்கிறேன். உங்கள் அனைவரின் மீதும் கோபம் இல்லை. முக்கியமாய் கௌதம் சார் மீது எந்தவித வெறுப்போ கோபமோ கிடையாது. எனக்கு என் மீதுதான் கோபம்! வெறுப்பு! இதற்கு*

*தண்டனையாகத்தான் உங்களைப் பிரிந்து செல்கிறேன்.*

*ஈஸ்வருக்கான படிப்பிற்கு அவன் அக் கவுண்டில் பணம் போட்டிருக்கிறேன். அதனால் அவனைப் பற்றி கவலை வேண்டாம். உங்களை இதுவரை சேமிக்க விடாமல், அம்மாவின் அடிப் படை ஆசைகளைக்கூட நிறைவேற்ற முடி யாமல்... உங்களின் சம்பாத்தியத்தில் பெரும் பகுதியை வாங்கி விட்டேன். என்னை மன் னிப்பீர்களா? அடிக்கடி வம்பிழுத்துக் கொண்டு வந்து... அவமானத்தை தேடித்தருவேன். இனி இதிலிருந்து எல்லாம் விடுதலை! முக்கியமாக அம்மாவுக்குத்தான்! வருகிறேன் பாட்டி. கௌதம் சார் என்னை தேட வேண்டாம். தேடினால் விளைவு பயங்கரமாய் இருக்கும்!*

*அன்புடன்,*

*கீர்த்தனா.*

கடிதத்தைப் படித்த கௌதம் அப்படியே ஆடிப் போய் விட்டான். அவன் உடலிலிருந்த அனைத்து சக்திகளும் வடிந்து விட்டது போல இருந்தது. அவர்களின் முகத்தைப் பார்க்கவே கஷ்டமாக இருந்தது. அவர்களின் செல்ல மகள்... இப்படி அம்போவென்று அநாதையாய்... எங்கோ செல்ல நான் தான் காரணமென்றால்... என்ன செய்வார்கள்? கடவுளே... ஒரு நல்ல பெண்ணை பெற்றவர்களிடம் இருந்து பிரித்த பாவியாகி விட்டேனே!



''கவலைப்படாதீங்க. டி.வி. பத்திரிகையில படம் போட்டு... விளம்பரப்படுத்தி கண்டு பிடிச்சிடலாம்'' என்று கௌதம் கூற... கீர்த்தனாவின் அம்மா தான் அழுகையோடு கூறினாள்.

''வேண்டாம் தம்பி! அவள் கோபக்காரி! வீம்பா ஏதாவது தப்பான வழிக்குப் போயிடப் போகிறாள். அவ இப்போ எங்கே இருந்தாலும் உயிரோட இருப்பாங்கிற சந்தோஷமே போதும்பா. தேட வேண்டாம் தம்பி. உங்க ளைக் கெஞ்சிக் கேட்டுக்கிறேன். உங்களையும் விட அவளைப் பற்றி எங்களுக்குத்தான் தெரியும். சின்ன வயசுல இருந்தே பிடிவாதத்தோட வளர்ந்துட்டா. தேடுவ தற்கான சின்ன முயற்சி கூட செய்ய வேண்டாம். என் மகள் எங்காவது உயிரோட இருந்தாலே போதும்பா'' என்று கூறிவிட்டு குலுங்கிக் குலுங்கி அழ... இதயமே பிய்த்து தூரப் போன... உணர்வுடன் வீடு திரும்பினான்.

விஷயத்தைச் சொல்ல... விஜயலட்சுமியும், செல்வ மும் ஆடிப்போயினர்.

''என்னாலத்தாம்மா... எல்லாமே என்னால் தான். 'என் கண்ணுல ஏன் பட்டுத் தொலைத்தாய்? என் கண் முன்னாடி இருக்காதே! உன்னால்தான் என் நிம்மதியே போச்சு'ன்னு கோபமாகப் பேசிவிட்டேன். அவள் இந்த முடிவுக்கு வர நானேதாம்மா காரணம்! எப்பேர்ப்பட்ட புதையல் கீர்த்தனா! தொலைச்சிட்டேம்மா... நான் தொலைச்சிட்டேம்மா...!'' என்று புலம்பினான் கௌதம்.

''சரி... சரி... கவலைப்படாதே! எங்கேயும் போயிருக்க மாட்டா. அவ ப்ரண்ட், சொந்தக்காரங்க வீட்டில் எல்லாம் தேடிப் பார்க்கலாம். நீ ஏதாவது விபரீதமா கற்பனை

பண்ணிட்டு... உன் மனசைப் போட்டுக் குழப்பிக்காதே! இது போன்ற நேரத்துல கோழையாயிட்டா... அவளை எப்படி தேடி கண்டுபிடிக்கிறது?'' என்று அம்மா சமாதானப்படுத்தியும் அவன் சமாதானம் அடைய வில்லை.

இரண்டு வீடும் சேர்ந்து தேடிப் பார்த்தும் கீர்த்தனா கிடைக்கவில்லை.

கௌதம் ரொம்பவே நொந்து... சோர்ந்துப் போனான். குற்ற உணர்ச்சியில் குன்றிப் போனான். 'என்னுடைய கீழ்த்தரமான செயலாலும்... பேச்சாலும்... நடத்தை யாலும், எப்படிப்பட்ட தேவதையை சிறகை ஒடித்து... எங்கோ போகவும் காரணமாகி விட்டேனே!

'ஏய் கீர்த்தனா... எங்கேயடி ஓடி ஒளிந்தாய்? எங்கேயடி இருக்கிறாய்? உன் நினைவால்... என்னால் வேலையே செய்ய முடியவில்லையே! நீயில்லாமல் கையில்லாத சிறந்த ஓவியனாய் தவிக்கிறேனே! என் தவிப்பு உனக்கு தெரியுமாடி? என்னை நினைப்பாயா கீர்த்தனா? என்னை நினைக்கும்படியான காரியமா உனக்கு செய்தேன்! என்னை அப்படி வெறி கொள்ள வச்சது... உன் திமிரான பேச்சும்... என்னருகே வந்து சவால் விட்டதும் தானடி! இன்னும் இங்கே இருந்தால்... இந்த முரடன் கையில் அகப்பட்டு... சீரழிய வேண்டியிருக்குமோ என்று பயந்து போனாயா... என் கண்ணம்மா?' இவன் இவ்வாறு புலம்பிக் கொண்டிருக்க...

கீர்த்தனா ஐதராபாத்தில்... ஒரு மகளிர் விடுதியில் தங்கி... வேலை தேடி... ஒரு நல்ல வேலையும் கிடைத்து விட்டது.



ஏதோ ஒரு வேகத்தில் வந்து விட்டாளே தவிர... அவளாலும் முடியவில்லை. தன்னுடைய பெற்றோர் களையும்... கீர்த்தனா... கீர்த்தனா என்று ஆயிரம் முறைக்கு மேல் அழைத்து... தன்னை கேளாமல்... தன்னுடைய எண்ணத்தை தெரிந்து கொள்ளாமல்... எதுவுமே செய்யாத கௌதமை விட்டுவிட்டு வந்ததும் கூட கஷ்டமாக இருந்தது. எத்தனை பெரிய மனிதன்! என் அபிப்ராயம் கேட்டுத் தானே செய்வான். நான் இல்லாமல் எவ்வளவு திண்டாடுவானோ நினைத்தபோது வேதனையாக இருந்தது.

'எவ்வளவு கஷ்டப்பட்டு... எத்தனை நாளைய அயராத உழைப்பால்... அடிமேல் அடி வைத்து... உச்சியில் இருப்பவனிடம்... உன் சாம்ராஜ்யத்தை ஏழை எளி யோருக்கு பங்கிட்டுக் கொடுடா என்றால்... எவன் செய்வான்? அப்படிச் சொல்லவும்... கட்டாயப் படுத்தவும் எனக்கு என்ன தகுதியிருக்கிறது? கொள்கையாம் கொள்கை! தன்னை மணந்து கொள்ள போகிறவன்... எல்லோருக்கும் எடுத்துக் காட்டாய் இருக்க வேண்டும் என்று ஒரு எண்ணம்... பைத்தியக்காரத்தனம் தோன்றி யதே... ச்சே! இந்த கலியுக காலத்தில் அப்படி ஒரு தேவன் வரப் போவதில்லை! அப்படியே வந்தாலும்... அவனை தான் கட்டிக் கொள்ளப் போவதும் இல்லை!

ஆனால் கௌதமிற்கு மட்டும் தன்னை விட... நல்லப் பெண்ணாய் கண்ணில் பட்டு... மனம் மாறி... திருமணம் செய்து... அமோகமாய் வாழ வேண்டும்' என்று கடவுளை வேண்டிக் கொண்டு... கஷ்டப்பட்டு காலத்தைத் தள்ளி னாள்.

அவளின் அறைத்தோழி அமுதா தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண். இவளிடம் நல்ல ஒட்டுதலாய் இருந்தாள். அன்று வற்புறுத்தி டி.வி. ஹாலுக்கு அழைத்துச் சென்று விட்டாள். செய்தி ஓடிக் கொண்டிருக்க... அதில் ஆர்வம் இல்லாமல்... கையோடு கொண்டு போயிருந்த புத் தகத்தை விரித்துப் படித்துக் கொண்டிருந்தாள் கீர்த்தனா.

அமுதா கீர்த்தனாவின் தொடையில் தட்டி... "அங்கே பாருடி... உன் ஊராளாம்! பட்டு உற்பத்தியில் 'சிறந்த ஏற்றுமதியாளர் விருது' வாங்குவதை" என்று கூற...

எப்படி மறந்தாள்? அந்த தேதியை!

அழகே உருவான கௌதம்... உயிரோட்டமே இல் லாமல்... தளர்ந்த நடையில் சென்று... ஒப்புக்காய் சிரித்து... விருதினைப் பெற்றுக் கொண்டு வந்து அவனிடத்தில் அமரும்வரை காட்டவும்...

கீர்த்தனாவால் அதற்கு மேல் தாங்க முடியவில்லை. "தூக்கமா வருது... அறைக்கு போறேன்டி" என்று சொல்லி விட்டு வந்து... படுக்கையில் விழுந்து... கட்டுப்படுத்த முடியாமல் அழுதாள்.

இதுவே கீர்த்தனா அருகில் இருந்திருந்தால் எத்தனை மிடுக்காய்... புன்னகை தவழும் முகமுமாய் இருந்திருப் பான்! அவனின் வாடிய முகத்திற்கும்... சந்தோஷத்தை தொலைத்த உருவத்திற்கும் தானே காரணம் என்ற குற்ற குறுகுறுப்பில் கேவல் அதிகமானது. 'ஐயோ... ஒரு மாமனிதனை வீணடித்து விட்டு வந்து விட்டேனே!' கதறினாள்.



## 22

கௌதம் நடைபிணமானான். தொழிலிலும் நாட்ட மில்லை. வாழ்க்கையிலும் பிடிப்பில்லை. பெற்றோர்களுக் காக போலியாய் சிரித்தான்... பேசினான்... சாப்பிட்டான்.

மகிழ்ச்சியே இல்லாமல்... சந்தோஷத்தை தொலைத்து விட்டு... அப்படியொரு சொத்து வைத்திருக்க வேண் டுமா? இவ்வாறு அடிக்கடி சிந்திக்கலானான்.

அதுவுமில்லாமல் தொழிலில் நாட்டமில்லாமல்... இந்த இரண்டு மாதக் காலத்தில்... தொழிலும் ரொம்பவே சரிந்திருந்தது. இதே நிலை நீடிக்கக்கூடாது. அவ்வளவு தான். அப்புறம் இந்த சொத்து இல்லாமலும் போகலாம். இதையெல்லாம் கண்ட செல்வமும், விஜயலட்சுமியும் ஒரு முடிவுக்கு வந்தனர்.

ஒரு நாள் அலுவலகம் முடிந்து தளர்வாய் வந்த மகனிடம் "கொஞ்சம் பேச வேண்டும். உட்கார் கௌதம்!" என்றார் அப்பா. அவன் உட்கார அம்மாவும் வந்து அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

"கௌதம் நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கேன்... உன் எண்ணமும்... உனது முகத்தில் தெரிகிறது. உன் சந்தோஷத்தை விட... இந்த சொத்து முக்கியமல்ல! கீர்த்தனா உன்னை விட்டுப் போனதிலிருந்து கவனித்துக் கொண்டு தான் வருகிறேன். சரியா சாப்பிடாம...

இளைத்து... கறுத்து... களையிழந்து போயிட்டேடா! பழையபடி என் மகன் எங்களுக்கு வேணும்பா."

"..........."

நீ படிச்சி முடித்து வந்ததும்... ஒரு தொகையைக் கையில் கொடுத்தேன். அந்த தொகையை வைத்து இந்த அளவு உயர்ந்தாய்! இத்தனை உயர்வுக்கும் முதலில் நீ ஏற்படுத்திய கௌதம் கம்ப்யூட்டர்ஸேதான் காரணம்! உன்னால் முடியும்! நீ எவ்வளவோ சாதிப்பாய்! ஆனால், இனி கீர்த்தனா உன்னருகில் இருந்தால்தான் என்ற நிலை வந்து விட்டது. அவள் இல்லாமல் உன்னால், இனி எதுவுமே முடியாதுன்னு வந்த பிறகு... நாங்கள் சும்மா இருப்பது நல்லதல்ல கண்ணா.

கீர்த்தனா கேக்கறது படிக்காத அடிமட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் பேக்டரி, மில்லை தான் அவர்கள் பெயரில் எழுதி வைக்கச் சொல்லுகிறாள். தன்னை மணந்து கொள்ளப் போகும் ஆண் மகன் எல்லோருக்கும் எடுத்துக்காட்டாய் விளங்க வேண்டும் என்று நினைக்கிறாள். அவள் நினைப்பதில் தப்பு இருப்பதாய் தெரியவில்லைப்பா" அப்பா கூறி முடிக்க அம்மா தொடர்ந்தாள்.

"அதுவும் இந்த கலியுகத்தில் இப்படி ஒரு அபூர்வமான பெண்ணைப் பார்ப்பது அதிசயம். சொந்த மாமனார், மாமியார், நாத்தனார்களுக்கு செய்யும் போதே முகத்தை தூக்கி வைத்துக் கொள்ளும் பெண்களிலே... கீர்த்தனா பொக்கிஷம்பா. யார் என்றே தெரியாத மக்களிடம் எல்லாம் இரக்கம் காட்டும் அவள் பெண்ணே இல்லை. அதுக்கும்



மேலே தேவதை! அப்படி ஒரு தேவதை உன்னருகில் இருந்தால்... இந்த சொத்தென்ன நிறையவே சேர்ப்பாய்! சாதிப்பாய்! அதனால் அவள் விருப்பப்படி அவள் கேட்டுக் கொண்டது போல பேக்டரிகளை தொழிலாளர்கள் பேரில் எழுதி வைத்துவிடு. அதில் வரும் லாபங்கள் அத்தனையும் அவர்களுக்கே! அவர்களின் வியர்வைத் துளியால்... எத்தனை நாட்களுக்கு நம்மைப் போல சில பேரே முதலாளியாக இருப்பது. அவர்களும் முதலாளியாகட்டும்" என்றாள்.

"அவள் கேட்டுக் கொண்டது போலவே நல்ல குடியிருப்பு... ஒரு பெரிய கான்வென்ட் கட்டிக் கொடு. கௌதம்... உன்னைப் பார்த்து ஒருத்தர்... இரண்டு பேர் மாறி... இதுபோல் சமுதாயத்திற்கு நல்லது செய்தாலே... உனக்கும், உன் சேவைக்கும் கிடைத்த மகத்தான வெற்றி தானே! இதைச் செய்தால் கீர்த்தனா கட்டாயம் வருவாள். உன் நல்ல மனதிற்கு நிச்சயம் கடவுள் அழைத்து வந்து கண் முன் நிறுத்துவான்."

அப்பா சொல்லி முடிக்கவும்... அம்மாவின் மடியில் முகம் புதைத்துக் குலுங்கினான்.

"கிடைப்பாப்பா... நிச்சயம் உன்னைத் தேடி வருவாள். என்ன இது சின்னக் குழந்தையாட்டம்?" அம்மா முதுகில் ஆறுதலாய் தட்டினாள்.

"வக்கீலை கலந்து ஆலோசித்து, சீக்கிரமே இந்த வேலையை செய்து முடிப்பா" அப்பா கட்டளையாய் கூறினார்.

மறுநாளில் இருந்து மும்முரமாய் வேலை நடந்தது.

பேக்டரியில் வேலை செய்யும் வரை, அதில் வரும் லாபங்களுக்கும்... சொத்துக்கும் உரிமையுள்ளவர்களாக இருக்கலாம். பிறகு, ரிடையர்மெண்டிற்குப் பின் இறக்கும் வரை பென்ஷன் என்றும், அதன் நிர்வாகப் பொறுப்பு, பிரச்சினைக்கான தீர்வு, அத்தனைக்கும் முழு பொறுப்பு கௌதம்தான்! அந்த சொத்துக்கள் அவனுக்கு சொந்த மல்ல. ஆனால் 'பாதுகாவலன், வழிகாட்டுபவன்' என்று பத்திரங்கள் எழுதி முடித்து... பத்தாயிரத்துக்கும் மேற் பட்ட தொழிலாளர்களுக்கு... பத்திரத்தைக் கொடுக்க... அனைவரின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சி... பூரிப்பு... ஆனந்தம் அளவிட முடியாதது. அவனைவிட மூத்த வர்கள் கூட காலில் விழுந்து வணங்க போக... வேண் டாம் என்று தாங்கிப் பிடித்து அனுப்பினான். 'இத்தனைக் கும் காரணகர்த்தா... எங்கோ மறைந்து போன கீர்த்தனா' என்று விழாவில் பேசப்பட்டது.

"சின்னம்மா வந்துடுவாங்க ஐயா" என்று அனைவரும் கூறி பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள... கௌதம் கண் கலங்கினான்.

அவனுக்கு மிஞ்சியது, அவனுடைய கம்ப்யூட்டர்ஸ், கார்சேல்ஸ், பில்டர்ஸ் கம்பெனிகள் மட்டுமே. எத்தனைப் பரப்பு... எத்தனை கோடிக்கணக்கான சொத்துக்களை கீர்த்தனாவிற்காக விட்டுக் கொடுத்திருக்கிறான்.

இந்த செய்தி காட்டுத் தீயாய் பரவியது. ஜனாதிபதி... முதலமைச்சர்... தொண்டு நிறுவனங்கள்... மாதர் சங் கங்கள் என்று அனைவருமே அழைத்து வாழ்த்துச் சொல்ல... புகழ்ச்சியிலும்... மகிழ்ச்சிலும் திக்கு முக்காடிப் போனான்.



எல்லாவற்றையும் தூக்கிக் கொடுத்து விட்டால் ஒருத்தனும் மதியமாட்டான் என்ற தப்புக் கணக்கு உடைந்து... பாராட்டு மழையில் நனைய நனைய... இதற்கெல்லாம் காரணமானவளை உடனே பார்க்க வேண்டுமாய் இருந்தது.

அனைத்து பத்திரிகைகள் டி.வி. மீடியாக்களும் அவன் வீட்டின் முன்பு குவிந்து விட்டது.

## 23

கௌதம் கம்பீரமாய் அமர்ந்திருக்க.. அனைத்து மீடி யாக்களின் மைக்குகளும் மேஜையில் வீற்றிருக்க...

"இப்படி ஒரு எண்ணம் எப்படி வந்தது? பிச்சைக்கார னுக்கு ஒரு ரூபாய் பிச்சைப் போடவே தயங்கும் இந்தக் காலத்தில், இவ்வாறு செய்ய எப்படி மனம் வந்தது? இப்படி ஒரு தியாகம் செய்ய உங்களைத் தூண்டியது யார்?"

"இப்படிக் கேள்வி மேல் கேள்வி கேட்டால்... எதற் கென்று பதில் சொல்வது?" கன்னத்தில் குழிவிழ அழகாய் சிரித்தான்.

"ஓ.கே. சார்! இப்படி ஒரு எண்ணம் எவ்வாறு வந்தது?"

"எனக்கா வரலே!"

"பின்னே."

"இத்தனைக்கும் எண்ணங்களுக்கும் தியாகங்களுக்கும் ஒரு பெண் தான் காரணம்!"

"பெண்ணா? உங்க அம்மாவா சார்?" பத்திரிகையாளர்கள் கேட்க,

"அம்மான்னு பொய் சொல்ல விரும்பலே! என் கீர்த்தனா... நான் சந்தித்த முதல் வித்தியாசமானப் பெண்! அவளுடைய சேவை மனப்பான்மையை கண்டு பிரமித்துப் போனேன்! அனாதை, முதியோர் இல்லத்திற்கு நன்கொடை வசூலித்த விதம்... அனாதையாய் இல்லத்தில் விடப்பட்ட முதியோர்களை தத்தெடுத்தது... வசதியில்லாத மாணவர்களின் படிப்பிற்கு உதவியது... அவளுடைய ஒவ்வொரு நரம்பிலும் இந்த சமுதாயம் முன்னேற என்ன செய்யலாம்? என்ற எண்ணமே! அவளுடைய புதுப்புது டிசைன்ஸ், கலை நுணுக்கங்களால் என் பட்டு ஏற்றுமதி தழைத்து விருது கிடைத்தது."

"அவர்களை விரும்புகிறீர்களா?"

"யெஸ்! கண்ட நாள் முதல்!"

"சொன்னீங்களா?"

"சொன்னேன். மறுத்துட்டா... தன் கொள்கையை நிறைவேற்றினால் பண்ணிக்கிறேன்னு சொன்னாள். யாரும் மதிக்க மாட்டார்களே என்று மறுத்து விட்டேன்."

"மன்னிக்கணும் சார்! ஒரு சின்ன சந்தேகம்... நீங்கள் இருக்கப்பட்டவர் கொடுத்தீர்கள். இதுவே இல்லாத ஏழையை காதலித்து இருந்தால்?"



"அவன் வசதிக்கு தகுந்ததாய்ச் செய்யச் சொல்லியிருப்பாள்."

"அவங்களை பார்க்கணுமே! போட்டோவாவது காட்டறீங்களா? காட்டினால் நிச்சயம் வருவார்கள்!"

"வேண்டாம் சார். இந்த பேட்டியையே கண்டு வருவாள் என்ற நம்பிக்கை இருக்கிறது. கீர்த்தனா, நான் உனக்காகக் காத்திருக்கிறேன். நீ ஆசைப்பட்டது போலவே செய்துட்டேம்மா. வருவியா? ஓ.கே. சார் பேட்டியை முடிச்சிக்கலாம். எனக்கு நிறைய வேலையிருக்கு!" சொல்லி விட்டுக் கையெடுத்துக் கும்பிட்டான்.

"அவர்கள் உங்களோடு வந்து சேர வாழ்த்துக்கள்."

கௌதமின் தியாக உள்ளத்தைப் பாராட்டி... அத்தனை பத்திரிகை, செய்திகளிலும் சிறப்பு செய்தியாய், வர, உடல் நிலை சரியில்லாமல் படுத்திருந்த கீர்த்தனாவிடம் இச்செய்தியை கதை கதையாய் சொன்னாள் அமுதா.

அதற்கு மேல் அவளால் கௌதமைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. தேம்பி தேம்பி அழுதாள். "என் கௌதம்... என் கௌதம்... நான் போகணும்" அடம் பிடித்தாள்.

"உடம்பு சரியில்லையே இப்போ..."

"நான் போகணும்... கௌதமைப் பார்க்கணும்" அவள் புலம்பலைக் கண் கொண்டு பார்க்க முடியாமல் ப்ளைட்டில் ஏற்றி அனுப்பினாள். கோயம்புத்தூர் வரை வந்து... பின் சேலத்திற்கு டாக்ஸி பிடித்து வர... மறுநாள் காலை அவன் ஆபீஸ் செல்லும் நேரம் வந்து சேர்ந்தாள்.

அம்மா அப்பாவோடு ஹாலுக்கு வர...

''கௌதம்... கௌதம்!'' கத்திக் கொண்டே ஓடிப்போய் அவன் காலடியில் சரிந்தாள்.

கீர்த்தனாவை இவ்வளவு சீக்கிரமே பார்ப்போம் என்று நினைக்காத கௌதம்... மலைத்துப் போய்... செய்வது அறியாமல் நிற்க... அவள் கண்ணீர் காலை நனைத்த பிறகுதான்... சுயஉணர்வு பெற்றவனாய்...

''என் கண்ணே... கண்ணம்மா... கீர்த்தனா!'' என்று கூறிக் கொண்டே, தூக்கி அணைத்துக் கொண்டான். காணாமல் போன குழந்தையை திரும்பப் பார்த்த தாயின் மகிழ்ச்சி அவன் நெஞ்சில்!

''என் பெரிய சொத்தே நீதான்டாம்மா! உன்னை தொலைச்சிட்டு எவ்வளவு சித்ரவதைப்பட்டேன், தெரியுமா? நீ ஆசைப்பட்டது போலவே செய்துட்டேன்டா. என்னை மணந்து கொள்ள இப்போ சம்மதமா?''

''நீங்க கேக்கணுமா கௌதம்? ஆன்ட்டி, அங்கிள் என்னை ஆசீர்வாதம் பண்ணுங்கள்!'' என்று ஓடிப்போய் அவர்கள் காலில் விழுந்தாள்.

''நல்லா இரும்மா... நல்லாயிரு! கௌதம் இவள் ரொம்ப களைச்சி தெரியறாப்பா. உன் அறையில் கொண்டு போய் விடு. கொஞ்ச நேரம் ஓய்வெடுக்கட்டும். சூடா சாப்பாடு எடுத்து வரேன்!'' அம்மா சொல்லிச் செல்ல.. அப்பாவும் செல்லும் வரைப் பார்த்தவன், பின்...

''எவ்வளவு பெரிய தண்டனையைக் குடுத்திட்டே! அதுக்கு நான் உனக்கு தண்டனை தர வேண்டாம்?



ம்ம்...?'' அவளை அலாக்காக தூக்கி... மாடிக்குக் கொண்டு போய்... பொத்தென்று கட்டிலில் போட்டான். அவள் அவசரமாய் எழுந்து அமர... அவன் எதிரே உட்கார்ந்தான்.

''என் அழகான ராட்சசியே! என்னை இப்படி கலங்கடிச்சிட்டியே!'' அவள் ஜடையை பிரியமாய் இழுத்து ஆட்டினான்.

''என் அழகான ராட்சசா! இப்படி என்னை தவிக்க விட்டுட்டியே!'' அவன் மார்பில் செல்லமாய், கைகளால் குத்தினாள்.

''என் உள்ளம் கவர்ந்த கள்ளி!'' அவள் கன்னங்கள் இரண்டையும் பிடித்துக் கிள்ளினான்.

''என் உள்ளம் கவர்ந்த கள்ளா!'' சொல்லிவிட்டு, அவளும் அவனைப் போலவே செய்தாள்.

''கிஸ் மீ டி... கிஸ் மீ டீ!'' அவன் சிரித்தபடியே உதட்டை தொட்டுக் காட்டிக் கேட்க...

''ம்கூம்...'' என்று ஜிமிக்கிகள் ஆட சிணுங்கினாள். ''நான் மாட்டேம்பா! ம்ஹூம்.''

''உதைப்பட போறே! உன்னை என்ன செய்கிறேன் பார்'' என்று கட்டிலில் தள்ளி... அவளின் இருபுறமும் கைகளை ஊன்றி... அவன் கீழே குனிய...

''வேண்டாம்... வேண்டாம் கௌதம்!'' என்று கண்களை பயத்தில் மூட, நெற்றியில் முத்து முத்தாய் ஏ.ஸி.யிலும் வியர்த்து விட்டது. கீர்த்தனாவிற்கு.

''ஏய்... கீர்த்தனா... என்னைப் பார்! பயந்துட்டியா? ச்சும்மாடா! கல்யாணத்துக்கு முன்னாடி உன்னை

ஒண்ணும் செய்ய மாட்டேன். நான் நல்லவனாக்கும்!'' என்று அழகாய் கூறி சிரித்தவன் உதட்டில் அழுத்தமாய்... ஆனந்தமாய்... நேசமுடன் அழுந்த முத்தமிட்டாள் கீர்த்தனா.

எதிர்பாராமல் கிடைத்த... அந்த முத்தத்தின் தித்திப்பில் சொக்கிப் போனான் கௌதம்.

'உண்மைக் காதல் வென்றே தீரும்!'

கிளை நூலகம்